பக்கங்கள்-16 | 26.பங்குனி.2023 | விலை–50.00




# தினப்புயல்

PIN news
THINAPPUYAL
REGISTERED AS A NEWS PAPER AT THE DEP. of . N.A :- RBN/4/3/06




மலர்-01 Tel&Fax:- 0242227558, Hot line: 0713594443. Email:thinappuyal2014@gmail.com, www.thinappuyalnews.com இதழ் –408

## வட,கிழக்கில் புதிதாக நிர்மானிக்கப்பட்ட 25 பௌத்த சிலைகளையும் உடைத்து தரைமட்டமாக்க வேண்டும்

எல்லாளன் படை எச்சரிக்கை



## IMF இடமிருந்து இலங்கைக்கு 3 பில்லியன் அமெரிக்க டொலர் கடன் முதற் கட்டமாக 333 மில்லியனை பெற்றுக்கொண்ட ரணில்



## பொருளாதார நெருக்கடி வறுமையால் இலங்கையில் விற்கப்படும் விலைமாதுக்கள்



## இனி உலகை ஆட்டிப்படைக்கப்போகும் சர்வதிகாரிகளின் கூட்டம்

# வட,கிழக்கில் புதிதாக நிர்மானிக்கப்பட்ட 25 பௌத்த சிலைகளையும் உடைத்து தரைமட்டமாக்க வேண்டும்




**எல்லாளன் படையணி எச்சரிக்கை**

இன்றைய சமகால அரசியல் பார்வையிலே புதிய பௌத்த கோவில்கள் பல நிறுவப்பட்டுள்ளது தமிழர் தாயக பிரதேசத்திலே. கிளிநொச்சியிலும் யாழ்ப்பாணத்திலுமாக வடபகுதியில் மூன்று இடங்களிலே பௌத்த விகாரைகள் தமிழீழ விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டின் கீழ் இருந்திருக்கின்றது. அதை அவர்கள் ஒரு இனவாதமாக பார்க்கவில்லை அல்லது மதவாதமாக பார்க்கவில்லை பௌத்தர்கள் புத்தரை பாதுகாப்பாக பேணி அந்த இடங்களிலே விகாரைகள் அவ்வாறே இருந்தது அனைவரும் அறிந்த விடயமே. ஆனால் யுத்தத்தின் பின்னர் ஆயிரம் புத்தர் சிலைகளை வடகிழக்கில் அமைக்க வேண்டும் அல்லது தொல்பொருள் ஆராய்ச்சி என்ற பெயரிலே தமிழர் பிரதேசங்களை சுரண்ட வேண்டும் அங்கு பௌத்த எச்சங்களை போட்டு இது புராதன காலத்திலே யாழில் பௌத்தர்கள் வாழ்ந்தார்கள் என்ற ஒரு அடையாளத்தை கொடுக்கின்ற நோக்கிலே அவர்கள் இவ்வாறு செயற்பட்டுக் கொண்டிருக்கின்றார்கள்.

எனவே இவ்வாறான செயற்பாடுகளை உடனடியாக நிறுத்துவதற்கு தமிழ் அரசியல் தரப்புக்கள் களத்தில் இறங்க வேண்டும் வடகிழக்கிலே புதிதாக நிறுவப்பட்ட பௌத்த சிலைகளை உடைத்து தரைமட்டமாக்கக்கூடிய அளவிற்கு ஒரு தமிழ் சமூதாய படையணியை உருவாக்கி மதவாத திணிப்பிற்கு எதிரான அகிம்சை வழியிலான போராட்டம் ஒன்றை நிகழ்த்துவதற்கு தமிழ் தரப்புக்கள் தயாராக வேண்டும். அவ்வாறு இந்த தமிழ் தரப்புக்கள் தயாராகவில்லை என்றால் இந்த பௌத்த சிலைகள் தொடர்ந்தும் நிறுவப்படுமாக இருந்தால் மாற்று வழியிலான ஒரு மதத்திணிப்பு இனப்படுகொலை. எனவே இந்த மதத்திணிப்பானது இனப்படுகொலைக்கு ஒப்பான அடுத்தகட்ட நகர்வுகளை இந்த அரசாங்கம் செய்யப்போகின்றது என்பது தான் திரைமறைவிலே இடம்பெற்றுக்கொண்டிருக்கின்றது.

எனவே மாறி மாறி வந்த அரச தலைவர்கள் ஒவ்வொருவரும் சிறிமாவோ பண்டார நாயக்க காலப்பகுதியில் இருந்து இனவாத மதவாத அரசியலையே அவர்கள் தொடர்ந்தும் தமிழ் மக்கள் மீது விதைத்து வந்தார்கள். எனவே தொடர்ந்தும் வாழையடி வாழையாக இன்று ரணில் விக்ரமசிங்க நல்லாட்சி என்ற போர்வையிலே அவர் வந்தாலும் கூட இன்று அவரும் பௌத்த பேரினவாதத்தை தொடர்ந்தும் விதைத்துக்கொண்டிருக்கின்றார். இன்று குருந்தூர் மலை விவகாரத்திலே இரண்டு மூன்று வருடங்களிற்கு முன்னர் அங்கு அந்த கோவில் இருக்கவில்லை. சூளத்துடன் இருக்கும் ஒரு சிறிய கோவில் மட்டும் அங்கு வைத்து பூசை செய்யப்பட்டிருந்தது. அந்த சூளத்தை முறித்து எறிந்து இங்கு கோவில் இருக்ககூடாது என்றும் இது தொல்பொருள் ஆராய்ச்சிக்காக மட்டும் பயன்படுத்தப்பட வேண்டும் என்று சொல்லிவிட்டு அதாவது முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள நீதிமன்றத்தின் உத்தரவையும் மீறி அங்கு புத்த ஆலயம் ஒன்று நிறுவப்பட்டிருக்கின்றது. எனவே இதற்கு இங்கிருக்கக்கூடிய நூற்றுக்கணக்கான சைவ அமைப்புக்கள் அதாவது சைவ குருமார்கள் பெரியார்கள் அனைவரும் என்ன செய்கின்றார்கள். அறநெறியை போதிக்கின்ற தீவிர போக்குடைய சைவ அடியார்கள் அல்லது அந்த ஒருங்கமைப்பை சார்ந்தவர்கள் இந்த பௌத்த சிலைகளை நிறுவுவதற்கு ஏன் அனுமதியளித்திருக்கின்றார்கள். ஏன் அவர்கள் ஒரு போராட்ட களத்தில் குதிக்கக்கூடாது உண்ணாவிரதம் இருந்து அந்த புத்த சிலைகளையும் புத்த கோவில்களையும் ஏன் இவர்கள் உடைக்க கூடாது என இன்று மக்கள் மத்தியில் பரவலாக ஒரு கேள்வி எழும்புகின்றது. ஆனால் ஒரு மதவாதத்தை தூண்டுவதற்காக பல்வேறு வழிகளில் வந்து தூண்டிவிட்டு இவர்கள் செல்கின்றார்களே தவிர பௌத்தர்கள் இன்று மத ஆதிக்கத்தை இந்த மண்ணில் நடத்திக்கொண்டு இருப்பதற்கு இவர்கள் ஏன் உடந்தையாக இருக்கின்றார்கள் என்பது கூட தெரியவில்லை. ஏனென்றால் இன்று ஆதின குருக்கள் என்று கூறப்படும் பலர் இருக்கின்றார்கள் சிவசேனை என்ற ஒரு அமைப்பு இருக்கின்றது. சைவ சமயத்திற்கேற்ற சைவ சமய விழுமியங்களை பாதுகாக்கின்ற அமைப்பு எல்லாம் இன்று கைகட்டி கண் கட்டி மௌன விரதம் இருக்கின்ற ஒரு சூழல் இந்த நாட்டில் உருவாகி இருப்பது என்பது மிகவும் ஒரு சாபக்கேடான விடயமாகும். எனவே எமது திருத்தளங்கள் அதாவது தமிழ் மக்களது பாரம்பரியமான திருத்தலங்கள் அழிக்கப்பட்ட வரலாறு ஒருபுறமிருக்க மறுபுறத்திலே யாழ்ப்பாணம். மட்டக்களப்பு. திருகோணமலையிலும் அதுமட்டுமல்லாது வடகிழக்கிணைந்த தமிழர் தாயகம் மக்கள்கள் வாழுகின்ற அனைத்து இடங்களிலும் இவர்கள் பௌத்த விகாரைகளை நிறுவுவதன் ஊடாக இந்த நாடு பௌத்த நாடு அல்லது வடகிழக்கை ஒருபோதும் கொடுக்ககூடாது வடகிழக்கிணைந்த தமிழர் தாயகத்தை கொடுக்கக்கூடாது என்பதிலே அவர்கள் உறுதியாக இருப்பதற்காக இந்த நடவடிக்கைகளை செய்கின்றார்கள்.

உண்மையில் இன்று தமிழீழ விடுதலைப்புலிகள் இறுதி வரை இறுதி வீரன் இருக்கும் வரை அவர்களது போராட்டம் நடந்தது. எத்தனையோ போராளிகள் அதில் உயிர் தியாகம் செய்தார்கள். 50 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மாவீரர்கள் மற்றும் 1 இலட்சத்துக்கு மேற்பட்ட மக்கள் துணை குழுக்களாக செயற்பட்ட போராளிகள் பலரும் வீரச்சாவை தழுவினார்கள் இது எதற்காக? சிங்கள இன பேரினவாதிகளது நில ஆக்கிரமிப்பு மதத் திணிப்பு போன்றவற்றை இல்லாமல் செய்வதற்காகத்தான் இவர்கள் இந்த மண்ணிலே வீரத்துடன் போரிட்டு மடிந்தார்களே தவிர அவர்கள் நினைத்திருந்தால் ஆடம்பர வாழ்க்கையை வாழ்ந்திருக்கலாம். ஆனால் இன்று பாருங்கள் போராட்டத்தை காட்டிக்கொடுத்த ரெலோ.புளொட் ஈபிஆர்எல்எப்.ஈபிடீபி போன்ற கட்சிகள் கூட இன்று அரசாங்கத்திற்கு துணைபோனவர்களாக இருக்கின்றார்கள். இதனை தட்டிக்கேட்டு எப்படி இல்லாமல் செய்வது என்பது இவர்களுக்கு தெரியும் ஆனால் பயத்தின் நிமித்தம் அதனை அவர்கள் செய்வதற்கு தயங்கிக்கொண்டிருக்கின்றார்கள். என்பது தான் இன்றைய யதார்த்த பூர்வமான உண்மையாக இருக்கின்றது.

எனவே அரசியல்வாதிகள் இதனை கையாளவில்லை என்றால் அடுத்த கட்டமாக ஆன்மீகவாதிகள் இதனை கையாள வேண்டும். மன்னாரிலே கிறிஸ்தவம் சார்ந்த வேறு சமயத்தவர்கள் கூட அங்கு ஒரு ஆலயத்தை அமைப்பதாக இருந்தால் பல கத்தோலிக்க பாதிரியார்களிடம் அனுமதி வாங்கிய பின்னர் தான் இவற்றை அங்கு செய்ய வேண்டும். இன்று அத்துமீறி திருக்கேதீஸ்வர வளைவை உடைத்திருக்கின்றார்கள். திருகேதீஸ்வர வளைவு கட்டக்கூடாது என்று மும்முரமாக கத்தோலிக்க பாதிரியார்கள் செயற்படுகின்றார்கள். திருகேதீஸ்வரம் பாடல் பெற்ற தலம். அந்த இடத்திற்கு முன்னால் இந்த வளைவை கட்டக்கூடாது என்று சொல்வதற்கு இவர்களுக்கு எந்த தகுதியும் இல்லை. ஆனால் பிரசித்தி பெற்ற பாடல் தலமாக இருக்கின்ற திருகேதீஸ்வரம் இன்று கத்தோலிக்கர்களின் பிடியில் அது இருக்கின்றது என்பது கவலைக்குரிய விடயம். எனவே இங்கிருக்கின்ற சிவசேனையாக இருக்கலாம் அல்லது தமிழ் கலை கலாச்சார விழுமியங்களை பாதுகாக்கின்ற இந்து மக்கள் கட்சியாக இருக்கலாம் உண்மையில் இந்த பௌத்த பேரினவாதிகள் மத திணிப்பை இங்கு ஏற்படுத்துகின்றார்கள். நாவற்குழியில் அமைக்கப்பட்ட புத்தர் சிலையானது உண்மையிலே கவலைக்குரிய விடயம். ரயில்வேக்கு சொந்தமான காணியிலே ஒரு பௌத்த கோபுரத்தை அமைத்திருக்கின்றார்கள். இதைப் பார்க்கின்ற பொழுது பௌத்த விழுமியங்கள் அங்கு இருந்ததாக காட்டுவதற்காக தான் அவர்கள் அவ்வாறு செய்கின்றார்கள். இன்று புத்த பகவானது போதனைகளை மீறி இவர்கள் செயற்பட்டிருக்கின்றார்கள் பௌத்த பகவானுடைய போதனை மிக அருமையான போதனை ஆனால் இந்த போதனைக்கு எதிராக ஒரு எறும்பைக்கூட கொல்லக்கூடாது என புத்த பகவான் கூறினார் ஆனால் அதற்கு எதிர்மறையாக அவர்கள் எறும்பை மட்டுமல்ல அனைவரையுமே கொல்லுகின்ற இனப்படுகொலைகளாகவே தான் இவர்கள் இருந்து வருகின்றார்கள்.

எனவே ஒரு மாற்றத்தை கொண்டு வர வேண்டும் அந்த மாற்றத்திற்கான நடவடிக்கைகளை தீவிரமாக வடகிழக்கு இணைந்த தமிழர் தாயகத்தில் ஏற்படுத்தப்பட்ட வேண்டும் பௌத்த விகாரைகள் புதிதாக நிர்மானிக்கப்படுகின்ற இடங்களில் எமது தமிழ் புத்திஜீவிகள் இந்து பக்தர்கள் அங்கு சென்று பௌத்த சிலைகளை உடைத்து நிர்மூலமாக்குகின்ற பணிகளிலே இனியாவது களமிறங்காமல் விட்டால் இந்த 1000 புத்தர் சிலைகளும் அவர்கள் இன்னும் ஒரு வருடத்திற்குள் வட கிழக்கு இணைந்த தமிழர் தாயகத்திலே அமைத்து விடுவார்கள் அதன் பின் அவர்கள் சுற்றுலா பயணிகளிடமும் அனைவரிடமும் காட்டப்போகும் ஒரு விடயம் இது பிரசித்தி பெற்ற தலம் என்று கூறி இவர்கள் அவர்களது மகாவம்சத்தை திருத்தி எழுதியது போன்று இதற்கொரு வரலாற்றை பாடப்புத்தகங்களிலும் இந்த இடத்தில் பௌத்தம் இருந்தது என திணிக்கப்பட்டு தமிழர்களது வரலாறு மறைக்கப்பட்டு இவ்வாறான ஒரு செயல் திட்டத்தை செய்வதற்காகத்தான் இவர்கள் இவ்வாறான நடவடிக்கைகளை செய்துகொண்டிருக்கின்றார்கள்.

இன்று குருந்தூர் மலை கூட பாடப்புத்தகத்தில் அளவிற்கு நிலைமை மாற்றப்படப்போகின்றது. அதுபோன்று நீராவியடி பிள்ளையார் கோவிலடியிலும் பௌத்த சிலைகளை நிறுவி இராணுவத்தை அங்கு குவித்து இவ்வாறான ஒரு நடவடிக்கையை செய்தார்கள். இன்று ஊர்காவற்றுறையை பொறுத்தவரை அங்கு நேவியை குவித்து நேவியை வைத்துக்கொண்டு அங்கு பௌத்த சிலைகளை நிறுவுகின்றார்கள். எனவே கரையோரப்பகுதி எல்லாவற்றிலும் இவர்கள் பௌத்த சிலைகளை நிறுவி கரையோரம் எங்கும் புத்தர் வாழ்ந்தார். இவரது வரலாறு இருக்கின்றது என்பதனை கூற இவர்கள் முற்படுகின்றார்கள். எனவே குறிப்பாக அனைத்து இடங்களிலும் அத்துமீறி வைக்கப்பட்டு இருக்கின்ற பௌத்த சிலைகளை அடித்து நொருக்குவதற்கு இந்து மக்கள் கட்சி அல்லது சிவசேனை என்று சொல்லப்படுகின்ற இந்து எல்லைக் காவலர்கள் அனைவரும் அதற்கான ஒரு முன்னெடுப்பை எடுத்தால் மட்டுமே இந்த மதத்திணிப்பில் இருந்து நாம் பாதுகாத்துக்கொள்ளமுடியும். மதத்திணிப்பு என்பது இனப்படுகொலைக்கு ஒப்பானது ஒன்று எனவே இந்த மதத்திணிப்பை ஏற்படுத்தி மற்றுமொரு இனப்படுகொலைக்கான அடுத்த அடி அத்திவாரத்தை கூட இவர்கள் போட்டுக்கொண்டிருக்கின்றார்கள்.

எனவே இன்றைய சமகால அரசியல் பார்வையிலே இன்று இந்த நாடு ஒரு வங்குரோத்து நிலையை அடைந்திருக்கும் நிலையில் இன்று சர்வதேச நாணய நிதியத்திடமிருந்து பணத்தை பெற்றுக்கொண்டு அவர்கள் இருக்கின்ற கடன்களையும் அடைத்துக்கொண்டு அவர்கள் இன்னும் இந்த நாட்டை ஒரு பௌத்த நாடாக மாற்றுவதற்கான நடவடிக்கைகளை இவர்கள் எடுத்துக்கொண்டிருக்கின்றார்கள். எனவே இதனை அடியோடு நாம் இல்லாது ஒழிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

தினப்புயல்,
ஆசிரியர் பீடம்,
இல:154, 6வது ஒழுங்கை,
தேக்கவத்தை,
வவுனியா.

## பொருளாதார நெருக்கடியும், IMFஇன் கடன் உதவியும்

கடந்த கால ஆட்சியாளர்களின் செயற்பாடுகள். கொவிட் தொற்றுப் பரவல். அரசியலில் ஏற்பட்ட ஸ்திரத்தன்மை என்பன இலங்கையின் பொருளாதார வீழ்ச்சியில் பெரும் பங்கு வகிக்கின்ற காரணிகளாகும். இவ் நெருக்கடிச் சூழலில் நாட்டின் ஜனாதிபதியாக பொறுப்பேற்ற ரணில் விக்கிரமசிங்க அவர்கள். இலங்கை மீளவேண்டுமாயின் சர்வதேச நாணய நிதியத்தின் கடன் உதவி தான் ஒரே தீர்வு என்பதை வலியுறுத்தி. பலகட்டப் பேச்சுக்களையும் நடாத்தி. இன்று சர்வதேச நாணய நிதியத்தின் கடனில் முதல்கட்டப் பணம் இலங்கைக்குக் கிடைத்திருப்பதாக உத்தியோகபூர்வத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

நாட்டில் அத்தியாவசியப் பொருட்களுக்கான விலைகள் அதிகரித்திருந்தபோதிலும். தற்போது விலைகளில் சிறியளவில் மாற்றங்கள் ஏற்பட்டு வருவதைக் காணமுடிகிறது. எரிபொருட்களின் விலைகளில் மாற்றங்கள் பெரிதாக ஏற்படவில்லை. டொலரின் பெறுமதியிலும் மாற்றங்கள் ஏற்பட்டு. இலங்கையின் ரூபாவின் பெறுமதியும் வலுப்பெற்று வருகிறது.

மறுபக்கத்தில். எதிர்க்கட்சிகள் அறிவிக்கப்பட்டு ஒத்திவைக்கப்பட்டுள்ள உள்ளூராட்சி மன்றங்களுக்கானத் தேர்தலை நடத்தியே ஆகவேண்டும் எனவும். நீண்ட காலமாக பிற்போடப்பட்டுள்ள மாகாண சபைகளுக்கானத் தேர்தலையும் நடத்தவேண்டும் எனவும் கடுமையாக அரசிடம் வலியுறுத்தி வருகின்றனர். நாட்டில் தொழிற்சங்கப் போராட்டங்களும் அவ்வப்போது பூதாகரமாக வெடித்து வருகிறது. பல்கலைக்கழக மாணவர்களின் ஆர்ப்பாட்டங்களும் இதற்குள் அடங்கும். போராட்டங்களின் போது பொலிசாரின் அத்துமீறல்களும் தொடர்கின்றது.

இலங்கையினது தற்போதைய நெருக்கடிச் சூழலில் தேர்தல் ஒன்றிற்குச் செல்வதை விடுத்து. நாட்டினை பொருளாதார ரீதியாக வளப்படுத்துவதே தனது நோக்கம் என்பதனை வெளிப்படையாகவே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அவர்கள் கூறியிருக்கிறார். வரவுசெலவுத் திட்டத்தில் தேர்தலுக்கென ஒதுக்கப்பட்டுள்ள நிதி. தற்போது அரசிடம் இல்லை என்பதை பாராளுமன்றிலும். நீதிமன்றிலும் தெளிவாக அறிவித்துள்ளது அரசு.

தேர்தல்கள் ஆணைக்குழு அரசின் நிலைப்பாடு தொடர்பில் அடுத்தகட்ட முடிவுகளை எடுப்பதற்கு பெரும் சிரமங்களை எதிர்கொள்வதை அவதானிக்க முடிகிறது. அரசியற் கட்சிகளின் பிரதிநிதிகளுடன் பேச்சுக்களை நடாத்துகின்றபோதிலும் தீர்மானங்களை சரியாக எடுக்க முடியாத நிலை தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு இருக்கின்றது.

இதேவேளை. இலங்கை கோரிய கடனில் முதல் கட்ட பணத்தினை வழங்கியுள்ள சர்வதேச நாணய நிதியம் இலங்கைக்கு கடுமையான நிபந்தனைகளை விதித்துள்ளதாகவும். எதிர்வரும் ஏப்ரலில் அறிக்கையினை சமர்ப்பிக்குமாறு வலியுறுத்தியுள்ளதாகவும் தெரிகிறது.

ஆட்சிக்கு வரும் ஒவ்வொரு அரசும் கடன்களைப் பெற்று சுமைகளை மக்கள் மீது ஏற்றிவிட்டு தாம் தப்பித்துக்கொள்வதையே வழக்கமாக்கிக் கொண்டுள்ள இலங்கையில். நிலையான அபிவிருத்திக் கொள்கைகள் அரசுகளால் கடைபிடிக்கப்படுவதில்லை. கடந்தகால அரசுகள் செய்த தவறே அது தான். இறக்குமதிக்கு கொடுத்த முக்கியத்துவத்தை உற்பத்திக்குக் கொடுத்திருந்தால் நாடு இன்று வங்குரோத்து அடைந்திருக்காது. நாம் மீண்டும் மீண்டும் சர்வதேச நாடுகளிடமும். அமைப்புக்களிடமும் கடன்களைக் கோரி நிற்கவேண்டிய துர்ப்பாக்கிய நிலை தோன்றியிருக்காது.

அதுபோல் தான் இன்றைய அரச கொள்கைகள் அனைத்தும் அடுத்துவரப்போகும் ஜனாதிபதித் தேர்தலின் பின்னர் ஆட்சிக்கு வரும் தரப்பால் கடைபிடிக்கப்படுமா?. அரச மற்றும் வெளிநாட்டுக் கொள்கைகளில் ஏற்படும் மாற்றங்கள் மீண்டும் மக்களின் மீதே கடன் சுமையை ஏற்றும். இந்நாட்டிற்கு முதலீட்டாளர்கள் வரவேண்டும். சுற்றுலாத்துறை ஊக்குவிக்கப்படவேண்டும். உள்ளூர் உற்பத்திகள். ஏற்றுமதிகள் அதிகரிக்கப்படவேண்டும். வீணான செலவுகள் கட்டுப்படுத்தப்படவேண்டும். இனங்களுக்கிடையிலான ஒற்றுமை பலப்படுத்தப்பட வேண்டும். இவையெல்லாம் இந்நாட்டில் சரிவர நடைபெறவேண்டுமெனில் நீண்டகாலமாக தீர்க்கப்படாத இனப்பிரச்சினைக்கானத் தீர்வும். பௌத்த மேலாதிக்க சிந்தனையிலும் மாற்றங்கள் வரவேண்டும். அப்போதுதான் இந்த நாடு வளம்பெறும்.



பல்துறை எழுத்தாளர்
புயல் பெ.ஸ்ரீகந்தநேஷன்



09

## கல்லறைப் பூக்கள்

"இல்லையடா தம்பி"

"அப்ப ஏன் அப்பா கவலையாக இருக்கிங்க?"

மாலதியின் சோகக் கதையைச் சொல்லி, இருக்கிற துன்பத்துக்கு மேல் துன்பத்தை மகனுக்கு ஏற்ற விரும்பாத கனகர். 'எங்கயும் ஒரு பள்ளிக்கூடத்தில் இருப்பாள்.' - கூறி கதையைத் திசைத் திருப்ப விழைந்தார்.

"தம்பி சாத் நீயும் ஒரு மாதமா பள்ளிக்கூடத்திற்குப் போகவில்லை போக வேண்டும்."

"ஓம் அப்பா இண்டைக்கு இரண்டு அக்காமார்கள் வந்து பள்ளிக்கூடத்திற்குப் போகாத பிள்ளைகளிண்ட பேர் எடுத்துக்கொண்டு போனாங்கள். நானும் என்ர பேரும் தங்கச்சிண்ட பேரும் கொடுத்தனான்"

"கொப்பிகள் வாங்கணும்"

"கொப்பி ஒன்றும் வாங்க வேண்டாமாம். எல்லாம் பின்னேர பள்ளிக் கூடத்தில் தருவாங்கள் என்று சொல்லிட்டு போணாங்க."

"தங்கச்சி இப்பத்தான் முதலாம் ஆண்டின் ஆரம்பம் என்று பதிஞ்சியா?"

"ஆம்"

"சாத், நான் கொண்டு வந்த கையையில் 'பேங் புக்' இருக்கும் எடுத்து வை. நாளைக்கு அப்பிடியே மாங்குளத்துக்கு போகேக்க, நேற்று இஞ்ச தந்த வெள்ளைத் துணியில் உனக்கு சேட்டும் தங்கச்சிக்கு சட்டையும் தைக்க வேண்டும். அந்த காலத்தில் புத்தகத்தில் புள்ளைகளுக்கு படிப்பு செலவுக்குத் தேவை வரும் என்று உங்க அம்மா கொஞ்சம் கொஞ்சமா சொத்து ஒரு லட்சம் அளவில் போட்டு வச்சதால், இப்ப பயன்படுது. அம்மா அடிக்கடி அம்மா சொல்லுவா, 'சேமிப்பு சோககாலத்தின் சோறு' என்று'

"அப்பா, அம்மா பாவம் எப்படி, எங்க இருக்கோ, சாப்பிட்டாங்களோ தெரியாது?" - சாத் கூறியவாறு, கண்கள் இரண்டும் இரண்டு பொய்கைகள் நிரம்பி வழிவதைப் போல கண்ணீர்ப் பூக்கள் நிலத்தில் முத்து முத்தாக விழ தந்தையைக் கட்டியணைத்தான்.

"சாத் கவலைப்படாதை அம்மா எப்படியும் வருவா?"

"நீ இப்படித்தான் அப்பா ஒவ்வொரு நாளும் வெளியால் போயிட்டு வந்து சொல்லுறாய். இன்னமும் வரவில்லை."

"சாத் நீ இப்படி அழுதா, உன்னைப் பார்த்து, தங்கச்சியும் மனம் ஒடிஞ்சுப் போச்சினா பாவம் சின்ன தங்கச்சி. நீ தையிரியமாக இருந்து. வார கிழமையில் இருந்து இரண்டு பேரும் பள்ளிக்கூடத்திற்கு போங்கள். அம்மாவின் ஆசைப்படி நீ டொக்கராகவும் தங்கச்சி டிச்சராகவும் வறணும். அம்மா எப்படியும் வருவா?" என்று கூறி தன்னைச் சுவாகரித்துக் கொண்டான். கணினியின் ஹாட் டிஸ்கில் சுமை கூடியதும் கணினியின் வேகம் குறைவது மாதிரி அவரின் பேச்சில் தொய்வு தெரிந்தது,

கச்சானுடன் போராட்டத்தை முடித்த கமலி அப்பாவும் அண்ணாவும் கண்ணீரும் கம்பலையுமாக ஒருவரை ஒருவர் கட்டியணைத்துக் கொண்டு நின்றதைக் கண்டு விட்டாள். கூப்பிடு தூரத்தில் நின்ற அவள் அருகில் ஓடிவந்தாள். இருவரும் கண்களைத் துடைத்துக் கொண்டார்கள்.

"ஏன் அப்பா ரெண்டு பேரும் அழுகிறீங்க?" - தந்தையின் கரங்களைப்பிடித்து இழுத்துக்கொண்டு கேட்டாள்.

"பிஞ்சு உள்ளத்திற்கு வேதனையைக் கொடுக்கக் கூடாது" - மனத்திற்குள் எண்ணிய கனகர்.

"அப்பாவுக்கு கண்ணுக்குள்ள தூசு விழுந்திட்டுது. அதுதான், அண்ணா ஊதிவிட்டான்"

"அப்பா பசிக்குது தேத்தணி ஊத்தித்தா. வா போவம்." - மகள் ஒற்றைக்காலில் நிற்க. வெளி மைதானத்தில் நின்ற கனகரும் கமலியும் தங்களின் இருப்பிடமான மண்டபத்தை நோக்கி நடந்தார்கள். சாத் ஒரு கையில் கச்சான் பையுடனும் மற்றைய கையில் விஞ்ஞானப் புத்தகத்துடனும் மைதானத்தின் கிழக்குப் பக்கத்தில் உள்ள வேப்பம் மர நிழலைத் தேடிச் சென்றான். அங்கு கீழே கிடந்த மரக்குற்றியில் அமர்ந்தான். விஞ்ஞான புத்தகத்தில் நான்காம் பக்கத்தில் 'தொற்று நோய்களும் தடுக்கும் முறைகளும்' என்னும் பெரிய தலைப்பின் கீழ் 'அம்மை நோய்' என்ற உப தலைப்பின் மீது தனது கண்களைப் படர விட்டான் தொண்ணூறு வயது அப்பம்மா, தனக்கு எட்டு வயது இருக்கும் போது, தொற்று நோய்கள் பற்றி கூறிய கதைகள் அவன் விழிகள் முன் தோன்றி மறைந்தன. அன்று ஓர் இரவு பௌர்ணமி என்பதால், முற்றத்தில் நுளம்பு நடந்து வந்தாலும் தெரியும் போல நிலவு குளிர்க்கதிர்களைப் பரப்பியது. பக்கத்துத் தோட்டத்தில் வாழைக்குலைகள் பழுத்து தொங்கின. அவற்றைச் சுற்றி வௌவால்கள் வட்டமிட்டன. வாழைமொத்திகளில் தேனீக்கள் வட்டமிட்டன. முற்றத்தில் சடைத்து ஓங்கி உயர்ந்து நிற்கும் வேப்பம் மரத்தில் பழுத்த பழங்கள் ஒவ்வொன்றாக நிலத்தில் விழுந்தன. மரத்தின் கீழ் நிலத்தில் விரிக்கப்பட்ட படங்கில் வேப்பம் பூக்கள் குவியல் குவியலாக உதிர்ந்தன. சாத்தின், பாட்டி நிலத்தில் அமர்ந்தவாறு அவற்றைப் பொறுக்கி கடகத்தில் போட்டாள். ஓரத்தில் வேப்பஞ்சட்டியில் இருந்து வெளிவரும் புகை திங்களைப் போலும் அழகிய வதனம் கொண்ட பெண்கள் நடன நளினம் புரிந்து வருவதைப் போல, கூட்டம் கூட்டமாக ஆடி அசைந்து இனம் இனத்தைத் தேடுவது போல, வானத்தில் கோடான கோடி தங்க முத்துக்கள் மத்தியில் தங்கத் தட்டாக திகழும் உண்மையான திங்களைக் கட்டியணைக்க ஓடின. சூழலில் இதமாக குளிர் காற்று அவர்களின் மேனியில் ஸ்பரிசம் பட்டதும் காற்று தூய்மையாகின்றது. கம்பீரமாக வளர்ந்து நிற்கும் பனைகளில் கட்டப்பட்ட கள் முட்டிகளில் உள்ளே கள்ளைச் சுவைத்த தேனீக்களின் ரீங்கார சப்தம் அங்கு கூடுகளில் தூங்கும் தூக்கணாங்குருவிகளின் காதுகளில் 'கணீர்...கணீர்...' என்று ஒலித்தமையால், இடையிடையே எழுந்து பறந்தன. தாழ்வானத்தில் மழைக்குருவி அங்குமிங்கும் பறந்து திரிந்தன. அருகில் பட்டியில் கட்டப்பட் பசுக்கள் இரை மீட்கும் சப்தத்தைக் கேட்ட, தவளைகளின் அடிவாயின் அடிப்பகுதிகள் துடிப்பது சிறிது நின்று அமைதிகாகக்கின்றன. மதில் மீது படர்ந்த தூதுவளைக் கொடியில் பூத்த பூக்களின் நீல நிறமும் மஞ்சள் நிறமும் சேர்ந்து மின்மினிப்பூச்சிப் போல காட்சியளித்தன. மதிலின் வெளிப்பக்கத்தில் புழுதி படிந்த சில நித்திய கல்யாணி பூக்கள் பொலிவிழந்து வீதியால் செல்லும் மக்களுக்கு ஏதோ சொல்ல துடிப்பதைப் போல, நிறங்கள் மாறி காட்சியளித்தன. சுடுகாட்டுப் பூக்கள் - பெயரில். தூரத்தே விளக்கின் ஒளியில் விடில் பூச்சி பிடித்து விளையாடிக் கொண்டிருந்த சாத் ஓடி வந்து அப்பம்மாவின் மடியில் அமர்ந்தான்.

"அப்பம்மா இண்டைக்கு எனக்குக் கதை சொல்லுங்க"

"என்ன கதை சொல்லுறது?"

"ஏதாவது கதை?"

"பாட்டி வடை சுட்ட கதை சொல்லட்ட" - கூறிவிட்டு தனது பொக்கை வாயைத் திறந்து, இடது கையினால் வெற்றிலை உருண்டையைத் திணித்தாள்.

"அப்பம்மா நீங்களும் அப்பாவும் அம்மாவும் டீச்சரும் இந்த கதையத்தான் திரும்பத் திருப்ப ஒவ்வொரு மாதிரி எத்தனைத் தரம் சொல்லித் தந்திருப்பிங்க. எனக்கும் கேட்டு கேட்டு காதில இரத்தம் வருது. அறிவியலுடன் தொடர்பான கதையா சொல்லேன்?"

"அது என்னடா அறிஞ்சது, அறியாதது?"

"அறிஞ்சதும், அறியாதும் இல்ல விஞ்ஞானம்"

"ஏதோ எனக்கு விஞ்சானம் மஞ்சானமும் தெரியாது. அம்ம நோய்ப் பற்றி சொல்லட்டா?"

"ஓம் சொல்லு... ஓம் சொல்லு.... கேட்பம்"

"எனக்கு சின்ன வயசு இருக்கும் உலகம் எங்கும் அம்ம நோய் பரவியது. ஊர் மக்கள் எல்லோரும் அம்மன் இறங்கி விட்டார் என்று யாரும் வெளியில் போவதில்லை. வெப்பக் காலத்தில் பரவும் இந்த நோயானது ஒரு ஆளில் இருந்து இன்னொரு ஆளுக்கு தொத்தும். முதலில் காச்சலில் துவங்கி போகப் போக காச்சல் கூடி கைகால்கள் வலி, தலைவலி வந்து உடம்பு கடிச்சி சின்ன சின்ன கொப்பளங்கள் வரும். அப்போதுதான் என்ர தம்பிக்கும் அம்ம நோய் வந்தது. தம்பி படுத்த படுக்கையானான்." - கதையை இடையில் கணப்பொழுது நிறுத்தி தன்னுடைய சகோதரனை நினைத்து அந்த பாட்டி கண்ணீர் வடித்தாள். அந்த நேரத்தில் நிலவு முகிற் கூட்டத்திற்குள் புகுந்தமையால் அவளின் அழுகையை சாத் காணவில்லை.

"பிறகு அப்பம்மா என்ன நடந்திச்சு?"

"தம்பி தாங்க முடியாமல் ஒரு வாரத்துக்கு மேல் வாயில் எந்த சாப்பாடும் வைக்கவுமில்லை. என்ர அப்பா இறைச்சி இல்லாமல் சாப்பிமாட்டார். ஒரு நாள் ஆட்டிறைச்சியைக் கொண்டு வந்து வெளியில் சமைத்து சாப்பிட்டார். அடுத்த நாள் காலையில் பாயில் பேச்சு மூச்சு அற்று கிடந்தான். நாங்கலெல்லாம் பார்த்த போது. அவனின் உயிர் அம்மனிக்கிட்ட போயிருந்தது. ஊர் சனமெல்லாம் கூடி அப்பாவை திட்டனாங்க. அவர் இறச்சி ஆக்கினதாலதான் இப்படியாச்சி என்று. அந்த காலத்தில் அவ்வளவு வசதியும் கிடையாது. ஆக்களுக்கு பெரிசா அறிவும் கிடையாது கிராமப்புறங்களில் சரியான படிப்பும் கிடையாது. நா எல்லாம் உன்ர வயசில அரிவு வெட்டப் போனான். ஊரில் உள்ள பெரிய ஆக்கள் ஒன்று சேர்ந்து தம்பியைத் போர்வை துணியால் சுற்றி சுடுகாட்டில் தாட்டாங்கள். இப்படி அந்த காலத்தில் பல பேர் செத்துப்போனாங்க. அம்ம நோய் தொற்றிலிருந்து தப்ப நோய் வந்தவர் வேப்பிலையில் படுத்தல், உடம்பில் ஆடையை கழற்றுதல், வாசலில் வேப்பிலை கட்டுதல், கொப்பளங்களைச் சொறியக் கூடாது, தினமும் வாழைப்பழம் சாப்பிடுதல், வேப்பங் கசாயம் குடித்தல், வேப்பம் இலை போட்டு குளித்தல், ஓய்வெடுத்தல், சுத்தமாக இருத்தல், சூழலை சுத்தமாக வைத்திருத்தல், மஞ்சள் சாப்பிடுதல் இப்படியாக வாழ்ந்தால் அம்ம நோய் வராமல் தடுக்கவும் வந்தாலும் போய்விடும்" - கதையைச் சொல்லிவிட்டு எட்டி வெற்றிலை எச்சிலை துப்பினாள்.

"அம்ம நோய் பற்றி நல்ல கதை சொன்னீங்க.

தொடரும்...

# IMF இடமிருந்து இலங்கைக்கு 3 பில்லியன் அமெரிக்க டொலர் கடன்




# முதற் கட்டமாக 333 மில்லியனை பெற்றுக்கொண்ட ரணில்

2025 ஆம் ஆண்டளவில் அரசின் வருமான முதன்மைப் பற்றாக்குறையை மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 2.3% ஆகக் குறைக்கவும், 2026 ஆம் ஆண்டில் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 14% வருமானத்தை அதிகரிப்பதும் அரசாங்கத்தின் இலக்கு. நிலையான பெருநிறுவன வருமான வரி விகிதம் 30% ஆக அதிகரிக்கப்பட்டுள்ளதோடு, துறை சார்ந்த வரி விலக்குகள் நீக்கப்பட்டுள்ளன. உழைக்கும் போது செலுத்தும் வரி 12% இலிருந்து 15% ஆக அதிகரிக்கப்பட்டுள்ளது. வரி செலுத்த வேண்டிய எல்லை ரூ. 300 மில்லியன் இலிருந்து ரூ. 80 மில்லியன் ஆக குறைக்கப்பட்டுள்ளது. VAT வரிக்கு வழங்கப்பட்ட விலக்குகளை படிப்படியாக குறைப்பதற்கும் VAT வரி மீளளிப்புகளை துரிதப்படுத்துவதற்கும் எஸ் VAT முறையை நீக்குவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும் என ஜனாதிபதி பாராளுமன்றத்தில் அறிவித்தார். 2025 இல் குறைந்தபட்ச வரி விலக்குடன் சொத்து வரி முறைக்குப் பதிலாக செல்வ வரியை அறிமுகப்படுத்துவதற்கும், பரிசு மற்றும் பரம்பரை வரியை அறிமுகப்படுத்துவதற்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். 2023 ஆம் ஆண்டின் நடுப்பகுதிக்குள் பணவீக்க வீதத்தை ஒற்றை இலக்கத்திற்கு கொண்டு வருவதே அரசாங்கத்தின் நோக்கமாகும் என ஜனாதிபதி தெரிவித்தார். வரவு செலவுத்திட்ட பற்றாக்குறையை குறைக்கவும். பணம் அச்சிடுவதை தவிர்க்கவும் அரசு திட்டமிட்டுள்ளது. அந்நியச் செலாவணி சந்தையின் செயல்பாடுகள் சந்தை அளவுகோல்களின் அடிப்படையில் தீர்மானிக்க வழியேற்படுத்தப்படுவதோடு. நிர்ணயிக்கப்பட்ட இலக்குகளின்படி வெளிநாட்டு கையிருப்புக்களை அதிகரித்துக் கொள்ள மத்திய வங்கி வெளிநாட்டு நாணயங்களை கொள்வனவு செய்யவும் திட்டமிட்டுள்ளது.

நல்லாட்சியைப் பொறுத்தமட்டில். சர்வதேச நாணய நிதியம் இலங்கையின் நிர்வாகக் கட்டமைப்பு மற்றும் ஊழல்களை மதிப்பிடுவதற்கான அறிக்கையை தயாரித்து வருகிறது. ஐக்கிய நாடுகள் சபையின் சாசனங்களுக்கு ஏற்ப ஊழலுக்கு எதிரான சட்டம் உருவாக்கப்படுவதோடு. புதிய அரச நிதி முகாமை சட்டம் வரைவு செய்யப்படும். வரிச்சலுகைகள், வரி இடைவெளி மற்றும் பெரிய அளவிலான அரச கொள்முதல் ஒப்பந்தங்களைக் கொண்டிருக்கும் தனிநபர்கள் மற்றும் நிறுவனங்களின் பட்டியலை பகிரங்கப்படுத்தவும் அரசாங்கம் திட்டமிட்டுள்ளது. இதன் மூலம். நாட்டில் வெளிப்படைத் தன்மையை அதிகரிப்பது மற்றும் ஊழலைத் தடுப்பதே நோக்கமாகும்.

கடந்த கால தவறுகள் மீண்டும் நிகழாத வகையில் சட்டதிட்டங்களையும் பின்னணியையும் ஏற்படுத்தி, நாடு கட்டியெழுப்பப்படும்
இலங்கை. பொருளாதார தொங்கு பாலத்தை கடக்க தான் செயல்பட்டதை இன்று சர்வதேச சமூகம் ஏற்றுக்கொண்டுள்ளது.
தற்போதைய கடின உழைப்பு மற்றும் அர்ப்பணிப்பின் பலன் மக்களுக்கு விரைவில் கிடைக்கும்
சிரமங்களைப் பொறுத்துக் கொண்டு நிதானமாகச் செயல்பட்ட மக்களுக்கு நன்றிகள்

நாட்டின் பொருளாதாரத்தை கட்டியெழுப்பும் நோக்கில் அரசியல் வேறுபாடுகளை புறந்தள்ளி சர்வதேச நாணய நிதியத்தின் உடன்படிக்கையை நடைமுறைப்படுத்த ஆதரவளிக்குமாறு ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க எதிர்க்கட்சிகளிடம் கோரிக்கை விடுத்தார். **கடந்த காலத்தை விமர்சிப்பது தனது பணியல்ல என்றும், நாட்டை கட்டியெழுப்புவதே தனது பணி எனவும் வலியுறுத்திய ஜனாதிபதி,** கடந்த கால தவறுகள் மீண்டும் ஏற்படாத வகையில் சட்டதிட்டங்கள் மற்றும் பின்னணியை வகுத்து. எதிர்காலத்தை கட்டியெழுப்ப அர்ப்பணிப்புடன் செயல்படுவதாகவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

சர்வதேச நாணய நிதியத்தின் நீடிக்கப்பட்ட கடன் வசதியை பெற்றுக்கொள்வது தொடர்பில் அன்று (22) காலை பாராளுமன்றத்தில் விசேட உரையொன்றை ஆற்றியபோதே ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க இதனைக் குறிப்பிட்டார்.

பொருளாதார நெருக்கடியில் இருந்து நாட்டைக் காப்பாற்றாமல். ராஜபக்ஷவினரைக் காப்பாற்றுவதே தனது நோக்கம் என்று பலர் குற்றஞ்சாட்டினாலும். இலங்கை கடினமான தொங்கு பாலத்தைக் கடக்க தான் பணியாற்றியதை சர்வதேச சமூகம் ஏற்றுக்கொண்டுள்ளது என்றும் ஜனாதிபதி தெரிவித்தார். தான் பிறந்து. வளர்ந்து. கல்வி கற்ற நேசத்துக்குரிய நாட்டை மீளக் கட்டியெழுப்புவதில் தனக்கு நம்பிக்கை இருப்பதாக மேலும் தெரிவித்த ஜனாதிபதி. கடந்த கால அனுபவங்கள் பலவும் அந்த நம்பிக்கையை உறுதிப்படுத்தியதாகவும் ஜனாதிபதி மேலும் தெரிவித்தார். சர்வதேச நாணய நிதியத்தின் உடன்படிக்கையை பெற்றுக்கொள்வது தாய்நாட்டை மீண்டும் உயர்த்துவதற்கான சந்தர்ப்பம் என சுட்டிக்காட்டிய ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க அவர்கள். அதன் ஊடாக நாட்டிலுள்ள இளைஞர் யுவதிகளின் எதிர்காலத்தை கட்டியெழுப்ப புதிய பாதை திறக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார். பணவீக்கம் காரணமாக முழு சமூகமும் எதிர்கொண்டுள்ள அழுத்தங்கள் தொடர்பில் தமக்கு சரியான புரிதல் இருப்பதாகத் தெரிவித்த ஜனாதிபதி. இந்த சிரமங்கள் தற்காலிகமானவை என்றும். தற்போதைய முயற்சிகள் மற்றும் அர்ப்பணிப்புக்கான பலன்களை மக்கள் விரைவில் பெறுவார்கள் என்றும் தெரிவித்தார். சர்வதேச நாணய நிதியத்தின் உடன்படிக்கையை பெற்றுக்கொள்வதற்காக அனைத்து சிரமங்களையும் அழுத்தங்களையும் தாங்கிய நாட்டு மக்கள் அனைவருக்கும் ஜனாதிபதி இந்த சந்தர்ப்பத்தில் நன்றி தெரிவித்தார்.

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க பாராளுமன்றில் இன்று ஆற்றிய முழுமையான உரை பின்வருமாறு:

"சர்வதேச நாணய நிதியத்தின் நீடிக்கப்பட்ட கடன் வசதியை எங்களால் பெற முடிந்தது என்பதை இந்த கௌரவ சபைக்கு உத்தியோகபூர்வமாக தெரிவித்துக் கொள்கிறேன். அரச நிதியின் அனைத்து அதிகாரங்களும் அரசியலமைப்பின் மூலம் பாராளுமன்றத்திற்கு வழங்கப்பட்டுள்ளன. எனவே. இன்று IMF உடன்படிக்கை ஆவணத்தை சமர்ப்பித்து. இந்த பாராளுமன்றத்தில் நாம் பெற்றுள்ள நீடிக்கப்பட்ட கடன் வசதி பற்றிய முதல் உத்தியோகபூர்வ அறிக்கையை இந்த சபையில் சமர்ப்பிக்கிறேன்.

பற்றி எரிந்துகொண்டிருந்த ஒரு நாட்டையே ஜூலை 9 ஆம் திகதி நான் பொறுப்பேற்றேன். குழப்பத்தில் இருந்த நாடு. நாளைய தினம் குறித்து கடுகளவும் நம்பிக்கை இல்லாதிருந்த நாடு. வங்குரோத்தடைந்து விட்டதாக உத்தியோகபூர்வமாக அறிவித்த நாடு. பணவீக்கம் 73 சதவீதமாக உயர்ந்திருந்த நாடு. எரிபொருள். எரிவாயு வரிசையில் மக்கள் பல நாட்கள் அவதிப்பட்ட நாடு. பாடசாலைகள் மூடப்பட்ட நாடு. ஒரு நாளைக்கு பத்து - பன்னிரெண்டு மணி நேரம் மின்சாரம் தடைபட்டிருந்த நாடு. விவசாயிகளுக்கு உரம் கிடைக்காமலிருந்த நாடு. சட்டம் ஒழுங்கு பின்பற்றப்படாத நாடு. அரச அலுவலகங்கள் பலவந்தமாக ஆக்கிரமிக்கப்பட்டு. வெளியாட்கள் அதில் குடியேறியிருந்த நாடு. ஒவ்வொரு இடத்திலும் குண்டர்கள் தாக்குதல் நடத்திய நாடு. எதிர்தரப்பினரின் வீடுகளை எரிக்கும் நாடு. நெடுஞ்சாலையில் மக்கள் கொல்லப்பட்ட நாடு. இவ்வாறான பின்னணியில் பொறுப்பை ஏற்க எவரும் விரும்பவில்லை. சிலர் பின்வாங்கினார்கள். சிலர் ஜாதகம் பார்க்க நேரம் கேட்டார்கள். சிலர் நழுவிச் சென்றனர். சிலர் பயந்தார்கள். அவர்களில் யாரும் பொறுப்பை ஏற்க முன்வராத நிலையில் என்னிடம் பொறுப்பேற்குமாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டது. எந்த நிபந்தனையுமின்றி இந்த சவாலை ஏற்றுக்கொண்டேன். பாராளுமன்றத்தில் எனக்கு அதிகாரம் இருக்கவில்லை. எனக்கென்று எம்.பிகள் யாரும் இருக்கவில்லை. ஆனால் இவை எதுவும் இல்லாவிட்டாலும். எனக்கு ஒரே ஒரு பலம் இருந்தது. நான் பிறந்து. வளர்ந்து. படித்த எனது நேசத்துக்குரிய நாட்டை மீண்டும் கட்டியெழுப்ப முடியும் என்ற நம்பிக்கை மட்டுமே இருந்தது. அந்த நம்பிக்கையை உறுதிப்படுத்தும் வகையில் எனக்கு பல கடந்தகால அனுபவங்கள் இருந்தன. 2001இல். நாட்டின் பொருளாதாரம் மறைப் பெறுமானமாக வீழ்ச்சியடைந்திருந்தது. ஆனால் ஆட்சிப் பொறுப்பை ஏற்று 2 ஆண்டுகளுக்கும் குறைவான காலத்திலேயே நாட்டின் பொருளாதாரத்தை சரியான பாதையில் கொண்டு வர என்னால் முடிந்தது. அதுமட்டுமல்லாமல். டோக்கியோ உதவி மாநாட்டின் மூலம் 4 பில்லியன் அமெரிக்க டொலர் உதவியை என்னால் பெற முடிந்தது. துரதிர்ஷ்டவசமாக. அதன் பின்னர் ஆட்சியைப் பொறுப்பேற்றவர்கள் அந்தப் பணத்தை சரியாகப் பயன்படுத்தவில்லை. 2015இல் நான் பொருளாதாரத்தை பொறுப்பேற்ற போது அது பலவீனமான நிலையில் இருந்தது. ஆனால். 2018இல். பட்ஜெட்டில் முதன்மையான மேலாதிகத்தை எட்ட முடிந்தது. பல்வேறு சலுகைகளை வழங்கியும் சுமார் 106% சம்பளத்தை அதிகரிக்க நடவடிக்கை எடுத்தோம். இந்த கடுமையான சவாலை ஏற்கும் போது. கடந்த கால அனுபவங்கள் மூலம் பெற்ற நம்பிக்கை மட்டுமே எனக்கு இருந்தது. நான் வீழ்ந்தாலும் நாடு வீழாது என்ற எண்ணத்தில் சவாலை ஏற்றுக்கொண்டேன்.

கௌரவ சபாநாயகர் அவர்களே. சர்வதேச நாணய நிதியத்தின் உடன்படிக்கையுடன். இளைஞர்களின் எதிர்காலத்தை கட்டியெழுப்ப எங்களுக்கு ஒரு பாதை திறக்கப்பட்டுள்ளது. மீண்டும் எமது தாய்நாட்டை கட்டியெழுப்புவதற்கான வாய்ப்புகள் உருவாகியுள்ளன. இந்த கடன் வசதியின் கீழ். 4 ஆண்டுகளில் சுமார் மூன்று பில்லியன் அமெரிக்க டொலர்கள் உதவியைப் பெறுவோம். அதன்முதல் தவணையின் கீழ் 333 மில்லியன் அமெரிக்க டொலர்கள் கிடைக்கிறது. உலக வங்கி மற்றும் ஏனைய கடன் வழங்குபவர்களிடமிருந்து மேலும் 7 பில்லியன் டொலர் துரித கடன் உதவியை நாங்கள் எதிர்பார்க்கிறோம்.

IMF நீடிக்கப்பட்ட கடன் வசதியை நெருப்பு வட்டியுடன் கூடிய மற்றொரு கடன் என்று சிலர் விபரிக்கிறார்கள். இந்தப் பணத்தில் நாட்டின் முழுக் கடனையும் அடைக்க முடியாது என்று கூக்குரலிடுபவர்களும் இருக்கிறார்கள். இத்தகைய கருத்துக்கள் அவர்களின் அறியாமையையே காட்டுகிறது. அல்லது அப்பாவி மக்களை பொய் சொல்லி ஏமாற்றி அரசியல் ஆதாயங்களை பெற்றுக்கொள்ள அவர்கள் முயற்சிக்கிறார்கள்.

IMF நீடிக்கப்பட்ட கடன் என்பது வீழ்ந்த நாட்டை மீட்டெடுக்க வழங்கப்படும் வசதியாகும். அதற்கான தளமும் தயார் செய்யப்பட்டுள்ளது. இந்த வசதி மூலம் மீண்டும் சர்வதேச அங்கீகாரம் கிடைத்துள்ளது. இலங்கை இனி வங்குரோத்தடைந்த நாடாக இருக்காது என்பதற்கு உத்தரவாதம் கிடைத்துள்ளது. எமது உள்நாட்டு வங்கிகளுக்கு சர்வதேசத்தின் அங்கீகாரம் கிடைத்துள்ளது. சர்வதேச நிதி நிறுவனங்கள் எங்கள் கடன் பத்திரங்களை மதிக்கின்றன. ஏனைய சர்வதேச நிதி நிறுவனங்களிடமிருந்து மிகக் குறைந்த வட்டியில் கடன் உதவி பெறுவதற்கான பின்னணி உருவாக்கப்பட்டுள்ளது. வெளிநாட்டு முதலீட்டாளர்கள் மீண்டும் இலங்கை மீது நம்பிக்கை வைப்பர். பரந்த அளவிலான சர்வதேச வாய்ப்புகளுக்கான கதவுகள் எங்களுக்காக திறக்கப்படும். வலுவான புதிய பொருளாதாரத்தை உருவாக்குவதற்கான அடித்தளம் தயாராகி வருகிறது. அது மட்டுமின்றி. இந்த உடன்படிக்கையின் மூலம் நமது நாட்டின் நிதி ஒழுங்குச் சட்டமாக்கப்படும். ஊழலைத் தடுக்க புதிய கடுமையான சட்ட திட்டங்கள் அறிமுகப்படுத்தப்படும். இதன் மூலம் இலங்கையில் இதுவரை இல்லாத புதிய நிதிக் கலாசாரம் மற்றும் ஊழல் அற்ற சூழல் உருவாக்கப்படும்.

கௌரவ சபாநாயகர் அவர்களே. எமது நாட்டைப் பற்றி சர்வதேச நாணய நிதியம் முடிவெடுக்கும் முன்னரே நாட்டை முழுமையாக முடக்க சிலர் முயற்சித்தனர். இடைவிடா வேலை நிறுத்தத்தை முன்னெடுத்து. பொருளாதாரத்தை சீரழித்து நாட்டை அராஜகமாக்க திட்டமிட்டனர். நாசவேலை மூலம் IMF ஒத்துழைப்பை தடுக்கலாம் என்று நினைத்தனர். சில அரசியல் குழுக்கள். சில தொழிற்சங்கங்கள். சில ஊடகங்கள் இதற்காக கடினமாக உழைத்தன. நாடு ஸ்திர நிலையில் இல்லை என்பதால் சர்வதேச நாணய நிதியத்தின் உதவி கிடைக்காது என்றும் கூறினர். உள்ளூராட்சித் தேர்தல் நடத்தப்படாததால் சர்வதேச நாணய நிதியத்தின் உதவி கிடைக்காது என்று கூறினர். இப்படியான பொய்களைப் பரப்பி நாட்டு மக்களை வீதிக்கு இறக்க முயற்சித்தனர்.

எனினும். இந்த நாசகார செயற்பாடுகளை பெரும்பான்மையான மக்கள் ஆதரிக்கவில்லை. தனிப்பட்ட அரசியல் அதிகார நோக்கங்களுக்காக நாட்டின் முன்னேற்றத்திற்கு குந்தகம் விளைவிக்க பெரும்பான்மையான மக்கள் விரும்பவில்லை. அவர்கள் நாட்டுக்காக பொறுப்புணர்வோடு செயற்பட்டனர். பல்வேறு சிரமங்களுக்கும் அழுத்தங்களுக்கும் மத்தியில். அவை அனைத்தையும் சகித்துக்கொண்டு. துன்ப. துயரங்களைத் தாங்கிக் கொண்டு நிதானமாகவும். பொறுமையாகவும் பெரும்பான்மையான மக்கள் செயற்பட்டனர். சர்வதேச நாணய நிதியத்தின் ஒப்புதலைப் பெறுவதற்கு அவர்களின் அர்ப்பணிப்பு பெரும் பலமாக இருந்தது. எனவே முதலில் இந்நாட்டு மக்களுக்கு எனது நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த விடயத்தில் எங்கள் அதிகாரிகள் இரவு பகலாக கடுமையாக உழைத்தனர். சிலர் அச்சுறுத்தல்களை எதிர்கொண்டனர். அமைச்சர்கள் அர்ப்பணிப்புடன் செயல்பட்டனர். இச்சபையின் உறுப்பினர்கள் பலர் அதற்கு ஆதரவளித்தனர். சிலர் பகிரங்கமாகவும் பலர் இரகசியமாகவும் ஆதரவளித்தனர். அவர்கள் அனைவருக்கும் நான் நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும். இந்த நீடிக்கப்பட்ட கடன் வசதியைப் பெறுவதற்கு எங்களின் முக்கிய கடன் வழங்குநர்கள் எங்களுக்கு ஆதரவளித்தனர். வெளிநாடுகளும் சர்வதேச அமைப்புகளும் எங்களுக்கு ஆதரவளித்தன. வெளிநாட்டு அரச தலைவர்கள். அமைச்சர்கள். சர்வதேச அமைப்புகளின் அதிகாரிகள். பிரதிநிதிகள். வெளிநாட்டு இராஜதந்திரிகள். அதிகாரிகள் என பலரும் எங்களுக்கு உதவினார்கள். அவர்கள் அனைவருக்கும் இலங்கையின் மரியாதைக்குரிய நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

தொடரும்...

# பொருளாதார நெருக்கடி வறுமையால்



# இலங்கையில் அதிகரிக்கும் விலை மாதுக்கள்!

நசுக்கும் பொருளாதார நெருக்கடியை எதிர்கொண்டுள்ள இலங்கையில், இப்போது ஜவுளித் துறையில் வேலை இழந்த பெரும்பாலான பெண்கள், வாழ்வாதாரத்திற்காக பாலியல் தொழிலாளர்களாக மாற வேண்டிய கட்டாயத்தில் உள்ளதாக இந்திய தொலைக்காட்சி செய்தி வெளியிட்டுள்ளது.

நாட்டில் ஏற்பட்டுள்ள முன்னெப்போதும் இல்லாத நெருக்கடியை அடுத்து, 22 மில்லியன் இலங்கையர்கள் பாரிய கஷ்டங்களையும் வறுமையின் வாய்ப்புகளையும்எதிர்கொண்டுள்ளனர்.

நாட்டின் தற்போதைய சூழ்நிலையால் ஏற்படும் சிரமங்கள் பல குடும்பங்களை விளிம்பிற்குத் தள்ளியுள்ளன. உணவு மற்றும் அத்தியாவசியப் பொருட்களை கொள்வனவு செய்வதற்கான அன்றாடப் போராட்டங்களினால் இலங்கையில் பெரும் எண்ணிக்கையான மக்கள் தமது வீடுகளை நடத்துவதில் சிரமங்களை எதிர்கொண்டுள்ளனர்.

இந்த மோசமான சூழ்நிலை நாடு முழுவதும் தற்காலிக விபச்சார விடுதிகளை உருவாக்கியுள்ளது. கடந்த சில மாதங்களில் விபச்சாரத்தில் 30 சதவீதம் அதிகரித்துள்ளதால், இங்குள்ள பெண்கள் வாழ்வாதாரத்திற்காக பாலியல் தொழிலாளர்களாக மாற வேண்டிய கட்டாயத்தில் உள்ளனர் என்று பாலின உரிமைகளுக்காக பாடுபடும் ஸ்டாண்ட்-அப் மூவ்மெண்ட் லங்கா (SUML) தெரிவித்துள்ளது.

இந்த நிறுவனங்களில் சில ஸ்பாக்கள் மற்றும் ஆரோக்கிய மையங்களாக செயல்படுகின்றன. பலர் தங்கள் குடும்பங்களுக்கு ஒரு நாளைக்கு மூன்று வேளை உணவு வழங்குவதற்கு ஒரே வழி என்று கூறுகிறார்கள். ஜவுளித் தொழிலில் பணிபுரியும் பெண்கள் பொருளாதார நெருக்கடி காரணமாக பணிநீக்கம் செய்யப்பட்ட பின்னர் 'செக்ஸ் வேலையை' நாடுகிறார்கள்" என்று நிர்வாக இயக்குனர் அஷிலா டான்டெனியா இந்திய தொலைக்காட்சி இடம் கூறினார்.

"தற்போதைய நெருக்கடியின் காரணமாக, பல பெண்கள் விபச்சாரத்தில் ஈடுபடுவதை நாங்கள் கவனித்தோம். அவர்களில் பெரும்பாலோர் ஜவுளித் தொழிலைச் சேர்ந்தவர்கள். கொவிட்க்குப் பிறகு, ஜவுளித் தொழில்கள் பாதிக்கப்பட்டு, பல வேலைகள் குறைக்கப்பட்டுள்ளன, இப்போது தற்போதைய சூழ்நிலை அவர்களை உடலுறவுக்கு கட்டாயப்படுத்துகிறது. அவர்களின் வாழ்வாதாரத்திற்காக உழைக்க வேண்டும்," என்று அவர் கூறினார்.

21 வயதான ரெஹானா (பெயர் மாற்றப்பட்டுள்ளது) ஜவுளித் தொழிலில் பணிபுரியும் ஒரு ஊழியராக இருந்து பாலியல் தொழிலாளியாக மாறியது பற்றிய தனது கதையை ANI உடன் பகிர்ந்துள்ளார். ரெஹானா ஏழு மாதங்களுக்கு முன்பு தனது வேலையை இழந்தார், பல மாதங்கள் விரக்திக்குப் பிறகு, அவர் விபச்சாரத்தில் ஈடுபட்டார்.

"கடந்த ஆண்டு டிசம்பரில், ஜவுளி தொழிற்சாலையில் வேலை இழந்தேன். பின், தினக்கூலி அடிப்படையில், வேறு வேலை கிடைத்தது. சில சமயங்களில், ஆள்பலம் குறைந்த போது, சென்று, வேலைக்குச் சென்றேன். ஆனால், என்னால் பணம் எடுக்க முடியவில்லை. அதை முறையாகப் பெறவில்லை, எனது மற்றும் குடும்பத்தின் தேவைகளைக் கவனித்துக்கொள்வது மிகவும் குறைவாக இருந்தது, பின்னர், ஒரு ஸ்பா உரிமையாளர் என்னை அணுகினார், தற்போதைய நெருக்கடியால் பாலியல் தொழிலாளியாக வேலை செய்ய முடிவு செய்தேன், என் மனம் அதை ஏற்க மறுத்தது. ஆஃபர் ஆனால் எனது குடும்பத்திற்கு பணம் மிகவும் தேவைப்பட்டது," என்று அவர் இந்திய தொலைக்காட்சி இடம் கூறினார்.

நாற்பத்திரண்டு வயதான ரோசி (பெயர் மாற்றப்பட்டுள்ளது) பாலியல் தொழிலாளியாக மாறியவர்களில் இன்னொருவர். ஏழு வயதான ஒரு குழந்தையின் தாயான அவர் விவாகரத்து பெற்றவர், மேலும் அவர் தனது மகளின் கல்வி மற்றும் வாடகைக்கு போதுமான அளவு சம்பாதிக்க வேண்டியிருந்தது.

"பொருளாதார நெருக்கடியால் வருமானம் போதாது. என் குடும்பத்தின் வீட்டுத் தேவைக்கு பணம் போதாது. அதனால் தான் இதைத் தேர்ந்தெடுத்தேன். கடை நடத்தி வருகிறேன், அதை நடத்த பணம் கொடுக்க வேண்டும். இந்தப் பிரச்சனையால் இப்போது பல விபச்சாரிகள் உள்ளனர் என தெரிவித்தார். மாதத்திற்கு 20,000 முதல் 30,000 வரை சம்பாதித்த பெண்கள் மற்றும் பெண்கள் ஒரு நாளைக்கு 15,000-20,000 ரூபாய் பெறுவதுதான் பாலியல் தொழிலாளிகளாக மாறுவதற்கு ஒரு பெரிய காரணம் என்று நம்பப்படுகிறது. ஆனால் அவர்கள் சந்திக்கும் பிரச்சனைகள் ஏராளம்.



SUML இன் நிர்வாக இயக்குனர் மேலும் கூறுகையில், "பல பாலியல் தொழிலாளர்கள் தங்கள் துணையுடன் வாழத் தொடங்கினர், ஆனால் நெருக்கடி காரணமாக பங்குதாரர் பல பெண்களை விட்டு வெளியேற வேண்டியிருந்தது. அவர்களில் பலர் கர்ப்பமாகிவிட்டனர். தற்போது எங்களிடம்இரண்டு பெண்கள் கர்ப்பமாக உள்ளனர். நாங்கள் அவர்களை கவனித்துக் கொள்ள வேண்டும், அரசாங்கத்திடமிருந்து கூட எங்களுக்கு எங்கும் உதவி கிடைக்கவில்லை. முன்னதாக ஐநாவின் உலக உணவுத் திட்டத்தின் (WFP) இலங்கையின் நாட்டு இயக்குநர் அப்துர் ரஹீம் சித்திக், தீவு நாட்டில் 6.3 மில்லியன் மக்கள் உணவுப் பாதுகாப்பின்றி உள்ளனர். நாட்டின் பொருளாதாரம் தற்போது சுதந்திரத்திற்குப் பிறகு மிக மோசமான உணவு நெருக்கடியை சந்தித்து வருவதாகவும், அடுத்த சில மாதங்களில் திடுக்கிடும் பணவீக்கம் உயரும் என்று எதிர்பார்க்கப்படுவதாகவும் அவர் கூறினார்.

"இலங்கை சுதந்திரம் அடைந்ததில் இருந்து கடுமையான உணவு நெருக்கடியை எதிர்கொள்கிறது. ஜூன் வரை உணவுப் பணவீக்கம் 80 சதவீதத்திற்கும் அதிகமாக உள்ளது, வரும் மாதங்களில் இந்தப் போக்கு அதிகரிக்கும்" என்று சித்திக் கூறினார்.

இரணியன்

# தமிழினப் படுகொலையில் பங்கேற்ற நாடுகள் தீர்வு என்ன?

இந்தியா தமிழீழத்தை எப்போதும் தனது துருப்பு நாடாகவே பயன்படுத்தி வந்தது. அந்த வகையில் தான் ஆரம்பத்தில் அதாவது இந்திரா காந்தி காலத்தில் தனது நலன் சார்ந்து ஈழத்தமிழர்களுக்கு உதவிகள் செய்தது. ஆனால் இந்தியாவிலுள்ள உயர்சாதிகளின் திட்டத்திற்கு ஈழத்தமிழர்கள் இணங்க மாட்டார்களென்று தெரிந்த பின் நிலைமைகள் வெகுவாக மாறியது. ஈழத்தமிழர்களை கொல்ல இந்திய அமைதிப்படையை (IPKF) அனுப்பியதிலிருந்து நிறைய சொல்லலாம்.

அதேநேரத்தில் தனது நோக்கம் தமிழகத்தில் பலத்த எதிர்ப்பை உண்டாக்கியதை அடுத்து இராஜீவ் காந்தியின் கொலையை காரணமாக காட்டி தமிழீழ மக்களை ஒடுக்கவும் தனது வன்மத்தை மறைக்கவும் அதனை பயன்படுத்தியது. இலங்கை எவ்வளவு தூரம் விடுதலைப் புலிகளுக்கு எதிராக இருந்ததுவோ. அதே அளவு இந்திய அரசாங்கமும். விடுதலைப் புலிகளுக்கு எதிரான நிலைப்பாட்டைக் கொண்டிருந்தது. ஒரே வித்தியாசம். இலங்கை அரசாங்கத்தை விட. இந்தியா உலக அளவில் தன் ஆளுமையை செலுத்தக் கூடிய நாடாக இருந்தது. ஒரு வேளை இந்தியா விடுதலைப் புலிகளை ஆதரித்திருந்தால். தனித் தமிழீழத் தேசம் மலர்ந்திருக்கும்.

**இந்தியா இரண்டு விடயங்களுக்காக அஞ்சியது:**

தமிழீழம் விடுதலை அடைந்தால். தமிழ்நாடும் விடுதலைக் கோரும். இது இந்தியாவின் புவிசார் அரசியல் நிலையையும். பொருளாதாரத்தையும் பாதிக்கும். தமிழீழம் அங்கீகரிக்கப் படாத நாடாக இருந்த காலத்தில். பிற அங்கீகரிக்கப்படாத நாடுகளைக் காட்டிலும். இராணுவம் மற்றும் தொழில் நுட்பத்தில் முன்னேறி இருந்தது. அமைதி காலகட்டத்தில் (2001-2006) தமிழீழம் அடைந்திருந்த வளர்ச்சி இந்திய உயர்சாதியினர்களுக்கு எரிச்சலை கொடுத்தது. 1991 க்கு பிறகு. இலங்கைக்கு பொருளாதார மற்றும் இராணுவ உதவிகளை இந்தியா தொடர்ச்சியாக அளிக்கத் தொடங்கியது. மூன்றாம் ஈழப் போரின் போது. விடுதலைப் புலிகள் தொடர்ச்சியான பல யுத்தங்களை வென்ற போது. இலங்கை அரசுடன் இராணுவ வர்த்தகத்திலும். நிதியுதவி அளிப்பதிலும் இந்திய அரசாங்கமே முன்னிலையில் இருந்தது.

2018 ஆம் ஆண்டு. முன்னாள் பிரதமர் வாஜ்பாயி இறப்பிற்கு இரங்கல் தெரிவிக்க இந்தியா வந்த முன்னாள் இலங்கை பிரதமர் ரணில் விக்ரமசிங்கே **"நான் இலங்கையின் பிரதமராக இருந்த போது, விடுதலைப் புலிகள் அமைப்பு மிகவும் பலமாக இருந்தது. எங்களின் பொருளாதாரமும் நலிந்திருந்தது. திரு.வாஜ்பாயி அவர்கள் தான் எங்களின் பொருளாதார வளர்ச்சிக்கு உதவினார். எங்களுக்கு தேவையான இராணுவ பயிற்சிகளையும் அளித்தார். இந்த உதவிகளாலேயே கடல் புலிகளை எங்களால் கட்டுக்குள் கொண்டு வர முடிந்தது"** என்று கூறினார்.

இலங்கையின் அதிபராக இருந்த கோத்தபாய இராஜபக்சே. **"காங்கிரஸ் அரசாங்கத்துடனும், அதன் அதிகாரிகளுடனும் எங்களுக்கு நல்ல உறவு இருந்தது. விடுதலைப் புலிகளை தோற்கடிப்பத்தில் எங்களுக்கு அவர்களின் முழு ஆதரவு இருந்தது"** என்று கூறியுள்ளார்.

இலங்கையில் கடைசி கட்ட போரின் போது. இந்தியாவில் காங்கிரஸ் ஆட்சியே நடைபெற்றது. சோனியா காந்தியின் கட்டுப்பாட்டில் தான் காங்கிரஸின் ஆட்சி இருந்தது.

1. இந்தியாவின் நலன்களை இலங்கையில் பாதுக்காக்கவும். பாக்கிஸ்தான் மற்றும் சீனா இலங்கையில் நிலை பெறுவதை தடுக்கவும். விடுதலைப் புலிகளை அழிப்பதும். பிரபாகரனைக் கொல்வதும் மட்டும் தான் ஒரே வழி என்ற நிலைப்பாட்டை எடுத்த சோனியா காந்தி அதை இந்திய பிரதமர் மன்மோகன் சிங் ஏற்றுக் கொள்ளவும் செய்தார். அமைதி காலத்தின் போது ஈழச் சிக்கலுக்கு இராணுவத் தலையீட்டின் மூலமே முடிவு காண வேண்டும் என்று சோனியா காந்தி விடாப் பிடியாக இருந்தார். இராணுவ உத்திகள். பொதுமக்களை கட்டுப்படுத்துதல். ஊடகங்களை ஒடுக்குதல் ஆகியவற்றுடன் முற்று முழுதான போரிற்கான அறிவுரைகளை அமைதி காலத்திலும் கூட சோனியா காந்தி இலங்கை அரசாங்கத்திற்கு அளித்து வந்தார். கருணா மற்றும் கே.பி ஆகியோர் உட்பட விடுதலைப்புலிகள் தலைமையில் பிளவு ஏற்பட சோனியா காந்தி மற்றும் ரணில் விக்கிரமசிங்கே ஆகியோர் முக்கிய பங்காற்றினர்.

2. "The Statesman" இதழின் பத்திரிக்கையாளர். சாம் ராஜப்பாவின் கூற்றுப் படி : இலங்கையில் நடைபெறும் இன விடுதலைக்கான போராட்டத்தை இராணுவ நடவடிக்கை மூலம் முடிவு கட்டுவதற்கு இந்திய அரசாங்கம் இலங்கை அரசாங்கத்திற்கு பச்சைக் கொடி காட்டியது. விடுதலைப் புலிகள் தலைவர் பிரபாகரனையும். புலனாய்வுத்துறைப் பொறுப்பாளர் பொட்டு அம்மானையும் கொல்வதற்கு தேவையான அனைத்து இராணுவ உதவிகளையும் அளிக்கத் தயார் என்று சோனியா காந்தி கூறியதாக கொழும்புவில் இருந்து வரும் செய்திகள் தெரிவித்தன.

இந்திய பாதுகாப்பு ஆலோசகராக இருந்த எம். கே.நாராயணன். வெளியுறவுத் துறை செயலாளர் சிவசங்கர் மேனன் ஆகியோர் உட்பட பிரதமர் அலுவலகத்தில் இருந்த பல்வேறு அதிகாரிகள் தேசிய நலனை விட சோனியா காந்தியின் நலனிற்கு முக்கியத்துவம் கொடுத்து. இலங்கையில் நடந்த இனப்படுகொலைக்கு உதவி செய்தனர். உலகமே இலங்கையில் நடந்தவற்றை கண்டு கொந்தளித்துக் கொண்டு இருந்த போது. இந்திய அரசாங்கம் மட்டும் அமைதியாக இருந்தது. இராஜபக்சேவும் அவரது கூட்டாளிகளும் சர்வதேச நீதிமன்றத்தின் முன் இனப்படுகொலை மற்றும் போர் குற்றங்களுக்காக நிறுத்தப்படும் பட்சத்தில். இந்திய அரசாங்கம் மட்டும் தப்பித்து விட முடியாது. தமிழ்நாட்டின் முதல்வராக இருந்த கருணாநிதி அவர்கள் விடுதலைப் புலிகளுக்கு எதிரான போரில் இந்தியாவிற்கு துணை நின்றார். அவரின் அமைதியும் காங்கிரஸ் அரசாங்கத்திற்கு அளித்த ஆதரவும் கேடு விளைவித்தது. பிரபாகரன் கோரிய உதவிகளை புறம் தள்ளிவிட்டு. தமிழ்நாட்டில் இருந்த விடுதலைப் புலிகளின் சொத்துகளை பறிமுதல் செய்து. காங்கிரஸ் கூட்டணிக்கு தன்னுடைய ஆதரவை விலக்கிக் கொள்ள மறுத்தார்.

3. Tamil Nadu Coastal Security Group உதவியுடன். இந்திய உளவுத் துறை அமைப்பான RAW 2007 இல். தமிழ்நாட்டில் விடுதலைப் புலிகளின் செயல்பாட்டையும். விடுதலைப் புலிகள் தலைவர்கள் தமிழ்நாட்டிற்கு தப்பி வருவதை தடுக்கவும். ஆயுதங்கள் பெறுவதற்கு தமிழ்நாட்டில் விடுதலைப் புலிகள் வைத்திருந்த தொடர்புகளையும் முடக்கியது.

4. இலங்கை மீது பொருளாதார தடை விதிக்கவும். இனப்படுகொலை மற்றும் போர் குற்றத்திற்கு காரணமானவர்களை விசாரிக்க ஐ.நா.வில் தீர்மானம் கொண்டு வரவும் வற்புறுத்தி. தமிழ்நாட்டு சட்டமன்றத்தில் 2011 ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை. மத்திய அரசு செயல்படுத்த போதிய அழுத்தங்களை கருணாநிதி மத்திய அரசிற்கு அளிக்கவில்லை. ஐ.நா மனித உரிமை அவையில் அமெரிக்கா கொண்டு வந்த தீர்மானத்தை நீர்த்துப் போகச் செய்வதில் இந்திய அரசாங்கம் முக்கியப் பங்காற்றியது. அதையும் கருணாநிதி கண்டிக்கவில்லை. தங்கள் வற்புறுத்தலின் பெயரிலேயே தீர்மானம் நீர்த்துப் போகச் செய்யப்பட்டது என்று மன்மோகன் சிங் கடிதம் வாயிலாக கூறிய பிறகும் கூட கருணாநிதி அமைதி காத்தார்.

5. அமெரிக்கா உட்பட சர்வதேச நாடுகள் விடுதலைப் புலிகள் அமைப்பை தீவிரவாத அமைப்புப் பட்டியலில் வைப்பது. ஐ.நா மனித உரிமை ஆணையத்தில் இலங்கை அரசாங்கத்தைப் பாதுகாப்பது. கனடாவின் வலதுசாரி கட்சிகளில் உள்ள இந்தியர்களை கொண்டு விடுதலைப் புலித் தலைவர்களை தடை செய்யும் தீர்மானத்தைக் கொண்டு வருவது போன்ற அரசியல் ரீதியான நடவடிக்கைகளை இந்திய அரசாங்கம் செய்தது.

6. இராணுவ ரீதியில். இலங்கை அரசாங்கத்திற்கு 100 மில்லியன் அமெரிக்க டாலர்களை கடனாகவும். போர் விமானங்கள். தாக்குதலுக்கு தேவையான ஹெலிகாப்டர்கள். ஆயுதங்கள் ஆகியவற்றை இந்தியா அளித்தது. அமைதி காலத்தில் மட்டும் இந்திய அரசாங்கம்: JY11 3D ரேடார் கருவிகளை இலங்கை அரசாங்கத்திற்கு 5 மில்லியன் டாலருக்கு விற்றது இரண்டு Indra IN-PC-2னு ராடார் கருவிகள். இலவசமாக அளித்தது. 13 MG போர் விமானங்கள். நூற்றுக்கணக்கான போர்வீரர்கள் அணியும் உடுப்புகள். மற்றும் தாக்குதலுக்கு தேவையான ஹெலிகாப்டர்கள் ஆகியவற்றை வழங்கியது.

7. இந்தியாவின் செயற்கைக் கோள்களை பயன்படுத்திக் கொள்ள இலங்கை இராணுவத்திற்கு அனுமதி அளிக்கப்பட்டது. அதன் மூலமும். தானியங்கி விமானங்கள் (Drone) மூலமும் விடுதலைப் புலிகளின் நடவடிக்கைகளை இலங்கை இராணுவம் கண்காணித்தது. கடல் புலிகளின் கலன்கள் மீது. ஆயுதம் ஏற்றிச் செல்லும் கப்பல்கள் மீது இந்திய விமானப் படை தொடர் தாக்குதல்களை நடத்தியது. விடுதலைப் புலிகள் ஆயுதங்களை இறக்குமதி செய்வதை. விடுதலைப் புலிகள் தலைவர்கள் தப்பிச் செல்வதையும் தடுக்க இந்திய கப்பற்படை நடவடிக்கைகளை மேற்கொண்டது.



இந்திய கப்பல் படை. விடுதலைப் புலிகளின் கிடங்குகளாக பயன்படுத்திய பத்து கலன்களை (floating warehouses) அழித்தது. இதனால் கடற் புலிகள் அமைப்பு மிகவும் பலவீனம் அடைந்தது. கடற்பகுதிகளை கண்காணித்து. சேகரித்த தகவல்களை இலங்கையின் கடற்படைக்கு அளித்தது. கடற் புலிகளின் கலன்கள் மீது விமானப் படைத் தாக்குதல்களையும் நடத்தியது. இந்தியாவில் இராணுவ பயிற்சி பெறும் முதன்மை நாடாக இலங்கை இருந்தது. 2008 இல். இலங்கை இராணுவத்திற்கு வருடாந்திர பயிற்சிகளை அளிக்கவும் இந்தியா ஏற்பாடுகள் செய்தது. இந்தியாவின் பாதுகாப்புச் செயலாளர். வெளியுறவுத் துறை செயலாளர் மற்றும் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் ஆகியோருடன் இராஜபக்சேவின் சகோதரர்கள் மற்றும் அவர்களின் செயலாளர்கள் அதிகாரப்பூர்வமாக அல்லாமால். தனிப்பட்ட முறையில் தகவல்களை பறிமாறிக்கொள்வதற்கான முறைமைகள் ஏற்படுத்தப்பட்டன. 2007-2009 கால கட்டத்தில் இவர்கள் பல முறை சந்தித்துக் கொண்டனர்.

8. இலங்கையின் கடற்படை தளபதியான வசந்தா கரணகோடா **"விடுதலைப் புலிகளின் சரக்குக் கப்பல்கள் இந்திய கப்பற்படை அளித்த தகவல்களை கொண்டு ஒவ்வொன்றாக அழிக்கப்பட்டன. இதன் காரணமாக விடுதலைப் புலிகள் கட்டுப்பாட்டில் இருந்த பகுதிகளுக்கு எல்லா வகையான பொருட்களும் கொண்டு செல்லப்படுவது தடுக்கப்பட்டது. இதனால் எங்களால் வேகமாக முன்னேற முடிந்தது. இலங்கையின் வடக்கிலும் கிழக்கிலும் புலிகள் கட்டியமைத்திருந்த தேசத்தை எங்களால் அழிக்க முடிந்தது."** என்று கூறியுள்ளார்.

இலங்கை அரசு மீதான சர்வதேச போர் குற்றங்களை விசாரிக்க ஐ.நா மனித உரிமைகள் ஆணையம் எடுக்கும் முயற்சிகளை இந்திய அரசாங்கம் இன்றளவும் விடாப்பிடியாக தடுத்து வருகிறது.

**சீனா:**

rajabakshe china இலங்கையில் நடந்த உள்நாட்டுப் போரின் கடைசி கட்டத்தில் தான் இலங்கையின் மிக முக்கியமான நட்பு நாடாக சீனா உருவெடுத்தது. சீனா தன்னுடைய "பட்டுச் சாலை" திட்டத்தை தொடங்கியிருந்தது. அண்டை நாடுகளுக்கு கடன் கொடுத்து அவர்களின் துறைமுகங்களைக் கைப்பற்றும் நடவடிக்கைகளை (Debt Traps) மேற்கொண்டிருந்தது. விடுதலைப் புலிகள் வசம் இருந்த திருகோணமலை துறைமுகமும். இலங்கை அரசாங்கத்தின் வசம் இருந்த ஹம்பாந்தோட்ட துறைமுகத்தின் மீதும் சீனா ஆர்வம் காட்டியது. இதைக் காட்டியே. விடுதலைப் புலிகளை தோற்கடிக்க உதவுமாறு சீனாவை இலங்கை அரசாங்கம் கேட்டுக் கொண்டது.

7 பில்லியன் டாலர் நிதி உதவியை இலங்கை இராணுவத்திற்கு சீனா வழங்கியது. ஆறு F-7 போர் விமானங்களை இலவசமாக இலங்கைக்கு அளித்த சீனா. 37.6 மில்லியன் டாலர் மதிப்பிலான. வெடி குண்டுகள். பீரங்கிகள். குறிபார்த்து அழிக்கும் ஏவுகணைகள்(Guided missiles). ராக்கெட் லான்சர்கள். தரையில் இருந்து வானத்திற்கு சென்று விமானங்களை அழிக்கும் ஏவுகனைகள் (surface-to-air missiles). ஊடுறுவி அழிக்கும் வெடிகுண்டுகள் மற்றும் ராக்கெட்டுகள். பீரங்கி குண்டுகள். இரவு நேரங்களில் பார்வைக்காக பயன்படுத்தப்படும் கண்ணாடிகள். பாதுகாப்பு இயந்திரங்கள். பீரங்கிகள். போர் விமானங்கள். கப்பல்கள். ராடார் மற்றும் தொலை தொடர்பு கருவிகள் ஆகியவற்றையும். இலங்கை வான் படை வீரர்களுக்கான பயிற்சியையும் அளித்தது.

"The Independent UK" பத்திரிக்கை சீனாவின் பங்களிப்பை விவரிக்கிறது : 1 பில்லியன் டாலர் பணத்தை இலங்கை அரசிற்கு சீனா கொடுத்ததுடன் பல மில்லியன் டாலர்கள் மதிப்பிலான நவீன ஆயுதங்கள். இலவசமாக ஆறு F7 போர் விமானங்கள் ஆகியவற்றையும் இலங்கைக்கு அளித்தது. இலங்கைக்கு ஆயுதங்களையும். போர் விமான பயிற்சியும் அளிக்க தனது நட்பு நாடான பாக்கிஸ்தானிடம் சீனா கூறியது. மிக முக்கியமாக. ஐ.நா பாதுகாப்பு அவையில் இலங்கை பற்றிய விவாதம் எழாமல் பார்த்துக் கொண்டது. Norinco என்ற சீன உற்பத்தி நிறுவனம் மட்டும் 200 மில்லியன் டாலர் மதிப்பிலான ஆயுதங்களை இலங்கை அரசிற்கு அளித்துள்ளது. Poly Technologies என்ற சீன ஆயுத உற்பத்தி நிறுவனம். 120 mm மோர்டார் குண்டுகளை இலங்கை அரசிற்கு விற்றது. 70,000 முறை சுடுவதற்கான குண்டுகள் மட்டும் 10.4 மில்லியன் டாலருக்கு விற்கப்பட்டது.

இதுமட்டுமல்லாமல். 20 மில்லியன் டாலர் மதிப்பிலான 152mm பீரங்கி வெடிகுண்டுகள். 3.7 மில்லியன் டாலர் பெருமானமுள்ள வெடி குண்டுகள் ஆகியவற்றை சீனாவில் இருந்து இறக்குமதி செய்தது இலங்கை அரசு. இலங்கை கடற்படைக்கு மட்டும் 2.7 மில்லியன் டாலர் பெருமானமுள்ள ஆயுதங்கள். 14.5mm தோட்டாக்கள். இரண்டாயிரம் RPG-7 ராக்கெட்டுகள். ஐநூறு 81mm மோர்டார் குண்டுகள் ஆகியவற்றை சீனா அளித்தது. இது மட்டுமல்லாமல் போர் கப்பல்களில் பயன்படுத்தப்படும் ஐம்பது14.5mm வகை இரட்டைக் குழல் துப்பாக்கிகள். இருநூறு 12.7mm கனரக இயந்திரத் துப்பாக்கிகள். இருநூறு 7.62mm இயந்திரத் துப்பாக்கிகள். ஆயிரம் 7.62 2mm துணை இயந்திரத் துப்பாக்கிகள். உட்பட ஷியாங்காய் தரத்திலான போர்ப் படகுகள் ஆகியவற்றையும் சீனா வழங்கியது. 2008க்கு பிறகு இலங்கை கப்பல் படையில் நாலில் ஒரு பங்கு சீனா அளித்த படகுகளே இருந்தன.

போர் முடிந்த பிறகு. இலங்கை அரசின் தமிழர்களுக்கு எதிரான மனித உரிமை மீறல்களை விசாரிக்கக் கூடாது என்றும். இலங்கை அரசு எந்த தப்பும் செய்யவில்லை என்றும் சீன வெளியுறவுத் துறை அதிகாரிகள் ஐ.நா மனித உரிமை ஆணையத்தை வற்புறுத்தினர்.

தொடரும்...

இரணியன்

# இனி உலகை ஆட்டிப்படைக்கப் போகும் சர்வதிகாரிகளின் கூட்டம்




உலக ஊடகங்களில் இன்று அதிகமாக உச்சரிக்கப்படுகின்ற ஒரு பெயர் விளாடிமிர் புடின். ரஷ்யா - உக்ரைன் மோதல் காரணமாக உலக யுத்தம் ஒன்று ஏற்பட்டு அந்த யுத்தத்தின் அழிவுகளில் இருந்து ஒரு வேளை யாராவது மனித உயிர்கள் தப்பித்து விட்டால் தப்பித்த அந்த மனித உயிர்கள் அந்த யுத்தத்தின் வரலாற்றை எழுதும் பொழுது விளாடிமிர் புடின் என்ற பெயர் அந்த வரலாற்றில் மிக முக்கிய இடத்தைப் பிடித்திருக்கும். அந்த அளவிற்கு உலக வரலாற்றில் தவிர்க்க முடியாத ஒரு தலைவராக இடம்பிடிக்க இருக்கின்ற ஒரு பெயர் தான் விளாடிமிர் புடின். தற்பொழுது நடைபெறுகின்ற யுத்த வியூகங்களில் ஒரு வேளை ரஷ்யா வெற்றி பெற்று விட்டால் நெட்போலியன் போல அலெக்சாண்டர் போல வரலாற்றில் அழிக்க முடியாத ஒரு இடத்தை நிரந்தரமாக பிடித்து விடும் விளாடிமிர் புடின் என்ற பெயர் தற்போதைய யுத்த நகர்வுகளில் ரஷ்யா ஒருவேளை பின்னடைவை சந்தித்துவிட்டால் மனித உயிர்கள் பலவற்றை அழிவின் பாதைக்குள் கொண்டு சென்ற ஹிட்லர் முசோடின் வரிசையில் விளாடிமிர் புடின் பெயரும் வரலாற்றில் கறுப்பு பக்கங்களில் இடம்பிடித்து விடும். இன்றைய உலக வரலாற்றில் தவிர்க்கமுடியாமல் இடம்பிடிக்க இருக்கின்ற விளாடிமிர் புடின் என்ற மனிதர் பற்றி தான் விரிவாக நாம் பார்க்க இருக்கின்றோம்.

புடின் என்ற மனிதர் இல்லாது ரஷ்யா கிடையாது. ரஷ்யா அதிபரின் ஹிரம்ளின் மாளிகை அலுவலகர்களின் துணைத்தலைவரது கருத்து இது. அவருடையது மட்டுமல்ல பல தசாப்தங்களாக ரஷ்யாவின் அதிகாரத்தை கையாளும் பொறுப்பிற்கு விளாடிமிர் புடினை தேர்ந்தெடுத்துவரும் பல மில்லியன் ரகூஷ்ய மக்களின் கருத்தும் இதுவாகத்தான் இருக்கின்றது. ரஷ்யாவில் 21 ஆம் நூற்றாண்டில் பிறந்தவர்களை பொறுத்தவரையில் விளாடிமிர் புடினை மட்டுமே அவர்கள் உயர் அதிகாரம் கொண்ட ஒரு தலைவராக பார்த்து வருகின்றார்கள். 1999 ஆம் ஆண்டு பிரதமராக நியமிக்கப்பட்ட விளாடிமிர் புடின் 2000 ஆம் ஆண்டு முதல் 2008 ஆம் ஆண்டு வரை 8 வருடங்கள் அதிபராகவும் 2008 ஆம் ஆண்டு முதல் 2012 ஆம் ஆண்டு வரை 4 வருடங்கள் பிரதமராகவும் மீண்டும் 2012 ஆம் ஆண்டு முதல் தற்பொழுது வரை 10 வருடங்கள் அதிபராகவும் மொத்தத்தில் 22 வருடங்கள் ரஷ்யாவை ஆண்டு வழிநடத்தும் ஆளுமையாக தொடர்ந்தும் பதவியில் இருந்து வருகின்றார். மீண்டும் தேர்தலில் போட்டியிடுவேன் என்று அதிபர் புடின் இது வரையிலும் விருப்பம் தெரிவிக்கவில்லை என்றாலும் அவர் தொடர்ந்து தலைமைப் பதவியிலே இருப்பார் என்று அடித்து கூறுகின்றார்கள் ரஷ்யாவின் ஆய்வாளர்கள். 2018 ஆம் ஆண்டு இறுதியாக அவர் தேர்தலை சந்தித்த பொழுது 76 சதவீத வாக்குகளுடன் தனது அதிகாரத்தை நிலைநிறுத்திக்கொண்டார். இது எதிர்காலத்தில் ரஷ்யாவின் புடினின் நிலை எப்படியாக இருக்கும் என்பதனை வெளிப்படுத்துவதாக இருக்கின்றது. ரஷ்யா மக்களின் அமோக ஆதரவை தனதாக கொண்ட ஒரு தலைவராகவே புடின் ரஷ்யாவில் வலம் வந்து கொண்டிருக்கின்றார். கொமினீசிய சித்தார்ந்தத்திற்கும் மேற்கத்தைய நாடுகளுக்கும் இடையிலான மறைமுக கோடு தான் விளாடிமிர் புடின் ரஷ்யா மக்களின் மனங்களிலும் அரசியல் பதவிகளிலும் தொடர்ந்து நீடிப்பதற்கான பிரதான காரணம் என்று கூறப்படுகின்றது. உக்ரைன் விவகாரத்தில் உலக நாடுகளை சமாளித்து ஒரு சாதனையை மட்டும் புடின் நிகழ்த்தி விட்டால் ஸ்டாலினை போல ரகூஷ்யாவின் மற்றுமொரு சரித்திர நாயகனாக ரஷ்ய வரலாற்றில் புடினும் இடம்பிடித்து விடுவார் என்பதில் சந்தேகம் இல்லை. விளாடிமிர் புடின் சோவியத் ஒன்றியத்தின் உளவுப்பிரிவில் பணியாற்றிய அதிகாரி என்பதனால் அவரது சிந்தனைக்கோணங்கள் எப்பொழுதும் வித்தியாசமாக துணிநோக்கு பார்வை கொண்டதாக அடைய முடியாது என்பதனை அடைந்துவிடுவதாக இருப்பதாக கூறுகின்றார்கள் நோக்கர்கள்.

1989ஆம் ஆண்டு புரட்சியின் போது விளாடிமிர் புடின் கிழக்கு ஜேர்மனியின் கே.ஜி.பி உளவுப் பிரிவின் அதிகாரியாக பணியாற்றிக்கொண்டிருந்தார் அப்பொழுது அது கொம்னீசிய கிழக்கு ஜேர்மனியாக இருந்தது. பெரியளவிலான போராட்டங்களினால் சுவர் இடிக்கப்பட்டு இரும்புத்திரை விலக்கியது சோவியத் யூனியன் என்பது சிதைவடைந்து பல நாடுகளாக பிரிந்த நிலையில் மொஸ்வோவில் தலைமைப்பதவிக்கு ஏற்பட்ட வெற்றிடம் இவைகள் புடினது மனதை பாரிய மாற்றங்களை உருவாக்கின. 1989 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் கிழக்கு ஜேர்மனியில் கே.ஜி.பி தலைமையகத்தை போராட்டகாரர்கள் முற்றுகையிட்ட பொழுது அந்த நேரத்தில் அங்கு கடமையாற்றிக்கொண்டிருந்த புடின் தங்களை காப்பாற்றும் படி மொஸ்கோவிடம் உதவி கோரினார். மொஸ்கோவில் பதவியில் இருந்தவர் அமைதியாக இருந்தமை புடினது மனதில் பெரிய பாதிப்பை ஏற்படுத்தியிருந்தது. நிலைமையை எப்படி சமாளிக்க வேண்டும் என்ற அறிவுறுத்தல் கூட மொஸ்கோவில் இருந்து கிழக்கு ஜேர்மனிக்கு வழங்கப்படவில்லை. சர்ச்சைக்குரிய இரகசிய அறிக்கைகளை அழிக்கும் முயற்சிகளை தாமாகவே அவர் முன்னெடுத்துக்கொண்டார் அடுப்பே வெடித்துவிடுமளவிற்கு ஆவணங்களை நாங்கள் தீயில் போட்டு எரித்தோம் என அந்த சம்பவத்தை பிற்காலத்தில் நினைவுகூறியிருந்தார் புடின். சுயமாக தீர்மானம் எடுக்கும் ஒரு தலைவராக புடினை தருணம் என்று அந்த சம்பவத்தை குறிப்பிடுகின்றார்கள் நோக்கர்கள். புடின் கிழக்கு ஜேர்மனிக்கு மாத்திரம் போகாமல் இருந்திருந்தால் வேறுமாதிரியான புடினையும் வேறுமாதிரியான ரஷ்யாவையும் தான் நாம் பார்த்திருப்போம் என்று கூறுகின்றார்கள். புட்டினின் வாழ்க்கை குறிப்பை எழுதும் எழுத்தாளர்கள். சோவியத் யூனியன் சிதைவடைந்ததை தொடர்ந்து சொந்த ஊரான லினின் கிராடுக்கு திரும்பிய புடின் ஒரே நாளில் அந்த பிராந்தியத்தின் ஆளுநனர் வலது புறமாக மாறினார். கலைக்கப்பட்ட கிழக்கு ஜேர்மனியில் தனிப்பட்ட நபர்களுடன் புடினுக்கு தொடர்பு இருந்தது. அவர்கள் அங்கு செயற்படுவதற்கான வாய்ப்புக்கள் இல்லை என்றாலும் புதிய ரஷ்யாவில் மிகுந்த செல்வாக்கு செலுத்தக்கூடியவர்களாகவே அவர்கள் காணப்பட்டார்கள். அப்பொழுதிருந்து அந்த செல்வந்தர்களின் பிரமுகர்களின் உதவியுடன் விளாடிமிர் புடினின் வாழ்க்கை மேல் நோக்கியே சென்று கொண்டிருந்தது. ஒரு சந்தர்ப்பத்தில் ஆளுநர் எதிர்பாராமல் சரிவை சந்தித்த பொழுதும் புடின் மட்டும் தாக்குப்பிடித்தார். புதிய ரஷ்யாவின் மேற்தட்டு வர்க்கத்தினருடன் வெற்றிகரமாக அவர் தொடர்புகளை ஏற்படுத்திக்கொண்டார். அந்த சமயத்தில் ரஷ்ய கூட்டமைப்பின் புதிய அதிபராக ஒரிஸ்யஸ் இருந்தார். பழைய கொம்னீசிய கட்சியை அவரது ஆட்சி நிர்வாகம் தள்ளியே வைத்திருந்தது. செல்வந்தர்களுடன் ஏற்பட்ட கூட்டணி காரணமாக ஆட்சி மாற்றத்தின் இடைப்பட்ட காலத்தில் சொத்து மற்றும் செல்வாக்கை ஈட்டிக்கொள்ள முற்பட்டவர்களின் கூட்டணி காரணமாக அந்த சூழ்நிலை ஏற்பட்டது. பல தொழில் அதிபர்கள் கிர்சனின் ஆதரவாளர்களாக மாறினார்கள். ரஷ்யாவின் உளவுத்துறையில் நீண்ட காலம் பணியாற்றியதன் காரணமாக மக்களின் உளவியலை கணிப்பிட்டு அந்த உளவியல் மாற்றங்களை ஏற்படுத்தும் நுணுக்கத்தை கற்றறிந்து இருந்த விளாடிமிர் புடின் ரஷ்யாவில் தேர்தல்கள் வந்த பொழுது அந்த மக்களின் எண்ணங்களில் மாற்றத்தை ஏற்படுத்தும் வகிபாகத்தை மிகக் கவனமாக வெற்றிகரமாக வகிக்க ஆரம்பித்தார்.

தேர்தல் காலங்களில் ரஷ்ய மக்கள் மத்தியில் கருத்துக்களை உருவாக்கும் சக்திமிக்கவராகவும் விளாடிமிர் புடின் மாறியிருந்தார். இதன் காரணமாக அந்த தேர்தலில் வெற்றிபெற்ற மொரஸ்யஸ்யின் 1999 ஆம் ஆண்டின் ரஷ்யாவின் பிரமராக விளாடிமிர் புடினை நியமித்தார். மொரஸ்யஸ்யின் அணுகுமுறைகளில் பல தவறுகள் அதிகரித்தன மக்களின் வெறுப்பிற்கு உள்ளானார். அதனால் 1999 ஆம் ஆண்டு டிசம்பர் 31 ஆம் திகதி அவர் தனது பதவியை விட்டு விலகினார். ரஷ்யாவின் முக்கிய பணக்காரர்களின் ஆதரவினை பெற்றிருந்த புடின் மிகச்சரியாக தன்னை தற்காலிக அதிபராக உருவாக்கிக்கொண்டார். பின்னர் 2000 ஆம் ஆண்டு மார்ச் மாதம் இடம்பெற்ற அதிகாரபூர்வமான தேர்தலில் அதனை தக்கவைத்துக்கொண்டார். மொரஸ்யஸ்யின் அரசியல் குடும்பத்தை சேர்ந்தவர்கள். பணக்காரர்கள் மற்றும் சீர்திருத்தவாதிகளுக்கு புதிய அதிபர் விளாடிமிர் புடினை நன்றாக பிடித்துப்போனது. மக்களுடன் கலந்து பழகக்கூடியவர். தெளிவற்ற நிலையில் இருந்து ஆட்சியையும் ரஷ்யாவையும் மீட்கக்கூடியவர். வளைந்து கொடுக்கக்கூடியவர் தங்களது எண்ணங்களுக்கு நிலைப்பாடுகளுக்கு வளைந்துகொடுப்பார். விளாடிமிர் புடினை பற்றி அவரது கருத்து இப்படித்தான் இருந்தது. ஆனால் புடினது பயணம் என்பது அவர்கள் நினைத்தபடி அமைந்திருக்கவில்லை. அதிகாரம் கரங்களுக்கு வந்ததும் புடினது உள்ளே மறைந்திருந்த அந்த உளவாளி மனிதன் வெளியே புறப்பட்டான். யாருமே எதிர்பார்க்காத யாருமே நினைத்துக்கூட பார்க்காத ஒரு புடின் வெளிப்பட்டான். ஆட்சிக்கு வந்த மூன்றே மாதங்களில் ஊடகங்களை தனது கட்டுப்பாட்டிற்கு கொண்டு வந்திருந்தார் புடின். இது பணக்காரர்களையும் ஹிரம்லின் மாளிகையையும் திகைப்பில் ஆழ்த்தியது எம் டீவி என்று மிகவும் பிரபல்யமான சுதந்திர தொலைக்காட்சி சேவை மூடப்பட்டது. மற்றைய ஊடக நிறுவனங்களில் சோதனைகள் நடைபெற்றன. செய்தி அறிக்கைகளை அரசு தணிக்கை செய்தது. இது தொடர இருக்கின்ற காலங்களில் புடினது ஆட்சி எப்படி இருக்கப்போகின்றது என்பதனை வெளிப்படுத்துவதாக இருந்தது. அத்தோடு புடினது ஆளும் தன்மையின் போக்கை காப்பவையாகவும் இருந்தன. ஊடகங்களை தனது கட்டுப்பாட்டில் கொண்டுவந்ததில் புதிய அதிபருக்கு இரண்டு ஆதாயங்கள் கிடைத்தன. செல்வாக்கு நிறைந்த பொறுப்புக்களில் இருந்து அதிகார பலம் வாய்ந்த விமர்சகர்களை நீக்க முடிந்தது. சத்திரிய போர் முதல் மொஸ்கோ பயங்கரவாத தாக்குதல் வரையிலான தகவல்களை ஒருங்கிணைவு செய்யவும் அவரால் முடிந்தது. அத்தோடு புடினது இந்த நகர்வானது அதிபர் மீதான அதிகாரிகளின் நன்மதிப்பை அதிகரிக்கவும் செய்தது. புதிய ரஷ்யா மற்றும் அதன் தலைவர்களுக்கு உலக அரங்கில் செல்வாக்குகள் அதிகரித்தன. அரசிற்கு புதிய எதிரிகள் யார் என்பதனை வரையறை செய்யவும் இந்த நடவடிக்கை புடினுக்கு பெரிதும் உதவியது. அப்பொழுதிருந்து ரஷ்யர்கள் இதை பார்க்க வேண்டும் என்று புடின் விரும்புகின்றாரோ அவற்றை மட்டுமே பார்த்து வருகின்றார்கள். ரஷ்யாவில் உள்ள 3000 தொலைக்காட்சி சேவைகளில் பெரும்பாலானவற்றில் செய்திகளே கிடையாது. அரசியல் நிகழ்வுகளுக்கு எதுவும் நடந்தால் அந்த செய்திகளை அரசு தீவிரமாக தணிக்கை செய்யும். தனக்கு மிகவும் நெருக்கமான அரசியல் தலைவர்களை ஆளுனர்களாக நியமித்து ரகூஷ்யாவின் 83 பிராந்தியங்களையும் புடின் தனது பூரண கட்டுப்பாட்டிற்கு கொண்டு வந்தார். ஆளுநர் பதவிகளுக்கு பிராந்திய அளவில் தேர்தல் நடத்தும் நடைமுறையை 2004 ஆம் ஆண்டு அவர் முற்றாகவே இல்லாமல் செய்தார். ஜனநாயக வழிமுறைகளை நீக்கி வருகின்றார் என்று ஒருபக்கம் புடின் மீது விமர்சனங்கள் எழுந்தாலும் மறுபக்கம் அதிகாரங்களை புடின் தனது கரங்களுக்குள் வைத்திருக்க அந்த நடைமுறை அவருக்கு பெரிதும் உதவியது. புடினது சர்வாதிகார நடவடிக்கைகளுக்கு எதிராக பாரிய போராட்டங்கள் ரஷ்யாவின் பல இடங்களிலும் நடைபெற்றன. 2011 ஆம் ஆண்டு முதல் 2013 ஆம் ஆண்டு வரையில் தலைநகர் மொஸ்கோ முதற்கொண்டு பல போராட்டங்கள் நடைபெற்றன.

நேர்மையான முறையில் தேர்தல் நடத்த வேண்டும் ஜனநாயக சீர்திருத்தங்கள் வேண்டும் என்பனவே போராட்டங்களின் முக்கிய அம்சங்களாக இருந்தன. 1990 களுக்கு பின்பு ரஷ்யாவில் நடைபெற்ற மிகப்பெரிய போராட்டங்கள் அவை. அயல் நாடுகளிலும் அப்பொழுது போராட்டங்கள் உருவாகி 1989 ஆம் ஆண்டு காலப்பகுதியை நினைவுபடுத்தியிருந்தன. பின்வாசல் வழியாக ரஷ்யாவினை ஆக்கிரமிக்க மேற்கத்தைய நாடுகள் செய்யும் சதியாக இந்த போராட்டங்கள் இருக்கின்றன என புடின் கருதினார் முள்ளை முள்ளாலே எடுக்க வேண்டும் என்று நினைத்த புடின் எதிரியினது வழியிலே சென்று அதனை கையாளும்படியான நகர்வை எடுத்தார். புடினது அணுகுமுறையில் ஒரு மாற்றம் தேவைப்பட்டது வெளித்தோற்றத்திற்கு அது தேவைப்பட்டது. தாராளமாக பரிசோதனையை சிலகாலத்திற்கு மேற்கொண்டார் புடின். அதிகாரப் பகிர்வை செய்வதாகவும் மாகாணங்களுக்கு அவற்றின் பொருளாதாரத்தில் கட்டுப்பாடுகள் அழிக்கப்படும் என்ற வாக்குறுதியையும் அளித்தார் புடின். அந்த காலகட்டங்களில் அவரது உரையில் சீர்திருத்தம் என்ற வார்த்தையை அதிகமாக பயன்படுத்தினார். ஆனால் சில காலங்கள் மாத்திரமே அவைகள் நீடித்தன. அச்சுறுத்தல் விலகியதும் அந்த அணுகுமுறை கைவிடப்பட்டது. உக்ரைனில் புரட்சிக்கு பிந்திய காலத்திலேயே அதிகாரத்தில் ஏற்பட்ட வெற்றிடம் புடின் தந்திரமாக நடவடிக்கை எடுக்க ஒருவாய்ப்பை கொடுத்தது. 2014 ஆம் ஆண்டு பெப்ரவரியில் திடீரென கிரீமியாவை கைப்பற்றியது தான் இதுவரையில் புடின் பெற்றவற்றிலேயே மிகப்பெரிய வெற்றியாக கருதப்படுகின்றது. மேற்கத்தைய நாடுகளுக்கு அதிர்ச்சியை ஏற்படுத்திய தோல்வியாக அது அமைந்து விட்டது. அயல் நாட்டை பிடித்துக்கொள்வதில் ரஷ்யா தனது பலத்தை காட்டிய பொழுது உலகத்தால் அதனை வேடிக்கை மட்டுமே பார்க்க முடிந்தது. உலகத்தை அந்த நிலைமையில் வைத்திருந்ததில் ரஷ்யா பெற்றிருந்த வெற்றி தான் புடினை ஒரு சிறந்த தலைவராக ரஷ்யர்களின் மனதில் நிலைநிறுத்திய தருணம் என்று கூறலாம். ரஷ்யா தனது பாதையை உருவாக்கிக்கொள்ள வல்லரசு நாடாகத்தான் இருக்க வேண்டும் என்ற அவசியம் இல்லை என்பதை புடின் புரிந்துகொண்டிருக்கின்றார் என்று கூறுகின்றார்கள் ஆய்வாளர்கள்.

11ஆம் பக்கம் பார்க்க...

–துரியோதரன்–

# பிராந்திய செய்திகள்

## வெளிநாடு செல்லுபவர்கள் இணையத்தளம் ஊடாக பதிவு செய்யும் வாய்ப்பு




தொழில் நிமித்தம் வெளிநாடு செல்லும் இலங்கையர்களுக்குபணியகத்தின் இணையத்தள முறைமையின் ஊடாக பதிவு செய்வதற்கான வாய்ப்பு தற்போது வழங்கப்பட்டுள்ளதாக வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் தெரிவித்துள்ளது.

www.slbfe.lk என்ற இணையத்தளத்தில் சுயப்பதிவை (online self registration) அணுகுவதன் மூலம் இந்தப் பதிவை மேற்கொள்ள முடியும் என பணியகம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலதிக தகவல்களை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் 1989 என்ற தொலைபேசி இலக்கத்தின் ஊடாக பெற்றுக்கொள்ள முடியும்.

## மரக்கறிகளின் விலை வீழ்ச்சி



பேலியகொட மெனிங் சந்தையில் மரக்கறிகளின் விலை வேகமாக வீழ்ச்சியடைந்துள்ளது. புத்தாண்டு காலத்தில் மரக்கறி விலைகள் மேலும் குறையலாம் என மெனிங் பொது தொழிற்சங்கத்தின் செயலாளர் சமிந்த பீரிஸ் குறிப்பிட்டார். நாட்டில் நிலவும் பொருளாதார நெருக்கடிகள் காரணமாக, நுகர்வோர் மரக்கறிகளை கொள்வனவு செய்வதை மட்டுப்படுத்தியுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

சில்லறை வியாபாரத்திற்காக தினமும் 50 கிலோ காய்கறிகளை கொள்வனவு செய்து வந்த வியாபாரி தற்போது 10 கிலோவையே கொள்வனவு செய்யும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார். முன்னைய பண்டிகை மாதங்களில் மரக்கறிகளின் விலை அதிகரித்திருந்த போதிலும், இந்த பொருளாதார சிரமங்களினால் கொள்வனவுகள் குறைந்துள்ளதால், மரக்கறிகளின் விலை குறையலாம் என அவர் மேலும் தெரிவித்தார்.

## 10 அத்தியாவசிய பொருட்களின் விலைகள் குறைப்பு

10 அத்தியாவசிய பொருட்களின் விலைகளை குறைக்க லங்கா சதொச நிறுவனம் தீர்மானித்துள்ளது.

இதன்படி உள்நாட்டு சம்பா, வெள்ளைப்பூண்டு, வெள்ளை சீனி, கடலைப் பருப்பு, உள்நாட்டு உருளைக்கிழங்கு, பெரிய வெங்காயம், ரின் மீன், கடலை, நெத்தலி மற்றும் காய்ந்த மிளகாய் ஆகிய அத்தியாவசிய உணவுப் பொருட்களின் விலைகள் குறைக்கப்பட்டுள்ளன.

குறித்த விலை விபரங்கள் பின்வருமாறு...

**காய்ந்த மிளகாய் கிலோ ஒன்றுக்கு 120 ரூபாய் குறைக்கப்பட்டு 1,380 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படவுள்ளது.**

**ஒரு கிலோகிராம் வெள்ளைப்பூண்டின் விலை 25 ரூபாவினால் குறைக்கப்பட்டு, 450 ரூபாவுக்கும்,**

**ஒரு கிலோகிராம் நெத்தலியின் விலை 25 ரூபாவினால் குறைக்கப்பட்டு, ஆயிரத்து 100 ரூபாவுக்கும்**

**ஒரு கிலோகிராம் கடலையின் விலை, 15 ரூபாவினால் குறைக்கப்பட்டு, 555 ரூபாவுக்கும்,**

**ஒரு கிலோகிராம் உள்நாட்டு சம்பா அரிசியின் விலை 11 ரூபாவால் குறைக்கப்பட்டு, 199 ரூபாவுக்கும்,**

**ஒரு கிலோகிராம் வெள்ளை சீனியின் விலை, 7 ரூபாவினால் குறைக்கப்பட்டு, 210 ரூபாவுக்கும்,**

**ஒரு கிலோகிராம் கடலைப் பருப்பின் விலை, 7 ரூபாவினால் குறைக்கப்பட்டு, 298 ரூபாவுக்கும்,**

**ஒரு கிலோகிராம் உள்நாட்டு உருளைக்கிழங்கின் விலை, 10 ரூபாவினால் குறைக்கப்பட்டு, 270 ரூபாவுக்கும்,**

**ஒரு கிலோகிராம் பெரிய வெங்காயத்தின் விலை, 10 ரூபாவினால் குறைக்கப்பட்டு 119 ரூபாவுக்கும்**

**425 கிராம் ரின் மீனின் விலை, 10 ரூபாவினால் குறைக்கப்பட்டு, 520 ரூபாவுக்கும் விற்பனை செய்யப்படவுள்ளதாக சதொச நிறுவனம் அறிவித்துள்ளது.**

## வாகன இறக்குமதிக்கான தடை தளர்த்தப்படும்

நாட்டில் டொலர் கையிருப்பு அதிகரித்துள்ள நிலையில், வாகனங்களை இறக்குமதி செய்வதற்கு தேவையான அனுமதிகளை வழங்குமாறு அரசாங்கத்திடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாக இலங்கை வாகன இறக்குமதியாளர்கள் சங்கத்தின் செயலாளர் பிரசாத் குலதுங்க தெரிவித்துள்ளார். மத்திய வங்கியின் ஆளுனர் மற்றும் நிதி அமைச்சிடம் கோரிக்கை விடுக்கப்பட்ட போதிலும், இதுவரை வாகன இறக்குமதி செய்வதற்கான அனுமதி கிடைக்கவில்லையெனவும் குலதுங்க குறிப்பிட்டுள்ளார்.

வாகன இறக்குமதிக்கான தடை இவ்வருட வரவுசெலவுத் திட்டத்தில் தளர்த்தப்படும் என வாகன இறக்குமதியாளர்கள் எதிர்பார்ப்பதாக அவர் தெரிவித்துள்ளார். மூன்று வருடங்களாக வாகனங்கள் இறக்குமதி செய்யப்படாமையால் பாவனையாளர்களும் வாகன இறக்குமதியாளர்களும் கடும் சிரமங்களை எதிர்நோக்கி வருவதாக அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.



## பால் தேநீரின் விலையை குறைக்க தீர்மானம்

ஏப்ரல் மாத தொடக்கத்தில் இருந்து பால் தேநீர் ஒன்றின் விலை 10 ரூபாவினால் குறைக்கப்படும் என அகில இலங்கை சிற்றுண்டிச்சாலை உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

தற்போது ஒரு பால் தேநீரின் விலை 100 ரூபாவாக உள்ளது.

ஏப்ரல் மாத தொடக்கத்தில் இருந்து ஒரு கிலோகிராம் பால் மாவின் விலை 200 ரூபாவினாலும் 400 கிராம் ஒன்றின் விலை 80 ரூபாவினாலும் குறைக்கப்படும் என பால்மா இறக்குமதியாளர்கள் மன்றம் அறிவித்திருந்தது.

இந்நிலையில், பால் தேநீரின் விலையும் குறைக்கப்படும் என அகில இலங்கை சிற்றுண்டிச்சாலை உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.



## கச்சதீவிலுள்ள புத்தர் சிலைகள் அகற்றப்பட வேண்டும்



இரு நாடுகளின் அடையாள சின்னமாக விளங்கும் கச்சதீவு பகுதியிலுள்ள புத்தர் சிலைகள் அகற்றப்பட வேண்டும் என கச்சதீவு யாத்திரை தல பரிபாலகர் அருட்பணி வசந்தன் அடிகளார் கோரிக்கை விடுத்தார். கச்சதீவில் பௌத்த சின்னங்களில் புத்தர் சிலை வைக்கப்பட்டமை தொடர்பான புகைப்படங்கள் வெளியான நிலையில் இன்றையதினம் கருத்து தெரிவித்த போதே இதனை தெரிவித்தார். மேலும் தெரிவிக்கையில், கச்சதீவு என்றாலே தமிழக மக்களுக்கும் இலங்கை தமிழ் மக்களுக்கும் ஏன் அண்மைய காலமாக சிங்கள மக்களுக்கும் ஞாபகத்துக்கு வருவது புனித அந்தோனியார் ஆலயமே. கச்சதீவு அந்தோனியாருக்காக அர்ப்பணிக்கப்பட்ட தீவாக தொன்றுதொட்டு காணப்படுகின்றது. ஆனால் திட்டமிட்ட வகையில் அண்மைய நாட்களில் இரண்டு புத்த பெருமானின் சிலைகள் வைக்கப்பட்டதுடன் அரச மரக்கன்றுகளும் நாட்டப்பட்டுள்ளது.

யாருக்கும் தெரியாத வகையில் உயரமாக பனை ஓலைகளால் வேலியமைத்து அது மூடப்பட்டு காணப்படுகின்றமையை சில நாட்களுக்கு முன்னர் பார்த்த புகைப்படங்கள் மூலம் அறியக்கிடைத்தது. எதிர்காலத்தில் வரலாற்றை திரிபுபடுத்துவதற்கான முயற்சியே இது. கச்சதீவில் புனித அந்தோனியார் ஆலயம் மட்டுமே இருக்கின்றது. அங்கு 7 தொடக்கம் 10 வரையான கடற்படையினர் கடமையாற்றுகின்றனர். அவர்கள் வழிபட சிறியதான புத்தர் சிலையை வைத்து வழிபடலாம். ஆனால் இவ்வளவு பெரிய புத்தர் சிலைகள் எதற்கு? அதை ஏன் மறைத்து வைத்திருக்க வேண்டும். கச்சதீவில் எந்தப்பகுதியிலும் அரச மரங்கள் இல்லை. ஆனால் திட்டமிட்ட வகையில் அரசமரங்கள் நாட்டப்பட்டுள்ளது. வடகிழக்கு தமிழர் பகுதியில் பௌத்த திணிப்பு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுகின்றது. போருக்கு பின்னர் இன ஒற்றுமை பற்றி பேசப்படும்போது இவ்வாறான விடயங்கள் நிறுத்தப்பட வேண்டும். இரு நாடுகளின் அடையாள சின்னமாக விளங்கும் கச்சதீவு பகுதியிலுள்ள இவ்வாறான விடயங்கள் அகற்றப்பட வேண்டும். கச்சதீவு அந்தோனியார் ஆலயத்தின் புனிதத்திற்கும் தனித்துவத்திற்கும் பாதிக்காத வகையில் புத்தர் சிலைகள் அகற்றப்பட வேண்டும் என்றார்.

# சினி துளிகள்





## என் திறமையை கண்டுபிடித்தது வெற்றிமாறன் தான் - நடிகர் சூரி



வெற்றிமாறன். தற்போது சூரி கதாநாயகனாக நடிக்கும் "விடுதலை" படத்தை இயக்கியுள்ளார். எழுத்தாளர் ஜெயமோகனின் துணைவன் என்கிற சிறுகதையை மையமாக வைத்து இப்படம் உருவாகி வருகிறது. விஜய் சேதுபதி இப்படத்தின் முக்கிய கதாபாத்திரத்தில் நடிக்கிறார்.இளையராஜா இசையமைக்கும் இப்படத்தை ஆர்.எஸ் இன்ஃபோடெயின்மென்ட் சார்பில் எல்ரெட் குமார் தயாரிக்கிறார்.

இப்படம் வருகிற மார்ச் 31-ஆம் திகதி திரையரங்குகளில் வெளியாகவுள்ளது. இதையடுத்து "விடுதலை" படத்தின் கதாநாயகன் சூரி மாலை மலர் நேயர்களுக்காக பிரத்யேகமாக பேட்டி அளித்தார். "விடுதலை" படம் குறித்தும் அந்த படத்தில் நடித்த அனுபவம் குறித்தும் பல விஷயங்களை பகிர்ந்துள்ளார். அதில். இயக்குனர் வெற்றிமாறனுக்கு பெரிய நன்றி சொல்ல வேண்டும்.

ஏனென்றால். நம்மிடம் இப்படி ஒரு திறமை இருக்கிறது என்பதை நாம் கண்டுபிடிப்பதற்கு முன்பு இன்னொருவர் கண்டுபிடிக்கிறது பெரிய விஷயம். என்னிடம் இருக்கிற இந்த குமரேசனை கண்டுபிடித்ததற்கு வெற்றிமாறன் அண்ணாவிற்கு பெரிய நன்றி. இதற்கான தகுதியை ஏற்படுத்திய எனக்கும் நான் நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன் என பல விஷயங்களை பகிர்ந்துள்ளார்.

## மூத்த நடிகையுடன் பசங்க பட நடிகர் கிஷோர் திருமணம்!

பசங்க படத்தில் வரும் முக்கிய கதாபாத்திரத்தில் நடித்தவர் தான் கிஷோர். அவர் சன் டிவியின் வானத்தை போல சீரியல் புகழ் நடிகை ப்ரீத்தி குமாரை காதலித்து வருவதாக சில மாதங்களுக்கு முன்பு அதிகாரபூர்வமாக அறிவித்தனர்.

கிஷோரை விட ப்ரீத்தி குமாருக்கு 4 வயது அதிகம் என்பதால் சமூக வலைதளங்களில் விமர்சனம் எழுந்தது. அதற்கு பதிலடி கொடுக்கும் வகையில் இருவரும் தாங்கள் ஜோடியாக இருக்கும் போட்டோக்களை வெளியிட்டனர். தற்போது கிஷோர் மற்றும் ப்ரீத்தி குமார் திருமணம் நடந்து முடிந்திருக்கிறது. அதன் புகைப்படங்கள் வெளியாகி இருக்கும் நிலையில் பிரபலங்கள் மற்றும் ரசிகர்கள் வாழ்த்து தெரிவித்து வருகிறார்கள்.

## இரண்டு கதாநாயகிகளுடன் ஜெய்




தமிழ் திரையுலகில் இளம் நடிகராக வலம் வரும் ஜெய் தன் இன்னசெண்ட் கதாபாத்திரங்கள் மூலம் ரசிகர்கள் மனதில் நீங்கா இடம் பிடித்தவர். தொடர்ந்து பல வெற்றி படங்களை கொடுத்த இவர் கடைசியாக இயக்குனர் சுந்தர் சி இயக்கத்தில் நடித்திருந்த 'காபி வித் காதல்' திரைப்படம் கடந்த ஆண்டு வெளியாகி கலவையான விமர்சனங்களை பெற்றது. இதையடுத்து. இவர் தற்போது இயக்குனர் ரோகின் இயக்கத்தில் புதிய படம் ஒன்றில் நடிக்கிறார். இந்த படத்தில் ஐஸ்வர்யா ராஜேஷ். ஷிவதா ஆகியோர் கதாநாயகிகளாக நடிக்கின்றனர். லைகா நிறுவனம் தயாரிக்கும் இப்படத்திற்கு சித்து குமார் இசையமைக்கிறார். ரவிவர்மன் நீலமேகம் ஒளிப்பதி செய்யும் இப்படத்திற்கு பிரசன்னா ஜி.கே. படத்தொகுப்பு மேற்கொள்கிறார்.

இந்நிலையில். இப்படத்தின் டைட்டில் குறித்த அறிவிப்பு வெளியாகியுள்ளது. அதன்படி. இப்படத்திற்கு 'தீராக்காதல்' என படக்குழு தலைப்பு வைத்துள்ளது. மேலும். இது தொடர்பான முதல் தோற்ற போஸ்டரையும் படக்குழு வெளியிட்டுள்ளது. முன்னணி நிறுவனமான லைகா நிறுவனத்துடன் ஜெய் கைக்கோர்த்துள்ளது படத்தின் மீதான எதிர்பார்ப்பை ரசிகர்கள் மத்தியில் அதிகரித்துள்ளது.

## முதல்கட்ட படப்பிடிப்பை நிறைவு செய்த 'லியோ'

லோகேஷ் கனகராஜ் இயக்கத்தில் விஜய் நடிப்பில் உருவாகி வரும் திரைப்படம் 'லியோ' (Leo-Bloody Sweet). இப்படத்தை செவன் ஸ்கிரீன் ஸ்டூடியோஸ் சார்பில் லலித் குமார் தயாரிக்க. அனிருத் இசையமைக்கவுள்ளார்.

இப்படத்தில் நடிகை திரிஷா. நடிகர் அர்ஜீன். பாலிவுட் நடிகர் சஞ்சய் தத். நடிகை பிரியா ஆனந்த். மன்சூர் அலிகான். இயக்குனர்கள் மிஷ்கின். கௌதம் வாசுதேவ் மேனன். டான்ஸ் மாஸ்டர் சாண்டி. மலையாள நடிகர் மேத்யூ தாமஸ் ஆகியோர் முக்கிய கதாபாத்திரத்தில் நடிக்கின்றனர். இப்படத்தின் படப்பிடிப்பு காஷ்மீரில் விறுவிறுப்பாக நடைபெற்று வருகிறது.

இந்நிலையில். இப்படத்தின் புதிய அப்டேட் வெளியாகியுள்ளது. அதன்படி. 'லியோ' படத்தின் முதல் கட்ட படப்பிடிப்பு நிறைவடைந்துள்ளது. இதனை படக்குழு வீடியோ ஒன்றை வெளியிட்டு அறிவித்துள்ளது. காஷ்மீர் படப்பிடிப்பு குறித்து தொழில்நுட்ப பணியாளர்கள் தங்களது கருத்துகளை பகிரும் இந்த வீடியோ சமூக வலைதளத்தில் ட்ரெண்டாகி வருகிறது.



## கவனம் ஈர்க்கும் 'ரெய்டு' பட டீசர்




வித்தியாசமான கதைக்களங்களை தேர்ந்தெடுத்து நடித்து வரும் விக்ரம் பிரபு அடுத்ததாக 'ரெய்டு' திரைப்படத்தில் நடித்துள்ளார்.

இப்படத்தில் நடிகை ஸ்ரீதிவ்யா முக்கிய கதாபாத்திரத்தில் நடித்துள்ளார்.

இயக்குனர் கார்த்தி இயக்கத்தில் உருவாகி வரும் இப்படத்திற்கு இயக்குனர் முத்தையா வசனம் எழுதியுள்ளார்.

ஓபன் ஸ்கிரீன் பிக்சர்ஸ். எம் ஸ்டூடியோஸ் மற்றும் ஜி பிக்சர்ஸ் இணைந்து தயாரித்துள்ள இப்படத்திற்கு சாம் சி. எஸ். இசையமைத்துள்ளார்.

இந்நிலையில் இப்படத்தின் ஃபர்ஸ்ட்லுக் போஸ்டர் சமீபத்தில் வெளியாகி கவனம் பெற்றது. இந்நிலையில். இப்படத்தின் புதிய அப்டேட் வெளியாகியுள்ளது.

அதன்படி. இப்படத்தின் டீசர் தற்போது வெளியாகியுள்ளது. அதிரடி ஆக்ஷன் காட்சிகள் நிறைந்துள்ள இந்த டீசரை ரசிகர்கள் இணையத்தில் அதிகம் பகிர்ந்து வருகின்றனர்.

## இரு சென்சேஷன் நடிகைகளுடன் ஜோடி சேரும் பிரதீப்

கடந்த ஆண்டு லவ் டுடே படத்தின் மூலம் தென்னிந்திய சினிமாவையே திரும்பி பார்க்க வைத்தவர் இயக்குனர் பிரதீப் ரங்கநாதன். கோமாளி படத்தின் இயக்குனராக அறிமுகமான இவர் தற்போது லவ் டுடே படத்தின் மூலம் நடிகராகவும் களமிறங்கினார். இப்படத்தின் வெற்றியை தொடர்ந்து பிரதீப் ரங்கநாதனுக்கு பல பட வாய்ப்புகள் தேடி வருகிறது.

விக்னேஷ் சிவன் இயக்கத்தில் நடிக்க போகிறார். அதிதி ஷங்கருக்கு ஜோடியாக கொரோனா குமார் படத்தில் நடிக்கவுள்ளார் என தொடர்ந்து பல செய்திகள் வெளியாகிறது. இந்நிலையில். பிரதீப் ரங்கநாதன் அடுத்ததாக மிதுன் எனும் அறிமுக இயக்குனரின் இயக்கத்தில் நடிக்க திட்டமிட்டுள்ளார் என தகவல் வெளியாகியுள்ளது. மிதுன் ஏ.ஆர். முருகதாஸின் உதவி இயக்குனர் ஆவர்.

இப்படத்தில் பிரதீப் ரங்கநாதன் சென்சேஷன் கதாநாயகிகளாக இருக்கும் ராஷ்மிகா மற்றும் பிரியங்கா மோகன் இருவருடன் இணைந்து நடிக்கவுள்ளாராம். மேலும் இப்படத்திற்கு ஏ.ஆர். ரஹ்மான் இசையமைக்கவுள்ளார் என தெரிவிக்கின்றனர். விரைவில் இப்படத்திற்கான அதிகாரப்பூர்வமான அறிவிப்பு வெளியாகும் என எதிர்பார்க்கப்படுகிறது.

# மாவிலாறு மகிந்தவும் முள்ளிவாய்க்கால் பிரபாகரனும் நடந்தது என்ன?



சுழியோடி

13



மட்டக்களப்பில் இருந்து பின்வாங்கியிருந்த புலிகளின் அணிகள் அம்பாறை காடுகளில் நிலைகொண்டிருந்த படி இராணுவ கட்டுபாட்டு பகுதிகளுக்குள் நுழைந்து தாக்குதல்களை மேற்கொள்கிறார்கள். குறிப்பாக சிறிலங்காவின் தென்பகுதியில் உள்ள இராணுவ முகாம்களும் விடுதலைப்புலிகளின் தாக்குதலுக்கு இலக்காகி இருந்தன. இதன் போது முழுமையான சிங்கள பிரதேசமாக இருந்த புத்தல (மாவீரர் தினமான (27) திகதி உலங்குவானுர்தி விழுந்து நொறுங்கிய இடம்) என்ற பகுதியில் அமைந்திருந்த இராணுவ முகாம் ஒன்றையும் வெற்றிகரமாக தாக்கி அழித்திருந்தார்கள். இவ்வாறு சிறு சிறு தாக்குதல்களை தென்பகுதியில் நடத்துகின்றார்கள். இந்நிலையில் அம்பாறை காட்டுக்குள் இருக்கும் விடுதலைப்புலிகளைத் தேடி அளிக்கும் நடவடிக்கையில் சிறிலங்கா படையினர் இறங்குகிறார்கள்.

அம்பாறையில் விடுதலைப்புலிகளின் நிர்வாக பகுதியாக கஞ்சிகுடிச்சாறு காணப்படுகிறது. அத்துடன் கஞ்சிகுடிச்சாரில் படையினருக்கும் விடுதலைப்புலிகளுக்கும் மோதல் என்று அடிக்கடி நீங்கள் செய்திகள் கேள்விப்படும் அளவிற்கு சிறிலங்கா படையினருடன் பல சண்டைகளை சந்தித்த மண்ணாகவும் கஞ்சிகுடிச்சாறு காணப்படுகிறது. இப்பகுதியில் பெருமளவான மக்கள் விடுதலைப்புலிகளின் நிர்வாக பகுதிக்குள் வாழ்ந்து வந்தார்கள். சிறிலங்கா படையினர் கஞ்சிகுடிச்சாறு பகுதி மீது பெரும் படையெடுப்பை செய்தார்கள் இதன்போது கட்டுப்பாட்டு பிரதேசம் இழக்கபட்டு கஞ்சிகுடிச்சாறு நுவாஸ் குளப்பகுதிகள் படையினரால் ஆக்கிரமிக்கப்படுகின்றன. அக்கிராமங்களில் வாழ்ந்த மக்கள் படையினரால் பிடிக்கபட்டு முகாம்களுக்கு கொண்டு செல்லப்படுகிறார்கள். இவர்களில் பலர் பின்பு காணாமல் போயிருந்தார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

இதன் போது இராணுவத்தினரின் ஆக்கிரமிப்பின் போது மக்களில் பலர் விடுதலைப்புலிகள் நிலைகொண்டிருந்த காடுகளுக்குள்ளும் வந்தார்கள். காடுகளுக்குள் மக்களும் இடம் பெயர்ந்து வந்ததினால் படையினருடன் பாரிய மோதல்களை எதிர்கொள்ள முடியாத நிலை எனவே தாக்குதலை குறைப்பதற்காக அம்பாறை மட்டக்களப்பு காடுகளுக்குள் இருக்கும் விடுதலைப்புலிகளின் குறிப்பிட்ட தொகையினர் வன்னி நோக்கி அனுப்பப்படுகின்றார்கள்.

இதன் போது வன்னியில் இருந்தும் ஒரு அணி கிழக்கிற்கு அனுப்பப்படுகிறது. இது காட்டு தாக்குதல்களில் சிறப்பு பயிற்சி பெற்றிருந்த ஒரு அணியாக இருந்தது. காட்டுபகுதிகளில் குறிப்பாக அம்பாறையின் எல்லை கிராமங்களாக அமைந்திருந்த கதிர்காமம் புத்தல அம்பாந்தோட்ட பகுதிகளில் சிறு சிறு தாக்குதல்களை கிளைமோர் தாக்குதல்கள் படையினர் மீது மேற்கொள்ளப்படுகின்றன. படையினருக்கு இதனால் பாரிய இழப்புக்கள் ஏற்பட தொடங்கியிருந்த நிலையில் காடுகளுக்குள் விடுதலைப்புலிகளை தேடியழிக்கும் நடவடிக்கையில் ஈடுபடுகிறார்கள். அம்பாறை காட்டுக்குள் விடுதலைப்புலிகளை தேடி புறப்பட்ட சிறப்பு அதிரடிப்படையினருக்கு கண்ணிவெடிகளும் மிதிவெடிகளும் பலத்த வரவேற்பை அளித்தன. தொடர்ச்சியாக வாங்கிய பலமான அடியால் சிறப்பு அதிரடி படையினர் அம்பாறை காடு பெரும் காடு இக்காட்டில் தேடுதல் நடவடிக்கையில் ஈடுபடுவதென்பது கடினமானது என்று கூறி தொடர்ச்சியாக ஈடுபடுவதற்கு மறுக்கிறார்கள். இந்த சிக்கலை தவிர்க்க படையினர் ருபாஸ் குளப்பகுதி ஊடாக படையினர் காட்டுக்குள் நுளைகின்றார்கள். காட்டுக்குள் நுழைந்த படையினர் மீது விடுதலைப்புலிகள் சிறு சிறு குழுக்களாக சென்று தாக்குதலை நடத்துகின்றார்கள். அத்துடன் போராளிகள் காட்டுக்குள் பொருத்தி வைத்த பொறிவெடிகளில் படையினர் சிக்குகிறார்கள். படையினரை திகப்புற வைக்கும் தாக்குதல்கள் விடுதலைப்புலிகளால் நடத்தப்பட்டன.

இழப்புக்கள் அதிகமானதால் இந்த நடவடிக்கையை கைவிட்ட படையினர். பின்பு எறிகணை தாக்குதல்களை காட்டினுள் கடுமையாக நடத்திய பின் காட்டுக்குள் நுழைகிறார்கள். இந்த நடவடிக்கையில் சிறிலங்கா படையணியின் சிறப்பு கொமாண்டோ தாக்குதல் அணியினர் ஈடுபடுத்தப்படுகிறார்கள். இந்த சண்டைகளின் போதும் விடுதலைப்புலிகளுக்கும் சிறு சிறு இழப்புக்கள் ஏற்படுகின்றன. அத்துடன் காட்டினை சுற்றிய படையினரின் முற்றுகையும் இறுகுகின்றது. இருந்தும் விடுதலைப்புலிகள் தளரவில்லை. காட்டில் இருக்கும் விடுதலைப்புலிகளுக்கு உணவுத்தட்டுப்பாடும் மருந்து தட்டுபாடும் காணப்படுகிறது. இருந்தும் உணவு பொருட்களை நீண்ட தூரம் மக்கள் வாழும் பகுதிகளுக்குல்லால் சென்று போராளிகள் சிலர் கொள்வனவு செய்கிறார்கள். இவ்வாறு பாரிய இடர்களை அங்குள்ள போராளிகள் எதிர்கொண்டபடி தான் படையினருக்கு எதிராக வியூகங்களை வகுத்து தாக்குதலை நடத்திக்கொண்டு இருந்தார்கள்.

கண்ணிவெடிகள் பொறி வெடிகள் கிளைமோர்கள் ஒருபக்கம் படையினருக்கு இழப்புக்களை ஏற்படுத்த நேரடி மோதல்களிலும் படையினர் கடுமையான இழப்புக்களை சந்திக்கின்றார்கள். தொடர்ச்சியான இழப்புக்களால் படையினர் சலிப்புற்று சோர்வடைந்த நிலையில் அவர்களின் தாக்குதல் திட்டம் மாற்றியமைக்கப்படுகின்றது. போராளிகள் சிறு சிறு அணிகளாக சென்று தாக்குதல் நடத்துவது போல் படையினர் சிறு சிறு அணிகளாக பிரிந்து காட்டினுள் தாக்குதலை நடத்த தொடங்கினார்கள். அவர்களின் ஆள் வளமும் ஆயுத வளமும் அதிகமாக இருந்ததால் பெருமளவு சிறு சிறு அணிகளை பல முனைகளுடாக இறக்கிவிடப்பட்டு இருந்தனர். குறிப்பிட்ட போராளிகளே நின்றிருந்த நிலையில் வரும் அணிகள் அனைத்தையும் சமாளிப்பது பெரும்பாடாக இருந்தது.


எனினும் போராளிகள் இல்லாத இடங்களில் பொருத்தி வைக்கப்பட்டு இருந்த கண்ணிவெடிகளும் பொறிவெடிகளும் படையினருக்கு இழப்பை ஏற்படுத்தி கொண்டிருந்தன. இதே வேளை இவ்வாறான வெடிப்பு சம்பவங்களின் போது அச்சம் காரணமாக படையினர் நடத்திய தாக்குதலில் அவர்களது சக படையினரே உயிரிழந்த சம்பவங்களும் நடைபெற்றன. இவைகள் அன்றைய காலப்பகுதியில் வெளியே வராமல் தடுக்கப்பட்டன. அதாவது கள முனைகளில் படையினருக்கு ஏற்பட்ட இழப்புக்களை விட அதிகமாக அம்பாறை காட்டிற்குள் இழப்புக்கள் ஏற்பட்டு இருந்தது என்பது மிகையானது அல்ல. இந்த இழப்புக்களால் ஒரு சில கரையோர காடுகளை சுற்றிவளைத்து தாக்குதல் நடத்திய படையினர் தமது தேடியழிக்கும் நடவடிக்கையை நிறுத்தி விட்டு எல்லைப்புற கிராமங்களில் முகாம்கள் கவலரங்கள் அமைத்து பாதுகாப்பை பலப்படுத்துகிறார்கள். இதனால் அம்பாறை மாவட்டத்தில் விடுதலைப்புலிகளின் தாக்குதல் நடவடிக்கைகள் சற்று குறைய தொடங்கின.



இந்த இறுக்கத்தை பயன்படுத்திய விடுதலைப்புலிகள் தாக்குதல்களை நன்றாக குறைத்து காட்டினுள் போராளிகள் குறைவடைந்து விட்டது போன்றதொரு நிலையை ஏற்படுத்துகின்றார்கள். அத்துடன் அதே காலப்பகுதியில் தமது இருப்பிடங்களை நிலைப்படுத்தும் நடவடிக்கை உணவு தேடும் நடவடிக்கை போன்றவற்றில் ஈடுபடுகிறார்கள். இவ்வாறுதான் மட்டக்களப்பு காட்டினுள்ளும் போராளிகள் தாக்குதலை நிறுத்தி விட்டு தங்களை பலப்படுத்தும் நடவடிக்கையில் இறங்கியிருந்தார்கள். எனினும் அவ்வப்போது படையினருடன் எதிர்பாராத நிலையில் மோத வேண்டிய சந்தர்பங்களும் எழுந்தன இதனால் காட்டினுள் இருந்த போராளிகள் சில சிக்கல்களுக்கு முகாம் கொடுக்கிறார்கள். இந்த சிக்கல்களால் போராளிகள் சிலர் ஆயுதங்களை கைவிட்டுவிட்டு வீடுசெல்ல போவதாக கூறுகின்ற அளவிற்கு நிலைமை சென்றிருந்தது.

தொடரும்...

# நோய் எதிர்ப்புச் சக்தியும் மூலிகை உணவு சுக வாழ்வும்



**டாக்டர். வெற்றிவேல் சக்திவேல்**
B.S.M.S,P. G. Dip Pub Adm.,M.Sc.

*அரச பதிவு இலக்கம் - 10,294*
*மூலிகை சுக வாழ்வு நிறுவனம் கிளவ் வீதி,*
*தெல்லிப்பளை.*

சித்த மருத்துவத்தில் உணவே மருந்து என்பது முக்கியமானது. நோய் ஏற்படாது காக்கும் நோயில்லா நெறியிலும். நோயைக் குணப்படுத்து வதிலும் நோய் தீவிரத்தைத் தணிப்பதிலும். நோயினால் இழந்த ஊட்டச்சத்தை மீள கொடுப்பதிலும் மூலிகை உணவு முக்கிய இடத்தைப் பெறுகின்றது. மூலிகை உணவில் அதீத நோய் எதிர்ப்புச் சக்தியை அதிகரிக்கும் தன்மை (Immense Immunity Enhancing medicinal value of herb based food) காணப்படுகின்றது. தொன்மையானதும் முழுமையானதுமான சிகிச்சை (the oldest form of holistic treatment) முறைகளைக் கொண்ட சித்த மருத்துவத்தில் உணவாகப் பயன்படும் இஞ்சி (Ginger). உள்ளி (Garlic). வெங்காயம் (Onion). மஞ்சள் (Turmeric). மிளகு (Pepper). தேன் (Bees Honey) போன்ற பல உணவுப் பொருட்களில் நோய் எதிர்ப்புச் சக்தி மேம்படுத்தும் (Boost Immunity) தன்மை காணப்படுகின்றன.

உழுத்தங்களி. வெந்தயக்களி. ஓமக்களி என்ப னவற்றுடன் இஞ்சி. மஞ்சள். தேனீருடன் மிளகு. புதினா. இலவங்கப் பட்டை சேர்த்துக் குடிக்கலாம். சித்த மருத்துவத்தில் அறுசுவை உணவின் முக்கியத் துவம் வலியுறுத்தப்படுகின்றது. ஆறு சுவையுள்ள உணவுகளை உட்கொள்ளும் போது எல்லாப் போச ணைப் பொருட்களும் கிடைத்து சமநிலை உணவாக நோய் வராமல் தடுக்கும் உபாயமாகத் திகழ்கின்றது. பழஞ்சோறு புதியநோய்த் தொற்று ஏற்படுவதைத் தடுப்பதுடன் அதில் அமினோ அமிலங்கள் (Amino acids) நோய் எதிர்ப்புச் சக்தியை அதிகரிப்பதுடன் ஊட்டச்சத்து அகத்துறிஞ்சும் இயல்பு கிடைக்கும் தன்மை (Bio Availability) அதிகரிப்பதுடன் சுக்கு மல்லி சிற்றரத்தை தேனீரானது அழல் ஐயம் குறைப்பதுடன் நோய் எதிர்ப்புச் சக்தியையும் கொடுக்கும். உழுத்தங்கஞ்சி. மிளகுக் கஞ்சி. மஞ்சள். மிளகு. கல்லாக்காரம் சேர்ந்த பால். பூண்டுப் பால் போன்றவற்றை எடுக்கும் போது நோய் எதிர்ப்புச் சக்தி அதிகரிக்கும்.

மகாப் பெருந் தொற்றான கொரோனாவை வாதகபசுரம். விஷம சுரம். சன்னி பாத சுரத்துடனும் ஒப்பிட்டு ஆராய்வது அவசியம். இயற்கை வழியில் இயற்கை உணவுகளுடன் வாழுதல் (Natural way of living with natural food) மரபு சார் பாரம்பரிய இயற்கை உணவானது (Natural traditional diet) போசனை மிகுந்த உணவாகக் (Nutritious Diet) காணப்படுகின்றது. அதிகளவு வெந்நீர் குடிப்பது அவசியம்.

பழம். பச்சைக்காய்கறிகள். பச்சிலை மூலிகைகள். கீரை. பால். மோர். மிளகு ரசம். கொள்ளு ரசம். தூது வளை சூப். இஞ்சிச்சாறு. தேன். கம்பு. திணை. கேழ்வரகு. சாமை என்பவற்றின் கஞ்சி. பயறு. மிளகு. சீரகம். இஞ்சி சேர்த்து செய்யப்பட்ட. இயற்கை பசளை இட்டு வளர்க் கப்பட்ட பாரம்பரிய நெல் இனத்தால் செய் யப்பட்ட வெண் பொங்கல் பூண்டு. சீரகம். மிளகு. மஞ்சள் சேர்த்து செய்யப்பட்ட உணவுகள். அதிகளவு உயிர் சத்து ஊ கொண்ட நெல்லிக்கனி போன்றன உடலில் நோய் எதிர்ப்புச் சக்தியை அதிகரிப் பதுடன் நோய் வராமல் தடுக்கும் உணவுகளாகக் காணப்படுகின்றன. பூண்டு.சுக்கு. மிளகு. திப்பலி. மஞ்சள் என்பன முக்குற்ற திரிதோட சமநிலைப் பொருளாகக் காணப்படுகின்றன.

மூலிகைக் குடிநீர். மூலிகை சூப். மூலிகைக் கஞ்சி. மூலிகைக் தேநீர். ராகித் தோசை. ராகி இட்லி. முருங்கை இலை சூப். சிறுதானியக் கஞ்சி. அரிசிக் கஞ்சி. பருப்புக் கஞ்சி. சுக்குக் கஞ்சி. கொள்ளுக் கஞ்சி. கொள்ளு ரசம் என்பன நோய் எதிர்ப்புச் சக்தியை மேம்படுத்தும். நார்ப் பொருள் உள்ள உணவுகளில் நாகச் சத்து (Zinc) உண்டு. கரும்பச்சை மூலிகைகளில் பைற்றோ



நியூற்றியன்ட் (Phyto Nutrient) உண்டு. தயிரில் 30000 கிருமிகள் காணப்படுகின்றன. வெல்லம். ஏலப் பொடி சேர்த்து செய்யப்படும் பானகம் நன்று. உணவில் மஞ்சள் பொடி சேர்க்கும் போது பற்றீரியாவிற்கு எதிராக (Anti bacterial). வைரசிற்கு எதிராக (Antiviral). ஒட்சிநெதிரியாகத் (Antioxidant ) ஆகத் தொழிற்படும் சிறு பருப்பு. துவரம் பருப்பு.உழுந்து. பயறு. கடலை. சுண்டல். உழுந்து அப்பளம். உழுத்தம் கஞ்சி. ஓமக்கஞ்சி. தயிரினுள் கடுகு கருவேப்பிலை சேர்த்து தாளித்த உணவு. மிளகு. சீரகம். சேர்ந்த சூப். மாதுளம்சாறு. இஞ்சித் துவையல். இஞ்சி சம்பல். உப்பு சேர்ந்த எலுமிச்சை சாறு என்பன நன்று.

நெய் உணவில் சேர்க்கும் போது நோய் எதிர்ப்பு சக்தியைக் கூட்டும். இரசத்தில் மிளகு. மஞ்சள். சீரகம். கருவேப்பிலை சேர்வதால் நோய் எதிர்ப்பு சக்தியை கூட்டும். கடுகு. மிளகு. சீரகம். வெந்தயம் என்பவற்றில் நாகச் சத்து (zinc) இருப்பதால் அது நோய் எதிர்ப்புச் சக்தியைக் கூட்டும். தூய மல்லி. கருடன் சம்பா என்ற பாரம்பரிய நெல்லினங்கள் நோய் எதிர்ப்புச் சக்தியைக் கூட்டும். கொரோனா நோயாளிகளில் வழங்கப்படும் கபசுரக் குடிநீரில் இரும்புச் சத்து. செலெனியம். கல்சியம். நாகச் சத்து போன்ற ஊட்டச்சத்துக்கள் இருப்பதால் நோய் எதிர்ப்புச் சக்தியை மேம்படுத்தும்.

காலப்பழமையும் சாலப்பெருமையும் கொண்ட சித்த மருத்துவத்தை மருத்துவ ஞானம். மருத்துவப்புலமை. மருத்துவ அறிவு கொண்ட சமூகத்தில் இருக்கும் சான்றோர்களையும் முழுமையாக அரவணைத்துச் சமூக நோக்குடன் யாழ் பல்கலைக்கழக சித்தமருத்துவத்துறை செயற்பட்டால் தான் அதனது உன்னத நிலைக்கு இட்டுச் செல்ல முடியும் அல்லது சமூகத்திலிருந்து விலகிநிற்பதாக அமைந்து விடும்.

## வாழ்க்கை தத்துவங்கள்

**வெளியே மாளிகையாய் தோற்றமளிக்கும் எதுவும் உள்ளிருக்கும் விரிசல்களை எடுத்துரைக்காது.**

**கிடைக்காததை துரத்துவதும் கிடைத்ததை மதிக்காததும் தான் வாழ்க்கை.**

**அழகு உன்னை ஆளக் கூடாது.. அறிவுதான் ஆளவேண்டும்.. பிரிவு உன்னை ஆளக்கூடாது.. தெளிவு தான் உன்னை ஆளவேண்டும்.!**

**உழைத்துக் கொண்டே இருங்கள். அப்படி இருந்தால் உங்களுக்கு வாழ்வில் சலிப்பே வராது.**

**கீழ்நோக்கி உங்கள் பாதத்தைப் பார்க்காதீர்கள், மேல்நோக்கி நட்சத்திரங்களைப் பாருங்கள்.**

**இலட்சியம் என்று ஒன்று இல்லாவிட்டால் முயற்சி என்ற சொல்லுக்கு அர்த்தம் இல்லாமல் போய்விடும்!**

**பேசிக் கொண்டே இருக்காமல் செயலில் இறங்குவது அதை முடிப்பதற்கான வழி.**

**நாம் உலகிற்கு வந்ததே சேவை செய்வதற்காக தான் பிறரை அடக்கி ஆள்வதற்கு அன்று!**

**நோயை தொடக்கத்திலேயே குணப்படுத்துங்கள். கடனை சிறியதாக இருக்கும் போதே செலுத்திவிடுங்கள்.**

**உன்னால் முடியாது என்று பலர் கூறிய வார்த்தைகள் என்னை வெற்றியின் பக்கம் தள்ளியது**

**வாழ்க்கை எனும் பூந்தோப்பில் பூக்களும் முட்களும் உண்டு பல வலிகளைக் கடந்தாலே பூக்களை கொய்ய முடியும்**

**இரவுபோய் பகல் வருவதை போல் பிறப்புண்டேல் இறப்புண்டு இயன்றவரை உத்தமராய் இறுதிவரை வாழ்ந்திடுவோம்**

**வாழ்க்கை எனும் பெரும் போரில் நாம் அனைவரும் போர் வீரர்கள் பல காயங்களை அடைந்து வெற்றியை சுவைத்திடுவோம்**

**சூழ்நிலையால் மாறுகிறார்கள் கண்ணீரோடு மன்னிப்புக் கேட்பார்கள். சுயநலத்தால் மாறுகிறவர்கள்தான் கோபத்தோடு தர்க்கம் புரிவார்கள்..!**

**உனக்கு உதவியவரை ஒருபோதும் மறக்காதே உன் மேல் அன்புகொண்டவரை ஒருபோதும் வெறுக்காதே உன்னை நம்பியவரை ஒருபோதும் ஏமாற்றாதே.**

**நேரம் போய்கொண்டேதான் இருக்கும், எனவே நீ செய்யவேண்டியதை செய். அதுவும் இப்போதே செய் காத்திருக்காதே**

07ஆம் பக்க தொடர்ச்சி....

மேற்கத்தையநாடுகள்மற்றும்நீட்டோவின்பின்செயற்பாடுகளைகட்டுப்படுத்தும்அளவிற்குபோதிய அதிகாரம் புடினுக்கு வந்த பின்னர் மேற்கத்தைய நாடுகளுடன் ரகூஷ்யாவின் உறவின் தன்மையை உருவாக்குவதை நிர்ணயிக்க தொடங்கினார். வெளி விவகாரங்களில் மேற்கத்தைய நாடுகளுக்கு இடையே ஒருமித்த செயற்பாடு இல்லாத பலவீனத்தை தனக்கு சாதகமாக புடின் பயன்படுத்திக்கொண்டார். சிரியா விவகாரத்தில் புடின் தலையிட்டு அசாத் ஆதரவு படையினரை ஆதரித்தது அவருக்கு பல ஆதாயங்களை கொடுத்திருந்தது. மத்திய கிழக்கில் ஸ்திர தன்மையை உருவாக்குவதில் முக்கியத்துவமான எல்லைப்பகுதியை யாருமே முழுக்கட்டுப்பாட்டில் கொண்டுவர முடியாத நிலைமையை உருவாக்கிவிட்டது என்பது ரஷ்யாவிற்கு கிடைத்த முதலாவது ஆதாயம். புதிய ஆயுதங்கள் மற்றும் இராணுவ தந்திரோபாயங்களை பயன்படுத்தி பார்ப்பதற்கான வாய்ப்பை ரஷ்யாவிற்கு அளிக்கும் களமாக அது அமைந்து விட்டது என்பது அடுத்த ஆதாயம். வரலாற்று ரீதியில் ரஷ்யாவுடன் நட்புடன் உள்ளவர்களுக்கு பலமான தகவல்களை தெரிவிப்பதாகவும் சரியாவில் ரஷ்யா கொண்ட நடவடிக்கைகள் அமைந்திருந்தன. தன்னை நம்பி வந்த யாரையும் ரஷ்யா கைவிடாது என்ற உத்தரவாதத்தை வெளிப்படுத்தி சிரியா விவகாரத்தில் தனது கம்பீரத்தை தனது நட்பு சக்திகள் மத்தியில் உயர்த்திருந்தது ரஷ்யா. ரஷ்யாவை மறுபடியும் இப்படியான நிலைக்கு உயர்த்திய ஒரு தலைவர் என்ற பெருமை புடினையே சேரும். ரஷ்யாவின் அசைக்கமுடியாத தலைவர் என அந்த மக்களால் கொண்டாடப்படும் ஒரு தலைவராக வலம் வந்துகொண்டிருக்கின்றார் புடின். நவீனகால மன்னராக புடின் உருவாகி வருகின்றார் என விமர்சிக்கின்றார்கள் சிலர். ஒரு சர்வாதிகார தலைவரை ரஷ்யாவும் உலகமும் பெற்றுவிட்டது என்ற பலர் அச்சம் வெளியிடுகின்றார்கள் பல ஆய்வாளர்கள். ரஷ்யாவை பொறுத்தவரை இனிவரும் காலங்களில் தேர்தல் என்ற ஒன்று நடந்தாலும் நடக்காவிட்டாலும் ரஷ்யர்களின் தலைவர் புடின் மட்டுமே என கூறுகின்றார்கள் ரஷ்ய ஊடகவியலாளர்கள். விளாடிமிர் புடின் என்ற தலைவர் நெட்போலியன் போன்று அலெக்ஸ்சாண்டர் போன்று போற்றப்படுகின்ற ஒரு தலைவராக வரலாற்றில் வலம் வருவாரா? அல்லது ஹிட்லர் போன்று தூற்றப்படுகின்ற ஒரு தலைவராக வரலாற்றில் இடம்பிடிப்பாரா? ரஷ்ய -உக்ரைன் விவகாரத்தின் முடிவில் தான் இதற்கான பதில் அங்கு இருக்கின்றது.

## வீட்டு வேலைக்கு ஆட்கள் தேவை

**வவுனியா – கோயில் குளம் பகுதியில் அமைந்துள்ள வீடொன்றிற்கு பணிப்பெண் ஒருவர் உடன் தேவை.**

**தொ.பே :- 077 3142763**

## பணிப்பெண் தேவை

**வவுனியா நகரில் தாயை இழந்த 23வயதான பெண்ணுடன் சொந்தக்கடையை நடத்துவதற்கு உதவிபுரிய பணிப்பெண் ஒருவர் உடன் தேவை**

**தொ.பே :- 0704845366**

# மகளிர் பக்கம்

## முகத்தில் உள்ள கரும்புள்ளிகளை நீக்குவதற்கு!



முகத்தில் தோன்றும் கரும்புள்ளிகளை வீட்டில் இருக்கும் பொருட்கள் கொண்டே அகற்ற முடியும். பெரும்பாலும் கரும்புள்ளிகள் முகத்தில் அதிகப்படியான எண்ணெய் பசையாலும் அல்லது வறண்ட சருமத்தாலும் வரக்கூடும். இதை நீக்குவது சுலபமான காரியம் இல்லையென்றாலும் இது குறித்து கவலைக்கொள்ள வேண்டிய அவசியமும் இல்லை. வீட்டில் இருந்த படி கரும்புள்ளிகளை சரும பாதிப்பு இல்லாமல் நீக்க..

எலுமிச்சை சாறுடன், வெள்ளை சர்க்கரை சேர்த்து முகத்தில் தேய்த்து 2 - 3 நிமிடங்கள் மசாஜ் செய்யலாம்.
உருளைக்கிழங்கை பேஸ்ட் போல அறைத்து 15 நிமிடங்கள் வரை முகத்தில் வைத்திருந்து குளிர் நீரில் கழுவலாம்.
கொத்தமல்லி தழையுடன் மஞ்சள் தூள் சேர்த்து அறைத்து முகத்தில் தடவி சிறிது நேரத்திற்கு பின்னர் கழுவலாம்.
வெறும் எலுமிச்சை சாறினை எடுத்து பஞ்சில் நினைத்து முகத்தில் தேய்த்து 5 - 6 நிமிடங்கள் வைத்து பின்னர் கழுவலாம்.
தயிர் மற்றும் எலுமிச்சை சாறை கலந்து தடவி வரலாம்.
வெந்தயக்கீரையை அரைத்து முகத்தில் தடவி காயும் வரை அப்படியே விட்டு பின்னர் கழுவ வேண்டும்.

## உலர் திராட்சையை ஊற வைத்து சாப்பிட்டால் கிடைக்கும் நன்மைகள்

கருப்பு, பச்சை மற்றும் மஞ்சள் நிறங்களில் கிடைக்கும் உலர் திராட்சைகள் பல்வேறு அத்தியாவசிய சத்துகளையும், மருத்துவ குணங்களையும் கொண்டுள்ளது.

கருப்பு, பச்சை மற்றும் மஞ்சள் நிறங்களில் கிடைக்கும் உலர் திராட்சையில் விட்டமின் பி6, விட்டமின் சி, இரும்புச்சத்து, கரோட்டீன்கள், கல்சியம், மக்னீசியம் ஆகிய பல சத்துகள் உள்ளன.

உலர் திராட்சைகளை இரவு முழுவதும் தண்ணீரில் ஊறவைத்து காலையில் அதை சாப்பிட்டு, அந்த தண்ணீரையும் குடித்தால் பல நன்மைகளை தருகிறது.

உலர் திராட்சை தண்ணீரை குடிப்பதால் அசிடிட்டி பிரச்சினை உள்ளவர்கள் வயிற்றில் சுரக்கும் அமிலத்தின் அளவு ஒழுங்குப்படுத்தப்படும்.

உலர் திராட்சையில் உள்ள ஆண்டி ஆக்ஸிடண்ட்கள் புற்றுநோயை உண்டாக்கும் ஃப்ரீ ரேடிக்கல்களிலிருந்து நமது உடலை பாதுகாக்க உதவுகிறது.

உலர் திராட்சையில் இருக்கும் டார்டாரிக் அமிலம் அழற்சி எதிர்ப்பு பண்புகளை கொண்டுள்ளதால் பெருங்குடல் புற்றுநோய் ஏற்படுவதை தடுக்கிறது.

உலர் திராட்சையில் உள்ள செறிவான இரும்புச்சத்து, காப்பர் உள்ளிட்ட சத்துகள் ரத்தசோகை பிரச்சினையை குணப்படுதும் திறன் கொண்டுள்ளது.

உலர் திராட்சை தொடர்ந்து சாப்பிட்டு வந்தால் ரத்த அழுத்தம் மற்றும் சர்க்கரை அளவை சீராக்க உதவும். இதய நோய்கள் ஏற்படும் அபாயத்தை குறைக்கும்.

உலர் திராட்சையில் உள்ள ப்ரக்டோஸ் மற்றும் குளுக்கோஸ் கொழுப்பை குறைக்க உதவுவதால் உடல் எடையை குறைக்க விரும்புபவர்களுக்கு இது ஒரு அற்புதமான மருந்து.



## அதிக நேரம் கம்ப்யூட்டர் பயன்படுத்துவதால் ஏற்பட்டும் பாதிப்பு!

கம்ப்யூட்டர் என்பது தற்போது அனைத்து பணிகளிலும் இன்றியமையாத ஒன்றாகிவிட்ட நிலையில் அதிக நேரம் கம்ப்யூட்டர் பயன்படுத்துவதால் ஏற்படும் பாதிப்புகளை தெரிந்து வைத்துக் கொள்வது மிகவும் முக்கியமானதாக கருதப்படுகிறது. குறிப்பாக நான்கு மணி நேரத்துக்கு மேல் கம்ப்யூட்டரை தொடர்ந்து பயன்படுத்துவதால் கண் பாதிப்பு உள்ளிட்ட ஒரு சில பாதிப்புகள் வரும் என்று கூறப்படுகிறது. நான்கு மணி நேரத்திற்கு மேல் கணினி உபயோகிப்பவர்கள் 75% பேர் கண் நோயால் பாதிக்கப்படுகிறார்கள் என்றும் இவற்றை தவிர்க்க கம்ப்யூட்டர் மானிட்டரில் இருந்து 25 இன்ச் தொலைவில் இருந்து கம்ப்யூட்டரை இயக்க வேண்டும் என்றும் கூறப்படுகிறது.



மேலும் கம்ப்யூட்டர் பயன்படுத்துபவர்கள் தொடர்ச்சியாக பயன்படுத்தாமல் ஒரு மணி நேரம் அல்லது 2 மணி நேரத்துக்கு ஒருமுறை ஐந்து அல்லது பத்து நிமிடம் ஓய்வு எடுக்க வேண்டும் என்றும் கம்ப்யூட்டரை தொடர்ச்சியாக பார்ப்பதால் கண்கள் பாதிக்கப்படும் அபாயம் இருப்பதாகவும் குறிப்பிடுகிறது. கம்ப்யூட்டரை பயன்படுத்துவதை தவிர்க்க முடியாது என்றாலும் அதனை முறையாக பயன்படுத்தினால் நமது பணியையும் செய்து கொள்ளலாம் கண்களையும் பாதுகாத்துக் கொள்ளலாம் என்பது குறிப்பிடத்தக்கது

## தக்காளி சாப்பிட்டால் கண் பார்வை அதிகரிக்குமா?

தக்காளியில் விட்டமின் ஏ அதிகம் இருப்பதால் தக்காளி சாப்பிட்டால் கண்ணுக்கு மிகவும் நல்லது என கூறப்படுகிறது.



முக்கியமாக கண் பார்வை நல்ல ஒளியுடன் இருக்க வேண்டுமென்றால் விட்டமின் ஏ அதிகம் உள்ள தக்காளியை சாப்பிட வேண்டும் என்றும் இதனால் கண் பார்வையை மேம்படுத்தி மாலைக்கண் உள்ளிட்ட நோய்கள் வராமல் தடுக்கலாம் என்றும் மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர்

மேலும் தினசரி தக்காளி பழத்தை சாப்பிடுவதன் மூலம் பல வியாதிகளை தடுக்கலாம் என்றும் அதுமட்டுமின்றி தக்காளி தினந்தோறும் உணவில் சேர்த்துக் கொள்வதால் உடலுக்கு மேலும் வலு சேர்க்கும் என்றும் கூறப்படுகிறது

எலும்புகள் வலுவாக இருப்பதற்கு தக்காளியை தினமும் சாப்பிட வேண்டும் என்றும் மூட்டு வலி எலும்பு தேய்மானம் போன்ற பிரச்சனைகள் வராமல் தக்காளி சாப்பிடுவதால் தடுக்கப்படும் என்றும் கூறப்படுகிறது.

தக்காளியில் உள்ள விட்டமின் ஏ புற்று நோய்க்கு எதிராக போராடும் தன்மை கொண்டது என்றும் உடல் எடையை குறைக்கும் நீர்ச்சத்துள்ள காய்கறி தக்காளி என்றும் கூறப்படுகிறது.



## பச்சை வாழைப்பழத்தை சர்க்கரை நோயாளிகள் சாப்பிடலாமா?

சர்க்கரை நோயாளிகள் பொதுவாக வாழைப்பழம் சாப்பிடக்கூடாது என்று கூறப்பட்டாலும் பச்சை வாழைப்பழத்தை சாப்பிடலாம் என முன்னோர்கள் கூறியுள்ளனர்.

பச்சை வாழைப்பழத்தில் பல்வேறு சத்துக்கள் இருக்கும் நிலையில் பச்சை வாழைப்பழம் வயிற்று பாதையில் உள்ள குடல் புண்களை ஆற்றும் தன்மை கொண்டது என்றும் அது மட்டுமின்றி உடலில் சுரக்கும் அமிலங்கள் காரணமாக ஏற்படும் குடல் புண் அல்சர் ஆகியவற்றை தீர்த்து வைக்கும் என்று கூறப்படுகிறது

சர்க்கரை நோயாளிகள் தாராளமாக பச்சை வாழைப்பழங்களை சாப்பிடலாம் என்றும் அதில் ஸ்டார்ச் அதிகமாக உள்ளதால் இரத்தத்தில் உள்ள சர்க்கரை அளவை கட்டுப்படுத்தும் என்றும் கூறப்படுகிறது

அதேபோல் உடல் எடையை குறைக்க விரும்புபவர்கள் பச்சை வாழைப்பழத்தை சாப்பிடலாம் என்றும் அதில் அதிக ஆற்றல் இருப்பதாகவும் கூறப்படுகிறது



# அரச பயங்கரவாதத்தினால் திட்டமிட்டு படுகொலை செய்யப்பட்ட பிரபாகரனின் மகன் பாலச்சந்திரன்

கடந்தவார தொடர்ச்சி...

2009 மே 19ம் திகதி காலை 7.30 மணியளவில் சரணடைந்த பாலச்சந்திரனிடம் அவரது தந்தையின் இருப்பிடம் குறித்து விசாரிக்கப்பட்ட பின்னர் உயர்மட்ட உத்தரவின் பேரில் அவர் கொல்லப்பட்டதாக சில மாதங்களுக்கு முன்னர் ஊடகங்களில் செய்திகள் வெளியாகின. தற்போது வெளியாகியுள்ள ஒளிப்படங்களில் பதிவான நேரத்தின் அடிப்படையில் பாலச்சந்திரன் 2009 மே 19ம் திகதி நண்பகல் 12 மணிக்கு முன்னதாகவே கொல்லப்பட்டுள்ளார் என்று கருதப்படுகிறது. ஆனால் போர் மே 19ம் திகதி காலை 10 மணியுடன் போர் முடிந்து விடுகிறது. அதற்கு சில மணிநேரங்களுக்கு முன்னதாகவே பிரபாகரனும் மோதலில் இறந்த பிரபாகரனின் உடலும் கண்டுபிடிக்கப்பட்டது. அதாவது பிரபாகரன் இறந்தது உறுதிப்படுத்தப்பட்ட பின்னர் அல்லது சமநேரத்தில் பாலச்சந்திரன் கொல்லப்பட்டுள்ளதாக புதிய ஒளிப்பட ஆதாரங்கள் மூலம் கருதமுடிகிறது.

விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனின் 12 வயதான இளைய மகன் பாலச்சந்திரன் உயிருடன் பிடித்து கொல்லப்பட்டதற்கான புதிய ஆதாரங்களை வெளியிட்டுள்ளார் சனல் 4 தொலைக்காட்சியில் "இலங்கையின் கொலைக்களங்கள்" ஆவணப்படங்களை தயாரித்து வெளியிட்டு வரும் இயக்குனர் கல்லும் மக்ரே. தமக்கு கிடைத்த நான்கு ஒளிப்படங்களில் மூன்றை அவர் கடந்த 19ம் திகதி லண்டனில் இருந்த வெளியாகும் "தி இன்டிபென்டென்ட்" மற்றும் சென்னையைத் தலைமையகமாகக் கொண்டு வெளியாகும் "தி இந்து" ஆகிய நாளிதழ்களில் வெளியிட்டுள்ளார். முதலிரு படங்களிலும் சுற்றிவர மண்மூடைகள் அடுக்கப்பட்டுள்ள பதுங்கு குழி ஒன்றினுள் பிரபாகரனின் மகன் பாலச்சந்திரன் மரப்பலகை ஆசனம் ஒன்றின் மீது அமர்ந்துள்ள காட்சிகள் பதிவாகியுள்ளன. அதில் ஒன்றில் கையில் தின்பண்டப் பொதி ஒன்றுடன் மிரட்சியுடன் வெறித்துப் பார்க்கும் காட்சியும் அவருக்கு முன்னே நிற்கும் இலங்கை இராணுவத்தைச் சேர்ந்த ஒருவரின் சீருடையின் ஒரு பகுதியும் அவரது ஒரு கையும் பதிவாகியுள்ளன.

கிட்டத்தட்ட அதையொத்த சூழலில் உள்ள அடுத்த படத்தில் பாலச்சந்திரன் தனது கையில் இருந்த தின்பண்டப் பொதியில் இருந்து எதையோ எடுத்து வாயில் போட்டுக் கொள்ளும் காட்சி உள்ளது. இந்த இரண்டு படங்களிலும் அவரது உடலில் மேலாடை ஏதும் இல்லை. காற்சட்டை மட்டும் அணிந்துள்ளார். தோளில் ஒரு சாரம் போர்த்தியுள்ளார்.

அடுத்த படம். பாலச்சந்திரன் நெஞ்சில். நான்கு துப்பாக்கிக் குண்டுகள் துளைத்த நிலையில் இறந்து கிடக்கும் காட்சியைக் கொண்டது. கரடுமுரடான வெறும் நிலத்தில் கிடக்கும் அவரது உடலைச் சுற்றி இரண்டு இராணுவச் சப்பாத்து அணிந்தவர்களினதும் சாதாரண செருப்பு அணிந்த இருவரினதும் பாதங்களின் சிலபகுதி தென்படுகின்றன. இன்னொருவரின் நிழல் பாலச்சந்திரனின் உடல் மீது தெரிகிறது. ஆனால். நான்கு குண்டுகள் துளைத்த காயங்கள் அவரது மார்பில் உள்ள போதிலும். தரையில் இரத்தம் உறைந்த தடயங்கள் எதையும் காணமுடியவில்லை. எனவே. அவர் வேறு இடத்தில் சுடப்பட்டு அந்த இடத்தில் போடப்பட்ட பின்னர் அந்தப் படம் எடுக்கப்பட்டிருக்கலாம். என்று கருதப்படுகிறது. நான்காவது படம். பாலச்சந்திரனைச் சுற்றி அவரது மெய்க்காவலர்கள் என்று சந்தேகிக்கப்படும் ஐந்து பேர் கைகள் கட்டப்பட்ட நிலையில் இறந்து கிடக்கும் காட்சியைக் கொண்டது என்று கல்லும் மக்ரே கூறியுள்ள போதிலும் அதை அவர் வெளியிடவில்லை. அவரது அடுத்த ஆவணப்படமான போர் தவிர்ப்பு வலயத்தின் சுவாரசியம் போய் விடும் என்பதால் எல்லாப் படங்களையும் வெளியிடாமல் தவிர்த்திருக்கலாம். இந்தப் படங்கள் எல்லாமே ஒரே கமெராவில் எடுக்கப்பட்டவை என்றும். சுமார் இரண்டு மணிநேரத்துக்கு இடையில். எடுக்கப்பட்டவை என்றும் கல்லும் மக்ரே கூறியுள்ளார். இந்த ஒளிப்படங்களின் சுயதரவுகளின் படி. 2009 மே 19ம் திகதி காலை 10.14 மணிக்கு முதலாவது படம் எடுக்கப்பட்டுள்ளது. கடைசிப்படம். அதாவது பாலச்சந்திரன் இறந்து கிடக்கும் படம். 12.01மணிக்கு எடுக்கப்பட்டுள்ளது. எனவே. பாலச்சந்திரன் மே 19ம் நாள் நண்பகலுக்கு சற்று முன்னதாகவே கொலை செய்யப்பட்டுள்ளார் என்று கருதப்படுகிறது. முன்னதாக. சில மாதங்களுக்கு முன்னர் பாலச்சந்திரன் 2009 மே 19ம் திகதி காலை 7.30 மணியளவில் பிரிகேடியர் கமால் குணரத்னவின் 53 வது டிவிசனிடம் சரணடைந்ததாக ஒரு தகவல் வெளியாகியிருந்தது குறிப்பிடத்தக்கது. ஆக. அந்தத் தகவல் மற்றும் தற்போது வெளியாகியுள்ள ஒளிப்படங்கள் என்பன. பாலச்சந்திரன் உயிருடன் பிடிக்கப்பட்டு கொல்லப்பட்டுள்ளதை தெளிவாக காட்டும் வகையில் அமைந்துள்ளன. இந்தப் படங்கள் உலகெங்கும் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளன.

12 வயது சிறுவன் ஒருவன் உயிருடன் பிடிக்கப்பட்டு கொல்லப்பட்டுள்ளதான கருத்து கடுமையான தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது என்பதை மறுக்க முடியாது. ஆனால். இவை எதையுமே இலங்கை இராணுவம் ஏற்றுக் கொள்ளவில்லை. இவை பொய்யான காட்சிகள் என்றும். புனையப்பட்டவை என்றும் அரசாங்கமும் இராணுவமும் திரும்பத் திரும்பக் கூறி வருகின்றன. முன்னதாக. கடந்த ஆண்டு மார்ச் மாதம் பாலச்சந்திரன் சுட்டுக் கொல்லப்பட்டுக் கிடக்கும் காட்சி அடங்கிய ஒளிப்படம் வெளியான போதும். அதற்கும் தமக்கும் தொடர்பில்லை என்றே இராணுவம் கூறியிருந்தது. இருதரப்பு மோதலுக்குள் அகப்பட்டு பாலச்சந்திரன் இறந்திருக்கலாம் என்றும் இராணுவத்தரப்பில் கூறப்பட்டது.

இப்போதும் அதையே இராணுவம் கூறுகிறது. இருதரப்பு மோதலுக்குள் அகப்பட்டு பாலச்சந்திரன் இறந்திருந்தால். அவரது சடலம் இராணுவத்தரப்பிடம் சிக்கியிருக்க வேண்டும். அப்படி அவரது சடலம் தம்மிடம் சிக்கியதாக இராணுவத்தரப்பு முன்னொரு போதும் கூறவில்லை.

பாலச்சந்திரன் பற்றியோ. அல்லது பிரபாகரனின் மனைவி மதிவதனி. மகள் துவாரகா பற்றியோ இலங்கை இராணுவம் எதையும் அறிந்திருக்கவில்லை அவர்கள் எங்கிருந்தனர். என்ன நடந்தது என்றும் தெரியாது என முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவும் கூறியுள்ளார். 2009 மே 19ம் திகதி காலை 10 மணியளவில். போரின் முடிவில். மீட்கப்பட்ட 400 புலிகளின் சடலங்களில் பிரபாகரன் மற்றும் அவரது மூத்த மகன் சார்ள்ஸ் அன்ரனி ஆகியோரின் சடலங்கள் மட்டும் தான் இருந்தன என்றும். அவர் கூறியுள்ளார். இருதரப்பு மோதலில் பாலச்சந்திரன் இறந்திருக்கலாம் என்ற இராணுவத் தரப்பின் கருத்தை உறுதிப்படுத்தும் எந்த வலுவான ஆதாரமும் இல்லை. அதேவேளை. இந்த ஒளிப்படங்கள் பதிவான நேரங்களில். எந்தவொரு இருதரப்பு மோதலும் இடம்பெற்றிருக்கவும் இல்லை. 2009 மே 19 காலை 10 மணியுடன் இறுதிப்போர் முடிவுக்கு வந்து விட்டதாக. இராணுவத்தளபதி சரத் பொன்சேகா கூறியுள்ளார். அந்த நேரத்தில் அதுபற்றிய அதிகாரபூர்வ அறிவிப்பும் அரசாங்கத்தினால் வெளியிடப்பட்டிருந்தது. ஆனால் பாலச்சந்திரன் அதற்குப் பின்னரும். அதாவது 2009 மே 19ம் திகதி காலை 10.14 மணிக்குப் பின்னரும் உயிருடன் இருந்துள்ளதாக புதிய ஒளிப்பட ஆதாரம் கூறுகிறது.

எனவே அந்த நேரத்தில். இருதரப்பு மோதலில் அவர் அகப்பட்டிருக்க வாய்ப்பில்லை. அப்படி இருதரப்பு மோதலில் அகப்பட்டு இறந்திருந்தால் கூட அவரது சடலத்தை அப்போதே இராணுவம் வெளிப்படுத்தியிருக்க வேண்டும். இவை எதுவும் நடந்திருக்கவில்லை. சிறுவன் என்பதால். இரகசியமாக இந்த விவகாரத்தை மறைக்கும் முயற்சிகளே நடந்துள்ளதாகத் தெரிகிறது. பாலச்சந்திரன் பற்றிய இந்த ஒளிப்படங்கள் ஒரே கமெராவினால் எடுக்கப்பட்டவை என்பதையும் எந்த மாற்றங்களும் செய்யப்படாதவை என்பதையும் சனல் 4 தொலைக்காட்சி உறுதிப்படுத்துகிறது. ஆனால் இலங்கை இராணுவம் அதற்கு முரணாக. இவை பொய்யானவை புனையப்பட்டவை என்கிறது. பிரித்தானியாவில். பிரபலமான ஒரு தொலைக்காட்சி சேவை பொய்யான காட்சிகளை முன்வைத்து ஒரு நிகழ்ச்சியை தயாரித்து தனது புகழைக் கெடுத்துக் கொள்ள விரும்பாது என்பதையும் கவனிக்க வேண்டும். சனல் 4 தொலைக்காட்சி ஏற்கனவே இரண்டு போர்க்குற்ற ஆவணப்படங்களை வெளியிட்ட போதும் இலங்கை இராணுவம் அவற்றையும் பொய் என்றே மறுத்தது. இலங்கை இராணுவத்தின் தொழில்நுட்பப் பிரிவு நிபுணர்கள் மேற்கொண்ட ஆய்வில் அவை பொய்யானவை என்று நிரூபிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டது. பின்னர் நல்லிணக்க ஆணைக்குழுவின் முன்பாகவும் இராணுவத்தரப்பில் அதுபோன்றே சாட்சியமளிக்கப்பட்டது. ஆனால். நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கை. சனல் 4 போர்க்குற்றக்காட்சி பொய்யானது என்று உறுதிப்படுத்தவில்லை. அதன் உண்மைத்தன்மை குறித்து விசாரிக்குமாறே பரிந்துரைத்தது.

இன்று வரை "இலங்கையின் கொலைக்களங்கள்" என்ற சனல் 4 ஆவணப்படத்தின் உண்மைத்தன்மை குறித்த விசாரணைகளை இலங்கை இராணுவம் முடிக்கவில்லை. இதற்கென நியமிக்கப்பட்ட மேஜர் ஜெனரல் கிரிசாந்த டி சில்வா தலைமையிலான இராணுவ நீதிமன்றம். அண்மையில் வெளியிட்ட முதலாவது கட்ட அறிக்கையில். பொதுமக்கள் மீது தாம் ஷெல் தாக்குதல்களை நடத்தவில்லை என்று மட்டும் கூறியுள்ளது. அடுத்த கட்டமாக. சனல் 4 ஆவணப்படம் குறித்து விசாரிக்கப்படுவதாகவும் அது தெரிவித்துள்ளது. ஏற்கனவே. இலங்கை இராணுவத்தினால். பொய்யானது என்று கண்டறியப்பட்டதாக கூறப்பட்ட வீடியோ காட்சியின் உண்மைத்தன்மையை உறுதிப்படுத்துவதை. இராணுவம் இன்னமும் இழுத்தடித்து வருகிறது. இத்தகைய பின்னணியில் தான் பாலச்சந்திரன் பற்றிய ஒளிப்படங்களையும் பொய்யானவை என்று இராணுவத் தரப்பு கூறியுள்ளது.

ஆயிரக்கணக்கான இராணுவத்தினர் ஈடுபடுத்தப்பட்ட ஒரு போர் நடவடிக்கையில். பாலச்சந்திரன் உயிருடன் பிடிக்கப்படவோ. தம்மால் கொல்லப்படவோ இல்லை என்று எந்தவொரு இராணுவத்தினாலும். குறுகிய நேரத்தில் முடிவெடுத்து மறுக்க முடியாது. முதலில் அந்தப் படத்தை ஆராய்ந்து அதன் உண்மைத்தன்மையை ஆராய்ந்து தான் முடிவு செய்ய வேண்டும். அப்படி எந்த ஆய்வும் மேற்கொள்ளப்படாமலேயே இலங்கை இராணுவமும் அரசதரப்பும் இவற்றை நிராகரித்துள்ளன.

ஆப்கானிஸ்தானில். தலிபான்களின் இறந்த உடல் மீது அமெரிக்கப் படையினர் சிலர் சிறுநீர் கழிக்கும் காட்சி உள்ளிட்ட - அமெரிக்கப் படைகளின் போர்க்குற்றங்கள் குறித்த வீடியோ மற்றும் ஒளிப்படங்கள் அண்மையில் வெளியான போது. உடனடியாக அமெரிக்கா அதை நிராகரிக்கவில்லை. இதுபற்றி விசாரித்து விட்டுப் பதிலளிக்கிறோம் என்று தான் அமெரிக்க இராஜாங்கச் செயலராக இருந்த ஹிலாரி கிளின்டன் கூறினாரே தவிர. அப்படியொன்றும் நடக்கவில்லை என்றோ. அது புனையப்பட்ட காட்சி என்றோ எடுத்த எடுப்பிலேயே பதிலளிக்கவில்லை. பின்னர் நடத்தப்பட்ட விசாரணைகளில் அமெரிக்கப் படைகள் அவ்வாறு மீறலில் ஈடுபட்டது உண்மையே என்று அறிவிக்கப்பட்டது. ஆனால். அத்தகைய அணுகுமுறையை பாலச்சந்திரன் விவகாரத்தில் இலங்கை அரசாங்கமோ அரசபடைகளோ கடைப்பிடிக்கவில்லை.

இலங்கைப் படையினர் 100 வீதம் ஒழுக்கமானவர்கள் என்றும் போர் விதிகளை அவர்கள் ஒருபோதும் மீறவில்லை என்றும். போர்க்களத்தையே எட்டிப்பார்க்காத அரசதரப்பினர் பலரும் கூறுகின்றனர். ஆயிரக்கணக்கான படையினர் ஈடுபடுத்தப்படும் போரில். விதிமீறல்கள் இடம்பெறுவது சாதாரணமானது. இத்தகைய மீறல் குற்றச்சாட்டில் இருந்து தப்பிக் கொள்ள முடியாத எந்த இராணுவமும் உலகில் இல்லை. ஆனால். குற்றச்சாட்டுகளை எதிர்கொண்டு. அவை உண்மையென்றால் அதன் மீது நடவடிக்கை எடுக்கப்படுவதும் பொய் என்றால் அதை நிரூபிப்பதும் தான். இராணுவத்தின் பெயரைக் காப்பாற்றும். இலங்கை இராணுவத்துக்கு இப்போது உள்ள சவால் தாம் பாலச்சந்திரன் கொலை உள்ளிட்ட எந்தவொரு போர்க்குற்றங்களிலும் ஈடுபடவில்லை என்பதை நிரூபித்துக் கொள்வது தான். அதனை ஒருபோதும் இலங்கை இராணுவத்தின் சுய விசாரணைகள் மூலம் செய்து கொள்ள முடியாது. ஏனென்றால். அதற்கான நம்பகத்தன்மையை இராணுவம் தக்கவைக்கத் தவறிவிட்டது.

குற்றச்சாட்டுகள் எழுகின்ற போது. அதுபற்றி விசாரித்து விட்டு பதிலளிக்காமல். எடுத்த எடுப்பிலேயெ மறுக்கின்ற போக்கின் மூலம் இலங்கை இராணுவம் தமது நம்பகத்தன்மையை சர்வதேச அளவில் இழந்து விட்டது. தற்போது வெளியாகியுள்ள பாலச்சந்திரன் பற்றிய ஒளிபடங்கள் உலகெங்கும் பெரும் பரப்பை ஏற்படுத்தியுள்ள போதிலும். இவற்றின் உண்மைதன்மை மீது கேள்வி எழுப்பியுள்ள ஒரே ஒருவர் இந்திய வெளிவிவகார அமைச்சர் சல்மான் குர்ஷித் மட்டும் தான்.

வேறு எவருமே இதன் மீது கேள்வி எழுப்பாத நிலையில். இவை பொய்யான படங்கள் என்று சர்வதேச அளவில் நிரூபிப்பதன் மூலம் மட்டுமே இலங்கை இராணுவத்தினால் இந்தக் குற்றச்சாட்டில் இருந்து விடுபட முடியும். வெறும் நிராகரிப்புகளும் அறிக்கைகளும் ஒருபோதும். இலங்கை அரசையோ இராணுவத்தையோ காப்பாற்ற உதவப்போவதில்லை.

அரசாங்கத்தை பொறுத்தவரையில் தற்பொழுதும் ஆவணப்படங்களையும் ஆதாரங்களையும் இது தொடர்பில் வெளியிடுபவர்களை கைது செய்து சிறையில் அடைக்கின்ற ஒரு நடவடிக்கைகளையும் அல்லது அவர்களது குடும்பத்தை நாடு கடத்தும் நடவடிக்கையிலுமே அரச தரப்பு களமிறங்கியிருக்கின்றது. அண்மையில் பிரபாகரன் உயிருடன் இருக்கின்றா? என்ற விவகாரத்தின் தொடர்பிலும் அரசாங்கம் நடவடிக்கை எடுக்க தவறிவல்லை அவரது முகநூல்கள் முடக்கப்பட்டு சமூக சலைவத்தளங்களில் வரும் செய்திகள் கண்காணிக்கப்பட்டு வருகின்ற நிலையே உருவாக்கப்பட்டுள்ளது. அண்மையில் பிரபாகரன் அவர்களை அரச தரப்பு சுட்டுக்கொன்றால் பகீரங்கமாக அவரது உடலை மக்கள் முன் வைத்திருக்க முடியும்.

ஏனென்றால் ஏனைய தலைவர்கள் இறப்பு தொடர்பில் தகவலை வெளியிட்ட அரச தரப்பு இதனை ஏன் மூடிமறைக்கின்றது என்ற சந்தேகமும் இன்னமும் மக்கள் மத்தியில் எழத்தான் செய்கின்றது. போர் வீரர்கள் போராட்ட களத்தில் மடிவது என்பது சாதாரண விடயம் தான். ஆனால் சரணடைந்த அப்பாவி பொதுமக்களையும் சிறுவர்களையும் சுட்டுக்கொல்வது என்பது ஏற்புடைய விடயமல்ல அரசாங்கம் தான் செய்த போர் குற்றங்களில் இருந்தும் படுகொலைகளில் இருந்தும் தப்பிக்க எடுக்கும் முயற்சிகளில் தமிழ் தரப்புக்கள் ஆதரவளித்துக்கொண்டிருப்பது கவலைக்குரிய விடயமாகும். இவர்கள் களை பிடுங்கப்பட வேண்டும். தமிழினம் சுதந்திரமாக வாழும் நிலைமை இந்த நாட்டில் ஏற்படுத்த வேண்டும். இலங்கை அரசை பொறுத்த வரை வடகிழக்கிணைந்த தமிழர் தாயகத்தை இனி ஒருபோதும் வழங்க முடியாது என்ற நிலைப்பாட்டிலேயே பயணித்துக்கொண்டிருக்கின்றது.

எனவே அவர்களுக்கு தேவை ஈழப்போரின் இறுதிக்கட்டத்தில் இனப்படுகொலை இடம்பெறவில்லை என்பதும் ஆக போர் குற்றங்களே இடம்பெற்றது அதற்கான உள்ளுர் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு அதனூடாக தீர்வுகளை பெற்றுக்கொள்ள முடியும் என்பதே. தமிழினத்திற்காக சர்வதேச ரீதியாக குரல் கொடுக்கின்ற மனித உரிமை அமைப்புக்கள் இதனை கவனத்தில் கொண்டு அடுத்த கட்ட நகர்வுகளை மேற்கொள்ள வேண்டும் என்பதே இக்கட்டுரையின் பிரதான நோக்கம்.

**துரியோதரன்**



# 2090 ஆம் ஆண்டு இஸ்லாமிய நாடாகும் இலங்கை

இலங்கையில் இடம்பெற்ற சில சம்பவங்களை பார்ப்போமாக இருந்தால் 1976 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 16 ஆம் திகதி முதல் 18 ஆம் திகதி வரை அணிசேரா நாடுகளின் மாநாடு இலங்கையில் நடைபெற்ற பொழுது இலங்கைக்கு விஜயம் மேற்கொண்ட லிபியா அதிபர் கேணல் கடாபி இலங்கையில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் உரை நிகழ்த்திய பொழுது கூறிய ஒரு கருத்து பின் நாட்களில் பெரும் சர்ச்சைக்குள் உள்ளாகியிருந்தது. முஸ்லிம் சமூகத்தினர் மத்தியில் பிரத்தியேகமாக நடைபெற்ற ஒரு நிகழ்வில் பேசிய கேணல் கடாபி தனது பேரப்பிள்ளை இலங்கைக்கு விஜயம் மேற்கொள்ளுகின்ற காலம் வருகின்ற பொழுது இலங்கை ஒரு முஸ்லிம் நாடாக இருக்க வேண்டும். அதற்கு அனைவரும் திடசங்கற்பம் பூன வேண்டும் என்று கடாபி விடுத்திருந்த கோரிக்கை பலத்த சர்ச்சையை ஏற்படுத்தியிருந்தது. இலங்கையை ஒரு முஸ்லிம் நாடாக மாற்றுவதை நோக்காக கொண்டு ஈராக்கின் முன்னாள் அதிபர் சதாமூசைன் ஏராளமான நிதி உதவிகளை வழங்கியதாகவும் சதாமூசைனின் பெயரிலேயே இலங்கையில் பல கிராமங்கள் உருவாக்கப்பட்டுள்ளதாகவும் இலங்கை நாடாளுமன்ற உறுப்பினரும் முன்னாள் அமைச்சரும் கல்விமானுமான பாட்டாளி சம்பிக்கரணவக்க குற்றம் சுமத்தியிருந்தார். 2013 ஆம் ஆண்டு அவர் எழுதி வெளியிட்ட அல்ஜிகாத் அண்ட் அல்-கைதா என்ற ஆய்வு நூலிலேயே அவர் இந்த தகவல்களை வெளியிட்டிருந்தார். 2090 ஆம் ஆண்டு இலங்கை ஒரு இஸ்லாமிய நாடாக மாறுவதற்கான சாத்தியப்பாட்டையும் சம்பிகரணவக்க தனது அந்த புத்தகத்தில் எதிர்வு கூறியிருந்தார்.

2003 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 29 ஆம் திகதி இலங்கையின் கிழக்கு மாகாணத்தின் அம்பாறை மாவட்டத்தில் உள்ள ஒலிவில் என்ற பிரதேசத்தில் திரண்டிருந்த ஏராளமான முஸ்லிம்கள் முஸ்லிம் தேசியப்கோட்பாட்டு பிரகடனம் ஒன்றை மேற்கொண்டிருந்தார்கள். இலங்கையில் வாழும் முஸ்லிம்கள் தாம் பெரும்பான்மையாக வாழும் வடக்கு கிழக்கு பிரதேசங்களில் ஒரு சுயநிர்ணய உரிமையுடன் கூடிய சுயாட்சியை உருவாக்கிக்கொள்ளும் வகையில் அந்த பிரகடனம் அமைந்திருந்தது. 2007 ஆம் ஆண்டு யூலை மாதம் 17 ஆம் திகதி அல்யசீரா சர்வதேச ஊடகம் இலங்கையின் கிழக்கு மாகாணத்தில் செயற்பட்டு வருகின்ற இஸ்லாமிய ஜிகாத் ஆயுத அமைப்பு பற்றிய தகவல்களை ஆதாரத்துடன் வெளியிட்டிருந்தது. அந்த விடயம் தொடர்பாக அல்யசீரா வெளியிட்டிருந்த ஒளி ஆவணத்தில் 1990 ஆம் ஆண்டின் பிற்பகுதிகளில் இருந்து இலங்கையின் மட்டக்களப்பு மாவட்டத்தின் காத்தான்குடி ஏறாவூர் மற்றும் ஓட்டைமாவடி பிரதேசங்களின் இஸ்லாமிய ஆயுத குழுக்கள் பல செயற்பட்டுவருவதாக அந்த ஜிகாத் உறுப்பினர்களின் செவ்விகள் பல்வேறு முஸ்லிம் தலைவர்களின் கருத்துக்களுடன் செய்தி வெளியிட்டிருந்தது.

2009 ஆம் ஆண்டு யூலை மாதம் 5ஆம் திகதி இலங்கையின் மட்டக்களப்பு காத்தான்குடி பள்ளிவாசலில் வைத்து இஸ்லாமிய ஜிகாத் ஆயுத குழுக்கள் வசம் இருந்த ஒருதொகுதி ஆயுதங்கள் சிறிலங்கா காவல் துறையினரிடம் ஒப்படைக்கப்பட்டன. ஏகே - 47, பி - 56 போன்ற இயந்திர துப்பாக்கிகள் உட்பட ஏராளமான நவீன போர் கருவிகள் காத்தான்குடி பள்ளிவாசலில் வைத்து இஸ்லாமிய ஆயுத குழுக்களால் ஒப்படைக்கப்பட்டிருந்தன. 2019 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 21 ஆம் திகதி இலங்கையின் பல்வேறு இடங்களில் சமகாலத்தில் சக்திவாய்ந்த குண்டுகள் வெடித்தன. ஈஸ்டர் தினத்திலன்று கிறிஸ்தவ தேவாலயங்களிலும், நட்சத்திர விடுதிகளிலும் இஸ்லாமிய தீவிரவாதிகளால் நடாத்தப்பட்ட அந்த தாக்குதலில் 300 பேர் வரையில் கொல்லப்பட்டு 500 க்கும் அதிகமானவர்கள் காயமடைந்திருந்தார்கள். குண்டு வெடிப்பை தொடர்ந்து சிறிலங்கா காவல்துறையினர் மேற்கொண்ட விசாரணைகளின் போது இலங்கையின் பல்வேறு பாகங்களில் ஏராளமான முஸ்லிம் இளைஞர்கள் ஆயுத பயிற்சி பெற்றிருந்தமை பற்றியும் இலங்கையின் சில பாகங்களில் ஷரியான் சட்டத்தை பிரகடனப்படுத்தி ஒரு இஸ்லாமிய ராஜ்யத்தை நிறுவும் நோக்கத்தில் அவர்கள் செயற்பட்டுவந்ததும் கண்டுபிடிக்கப்பட்டது. இலங்கையின் கிழக்கு மாகாணத்தின் காத்தான்குடி, பாலமுனை போன்ற இடங்களில் அவர்களுக்கு ஆயுத பயிற்சி முகாம்கள் நிரந்தரமாக இருந்ததும் கண்டுபிடிக்கப்பட்டது. எந்தவொரு விடயத்தையும் சம்பவங்களின் ஊடாகவும் செய்திகளின் ஊடாகவும் அணுகுகின்றபொழுது தான் அந்த விடயத்தின் உண்மையான பரிமானத்தை சரியாக புரிந்துகொள்ளக்கூடியதாக இருக்கும். அந்த அடிப்படையில் தான் இலங்கையில் நடைபெற்ற சில சம்பவங்களையும் அந்த சம்பவங்கள் தொடர்பாக வெளிவந்திருந்த செய்திகளில் ஒருசிலவற்றையும் இங்கு பார்த்திருந்தோம். மேற்குறிப்பிடப்பட்ட இவ்வாறான சம்பவங்களை தொடர்ந்து இலங்கையில் அவர்கள் அமைக்க இருக்கின்ற இஸ்லாமிய இராஜ்யத்திற்கு அவர்கள் சூட்டியுள்ள பெயர் கிழக்கிஸ்தான். இலங்கையின் கிழக்கு பிரதேசத்தில் வாழ்ந்துவருகின்ற பெரும்பான்மையான தமிழ் மக்களுக்கும் கிட்டத்தட்ட அனைத்து முஸ்லிம் மக்களுக்கும் சிறிலங்காவின் சில அரசியல்வாதிகளுக்கும் தெரிந்த கிழக்கிஸ்தான் என்ற இந்த பெயர் சர்வதேச அளவில் குறிப்பாக இந்திய வட்டத்தில் அதிகம் தெரியாமல் பிரஸ்தாபிக்கப்படாமலேயே இருந்து வருகின்றது. 2000 ஆம் ஆண்டு காலப்பகுதி முதலாக இலங்கையின் கிழக்கு மாகாணத்தை கிழக்கிஸ்தான் என்ற இஸ்லாமிய ராஜ்யமாக்கும் காரியங்கள் ஆரம்பத்தில் இரகசியமாகவும் காலப்போக்கில் பகீரங்கமாகவும் மேற்கொள்ளப்பட்டு வந்தது. அந்த பிரதேச வாழ் மக்களுக்கு நன்றாகவே தெரியும் அரபு நாடுகளில் இருந்து பெருந்தொகை பணத்தை பெற்று ஷரியா சட்டங்களுடன் கூடிய இராஜ்யத்தை கட்டியமைக்கும் பணிகள் மிக கட்சிதமாக மேற்கொள்ளப்பட்டு வந்தன. ஆயுத ரீதியிலான பயிற்சிகள் வழங்கல்கள் மதப்போதனைகள் போன்ற ஏற்பாடுகள் ஒருபக்கம் மேற்கொள்ளப்பட்டுக்கொண்டிருந்த சமகாலத்தில் கிழக்கிஸ்தானுக்கான நிலங்களை கொள்முதல் செய்து கைமுகப்படுத்தும் காரியங்களும் கட்சிதமாக மேற்கொள்ளப்பட்டுவந்தன. நில வங்கிகள் ஊடாக பலஸ்தீனர்களின் நிலங்களை சியோன் அமைப்பு எப்படி வாங்கிக்குவித்து பின்னர் சந்தர்ப்பம் ஏற்பட்ட பொழுது அந்த நிலங்களில் யூதர்களை குடியேற்றி இஸ்ரேல் என்ற பெயரில் அதனை ஒரு தேசமாக்க மாற்றியதோ கிட்டத்தட்ட அதே பாணியிலான ஒரு நகர்வு தான் இலங்கையின் கிழக்கில் சில முஸ்லிம் அமைப்புக்களால் மேற்கொள்ளப்பட்டுவருகின்றது. நூற்றுக்கணக்கில் ஆயிரக்கணக்கில் நிலங்கள் வாங்கிக் குவிக்கப்பட்டு வருகின்றன. அதுவும் தமிழர்களின் பாரம்பரிய தாய் நிலங்கள் முஸ்லிம்களால் கையகப்படுத்தப்பட்டு வருகின்றன. யுத்தத்தில் உயிரிழந்த தமிழர்கள், காணாமல் போனவர்கள் வேறு இடங்களிற்கு புலம்பெயர்ந்தவர்கள் போன்றோரின் காணிகள் திட்டமிட்ட முறையில் கள்ள உறுதிகள் தயாரிக்கப்பட்டு முஸ்லிம் அமைப்புக்கள் அல்லது முஸ்லிம் விதானிகளின் பெயர்களுக்கு மாற்றப்பட்டு வருகின்றன. விடுதலைப்புலிகளுடன் தொடர்புடையவர்கள் அல்லது தீவிர தமிழ் தேசிய அரசியலில் ஈடுபட்டவர்கள் மிரட்டப்பட்டு குறைந்த விலைக்கு அவரது நிலங்கள் கொள்முதல் செய்யப்பட்டுவருகின்றன.

உதாரணத்திற்கு இலங்கையின் முன்னாள் அமைச்சர் கே. டப்பிள்யு. தேவநாயகம் அவர்களின் 58 ஆம் இலக்க உறுதியிலிருந்த பாரம்பரிய காணி மற்றும் காணி சீர்திருத்த ஆணைக்குழுவிடம் ஒப்படைக்கப்பட்ட நூற்றுக்கணக்கான ஏக்கர் காணி பொய்யான உறுதிகள் தயாரிக்கப்பட்டு கையகப்படுத்தப்பட்டு முஸ்லிம்களின் பெயர்களுக்கு மாற்றப்பட்டுள்ளன. காணி சீர்திருத்த ஆணைக்குழுவிடம் ஒப்படைக்கப்பட்ட காணிகளுள் 150 ஏக்கர் காணி கொழும்பை அடிப்படையாகக் கொண்ட முஸ்லிம் நிறுவனமான ஈ.எம்.ஏ லங்கா பிரைவட் லிமிட்டட் என்ற நிறுவனத்தின் பெயரிற்கு மாற்றப்பட்டுள்ளது. இது ஒரு சிறிய உதாரணம் மட்டும் தான் இது போன்ற நூற்றுக்கணக்கான சம்பவங்கள் இலங்கையின் கிழக்கில் இடம்பெற்றிருக்கின்றன. அதுவும் காணி விடயத்தில் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற நுட்பமான திட்டமிடல்களை கொஞ்சம் ஆழமாக சென்று பார்க்கின்றபொழுது அதிர்ச்சிகரமான பல உண்மைகளை அறியக்கூடியதாக இருக்கின்றது. இலங்கையின் கிழக்கு மாகாணத்தில் மேற்கொள்ளப்பட்ட நில ஆக்கிரமிப்பு அல்லது நிலங்கள் கையகப்படுத்தப்பட்ட சீர்திட்டத்தை பொருத்தவரை அவை கிழக்கிஸ்தான் என்ற இஸ்லாமிய ராஜ்யத்தை அடிப்படையாகக்கொண்ட ஒரு நடவடிக்கையாகவே மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. ஒரு இராஜ்யம் அமைவதாக இருந்தால் அதற்காக தடையில்லாத விநியோகங்கள் அவசியம். கிழக்கிஸ்தானுக்கான கடல்வழி விநியோகத்தை அடிப்படையாக வைத்தும் ஏராளமான நிலங்கள் கையகப்படுத்தப்பட்டுவருவதையும் கொஞ்சம் உள்ளே சென்று ஆராயும் பொழுது அறிந்துகொள்ளக்கூடியதாக இருக்கின்றது. இதற்காக மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள முக்கியமான ஐந்து முனைகள் இந்த தரப்புக்களால் குறிவைக்கப்பட்டுள்ளன. முதலாவது சல்லித்தீவு வாகரைக்கிடையிலான முனை. இரண்டாவது கதிரவெளி வாகரைக்கு இடையிலான முனை. மூன்றாவது சல்லித்தீவு புன்னைக்குடா ஏறாவூர் இந்த கிராமங்களை அடிப்படையாகக்கொண்ட முனை. நான்காவது நாசிவன் தீவு வாழைச்சேனை இடையிலான முனை. ஐந்தாவது காயங்கேணி முருங்கைக்கல்தீவு இடையிலான முனை. இந்த முனைகளை அடிப்படையாக வைத்து ஏராளமான காணிகள் கையகப்படுத்தப்பட்டு வருகின்றன. புன்னைக்குடா என்ற பிரதேசத்தில் உள்ள 137 ஏக்கர் தமிழ் மக்களின் பாரம்பரிய காணிகள் கிரா பவுண்டேசன் மற்றும் ரோயல் பார்க் பவுண்டேசன் போன்ற முஸ்லிம்களின் நிறுவனங்களினால் அந்த பிரதேசவாழ் தமிழ் மக்களின் கடுமையான எதிர்ப்புக்கு மத்தியில் சுபீகரிக்கப்பட்டன. அந்த இரண்டு நிறுவனங்களும் கிழக்கின் ஒரு பிரபல முஸ்லிம் அரசியல்வாதி ஒருவருக்கு அல்லது அவரது விதானைக்கு சொந்தமான நிறுவனங்கள் என்பது குறிப்பிடப்பட்டுள்ளது. 610 ஏழைகளுக்கு வீடுகள் கட்டி அவர்களுக்கான வாழ்வாதாரத்தை அமைத்துக்கொடுப்பதற்காக என கூறியே அந்த காணிகள் கையகப்படுத்தப்பட்டதுடன் ஒரு அரபு சேக்கிடமிருந்து அதற்காக 220 கோடி ரூபாய் பணம் பெறப்பட்டதாகவும் கூறப்படுகின்றது. அரபு சேக்கிடமிருந்து பணம் பெற்று அங்கு குடியேற்றப்பட்ட 610 குடும்பங்களும் முஸ்லிம் குடும்பங்கள் என்பது குறிப்பிடத்தக்கது. கடலை அண்டிய ஒரு முனைப் பிரதேசம் அதுவும் தமிழ் மக்களின் ஒரு பாரம்பரிய நிலம் ஒரு நொடிப்பொழுதில் சட்ட ரீதியாக எப்படி இஸ்லாமிய பிரதேசமாக மாறியது என்பது மட்டுமல்ல கட்டமைக்கப்பட இருக்கின்ற கிழக்கிஸ்தானின் ஒரு முக்கிய கடல்வழி போக்குவரத்திற்கான தளமாகவும் அது எப்படி மாற்றப்பட்டது என்பதற்கும் இது ஒரு சிறந்த உதாரணம். அது போன்ற பல உதாரணம் கிழக்கு மாகாணம் முழுவதும் இருக்கின்றன.

இலங்கையின் கிழக்கில் உருவாக்கப்பட்டு வருகின்ற கிழக்கிஸ்தான் தொடர்பான விடயங்கள் பற்றி காத்தான்குடி ஏறாவூர் ஓட்டைமாவடி போன்ற முஸ்லிம் பிரதேசங்களில் உள்ள சில சமூகத் தலைவர்கள் ஊடகவியலாளர்களிடம் பேசிய பொழுது அது பாரிய திட்டமிடலின் அடிப்படையில் நிறுவன மயப்படுத்தப்பட்டு மேற்கொள்ளப்பட்டு வருகின்ற நடவடிக்கை என்றும் இரண்டு முஸ்லிம் அரசியல்வாதிகள் அந்த விடயத்தில் நேரடியாக சம்பந்தப்பட்டு வருவதாகவும் ஏராளமான அடிப்படைவாத அமைப்புக்கள் இந்த கிழக்கிஸ்தான் விடயத்தில் சம்பந்தப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்கள். அதே வேளை பெரும்பான்மையான முஸ்லிம் மக்களுக்கு இந்த கிழக்கிஸ்தான் விடயத்தில் உடன்பாடு இல்லை என்பதுடன் சமூக முரண்பாடுகளை ஏற்படுத்திவிடக்கூடிய இந்த காரியம் தொடர்பில் அச்சம் சாதாரண முஸ்லிம் மக்கள் மத்தியில் காணப்படுவதாகவும் அவர்கள் தெரிவித்தார்கள். பாகிஸ்தான் புலனாய்வுப் பிரிவு இந்த விடயத்தில் நேரடியாக களத்தில் நின்று செயற்பட்டு வருவதாகவும் முஸ்லிம் மக்களுக்கான பாதுகாப்பு நிவாரணம். வாழ்வாதாரம் என்ற அடிப்படையில் ஏராளமான அரபு நாடுகள் வகை தொகையற்ற நிதிகளை பங்களிப்பு செய்துவருவதாகவும் அவர்கள் தெரிவித்தார்கள். இந்த இடத்தில் இந்த நிகழ்ச்சியை பார்த்துக்கொண்டிருக்கின்ற உங்களில் பலரிடம் ஒரு கேள்வி எழலாம். சிறிலங்கா அரசாங்கம் குறிப்பாக சிறிலங்கா புலனாய்வுப் பிரிவினர் இந்த விடயத்தில் எப்படியான அணுகுமுறைகளை மேற்கொண்டு வருகின்றனர் என்ற கேள்வி உங்கள் மனங்களில் எழலாம். இஸ்லாமிய தீவிரவாதத்தின் விளைவை ஒருதடவை ருசித்துப் பார்த்துவிட்ட சிங்கள தலைமைகள் கிழக்கில் ஒரு இஸ்லாமிய இராஜ்யம் உருவாகுவதை எவ்வாறு பார்க்கின்றனர் என்றும் நீங்கள் கேள்வி எழுப்பலாம். பதில் மிகவும் இலகுவானது சிறிலங்கா அரசாங்கம் இது போன்ற காரியங்களை ஒருவகையில் அனுமதிக்கின்றது என்று தான் கூறவேண்டியிருக்கின்றது. சிறிலங்கா அரசாங்கத்தை பொறுத்தவரையில் தமிழ் மக்களின் தமிழ் தேசிய கோட்பாடு என்பது தமிழர்களின் பாரம்பரிய நிலப் பிரதேசங்களை அவர்களது தாயக பூமியை அடிப்படையாகக் கொண்டு தான் உறுதி பெறுகின்றது. தமிழ் மக்களின் பாரம்பரிய நிலங்களை எந்த அளவிற்கு கூறுபோட முடியுமோ அந்த அளவிற்கு தமிழ் மக்களின் தேசியக் கோட்பாட்டை வலுவிழக்கச் செய்யமுடியும். சில முஸ்லிம் குழுக்களால் அந்த காரியம் நடைபெறுகின்றது என்றால் நிச்சயமாக அதனை ஊக்குவிக்கவே செய்யும் சிறிலங்கா அரசாங்கம் அதனைத் தான் செய்து வருகின்றது சிறிலங்காவின் அரச தலைமைகளும் அதனது கட்டமைப்புக்களும்.

2007 ஆம் ஆண்டு மட்டக்களப்பு மாவட்டத்தின் தீவிரமானசெயற்பாடுகளில்ஈடுபட்டுக்கொண்டிருந்த முஸ்லிம் ஆயுத அமைப்புக்களில் இருந்து 100 முஸ்லிம் இளைஞர்கள் விடுதலைப்புலிகளுக்கு எதிராக செயற்படுவதற்கு என்று கூறப்பட்டு சிறிலங்கா இராணுவத்தின் புலனாய்வு பிரிவில் இணைத்துக்கொள்ளப்பட்டார்கள். அந்த நேரத்தில் ஏறாவூரில் தீவிரமாக செயற்பட்டுக்கொண்டிருந்த இஸ்லாமிக் சென்டர் என்ற அமைப்பில் இருந்து 17 இளைஞர்களும் காத்தான்குடியில் பொலிஸ்வாகிஸ் என்ற ஒரு தலைமையில் செயற்பட்டுக்கொண்டிருந்த நல்லாட்சிக்கான மக்கள் இயக்கம் என்ற இஸ்லாமிய அடிப்படைவாத ஆயுதக்குழுவில் இருந்து 17 இளைஞர்களும் ஓட்டைமாவடியில் செயற்பட்டுவந்ததும் இஸ்லாமிய ஷரியா சட்டத்தை அந்த கிராமத்தில் தீவிரமாக நடைமுறைப்படுத்திவந்ததுமான ஸ்காப் என்ற ஆயுதக் குழுவில் இருந்து 64 இளைஞர்களும் ஒரு குழுவாக சிறிலங்கா புலனாய்வு குழுவினரால் இணைக்கப்பட்டார்கள்.

சிவில் பாதுகாப்பு உத்தியோகஸ்தர்கள் என்ற பெயரில் அவர்களுக்கான மாதாந்த அரச ஊதியம் வழங்கப்பட்டு அவர்கள் செயற்பட்டிருந்தாலும் அந்த இளைஞர்களுக்கான ஆயுத பயிற்சிகள் உட்பட அனைத்துவிதமான புலனாய்வு பயிற்சிகளும் வழங்கப்பட்டு ஒரு இஸ்லாமிய குழுவாக செயற்படும் வகையில் நடவடிக்கையில் ஈடுபடுத்தப்பட்டார்கள். மட்டக்களப்பு மாவட்டம் முழுவதும் ஆயுதங்கள் சகிதமாக சிறிலங்கா புலனாய்வு பிரிவினரின் பூரண அனுசரணை வழிநடாத்தலுடன் செயற்பட்ட 100 இளைஞர்களை கொண்ட குழு இஸ்லாமிய ஷரியா சட்டத்தை முஸ்லிம்கள் பெரும்பான்மையாக வாழும் பிரதேசங்களில் நடைமுறைப்படுத்திவந்ததுடன் இஸ்லாமிய ஷரியா சட்டத்தை மீறியவர்களுக்கு எதிராக மரண தண்டனை உட்பட பலவிதமான தண்டனைகளை விதித்துவந்ததும் குறிப்பிடத்தக்கது. தேவையான பொழுது தமிழ் முஸ்லிம் இரு முரண்பாடுகளை உருவாக்குவதற்கும் தேவையில்லாத நேரத்தில் அந்த முறுகல்களை சுமூகமாக்குவதற்கும் குறிப்பிட்ட அந்த ஆயுத குழுவினரையே சிறிலங்கா புலனாய்வு பிரிவினர் பயன்படுத்தி வந்தார்கள். 2019 ஆம் ஆண்டு ஏப்ரலில் இலங்கையில் குண்டுத்தாக்குதல்களை நிகழ்த்துவதற்கும் அந்த குண்டுத்தாக்குதல்களின் அடிப்படையில் ஆட்சியை கைப்பற்றுவதற்கும் சிறிலங்கா புலனாய்வு பிரிவினரால் இயக்கப்பட்ட 100 பேர் கொண்ட அந்த முஸ்லிம் அடிப்படைவாத குழு பயன்படுத்தப்பட்டிருக்கலாம் என்ற குற்றச்சாட்டு அந்த பிராந்தியத்தில் வாழும் சாதாரண முஸ்லிம் மக்கள் மத்தியில் இருந்து வருகின்றது. ஆகவே சிறிலங்கா அரசாங்கத்தை பொறுத்தவரையிலோ அல்லது சிறிலங்கா படைத்துறையை பொருத்தவரையிலோ கிழக்கிஸ்தான் பற்றி பெரிதாக அவர்கள் அலட்டிக்கொள்ளப்போவதில்லை. அதனால் அப் பிரதேசத்தில் வாழுகின்ற தமிழ் முஸ்லிம் மக்கள் தான் இந்த விடயத்தில் அதிகம் விழிப்புணர்வுடன் இருக்க வேண்டும் செயலாற்ற வேண்டும். குறிப்பாக இந்தியா இந்த விடயத்தில் இன்னும் எச்சரிக்கையாக இருப்பது அவசியம். இந்தியாவிற்கு தெற்கில் ஒரு இஸ்லாமிய இராஜ்யம் உருவாகுவது என்பதும் அந்த இராஜ்யம் பாகிஸ்தான் உழவாளிகளால் உருவாக்கப்படுவது என்பதும் இந்தியாவிற்கு எத்தனை அச்சுறுத்தலான விடயம் என்பதை நாம் சொல்லித்தான் இந்தியாவிற்கு தெரிய வேண்டும் என்பதில்லை.

# உலக வலம்

## மூன்றாவது குழந்தைக்கு தந்தையானார் மார்க் ஜீக்கர்பெர்க்



பேஸ்புக்கின் இணை நிறுவனரும், மெட்டாவின் தலைமை நிறைவேற்று அதிகாரியுமான மார்க் ஜீக்கர்பெர்க் மற்றும் அவரது மனைவி பிரிசில்லா சான் ஆகியோர் தங்களது மூன்றாவது குழந்தையை வரவேற்றனர்.

இந்த குழந்தைக்கு ஆரேலியா (Aurelia) சான் ஜீக்கர்பெர்க் என பெயர் சூட்டியுள்ளனர். ஏற்கனவே மாக்சிமா (2015), ஆகஸ்ட் (2017) என இரண்டு பெண் குழந்தைகள் இந்த தம்பதியருக்கு உள்ளனர். கடந்த 2003 முதல் டேட் செய்து வந்த மார்க் ஸூகர்பெர்க் மற்றும் சான் இணையர் 2012-ல் மண வாழ்க்கையில் இணைந்தனர். பிரிசில்லா சான், மார்க் ஸூகர்பெர்க் உடன் ஹார்வேர்டு பல்கலைக்கழகத்தில் படித்த சக மாணவியாவார்.

## காதலுக்காக தம்பியை கொன்று 20 துண்டுகளாக வெட்டிய அக்கா!

கர்நாடக மாநிலம், விஜயபுரா மாவட்டம் சிந்திகி தாலுகாவுக்கு பட்ட தேவனாங்காவ் கிராமத்தை சேர்ந்தவர் சித்தப்பா பூசாரி. இந்த கிராமம் கிருஷ்ணகிரி மாவட்டம் ஓசூர் அருகே உள்ளது.

சித்தப்பா பூசாரி மகள் பாக்கிய ஸ்ரீ (31). இவரும் அதே பகுதியில் உள்ள சாசாபாலு கிராமத்தை சேர்ந்த சங்கரப்பா தளவார் (32) என்பவரும் கல்லூரியில் படித்த போதிருந்தே காதலித்து வந்தனர். பல ஆண்டுகளாக காதலித்து வந்த இவர்கள் கடந்த 2015ம் ஆண்டு திருமணம் செய்ய முடிவெடுத்த போது, சாதியை காரணம் காட்டி அவர்களது பெற்றோர் கடும் எதிர்ப்பு தெரிவித்ததால் இருவரும் பிரிந்து விட்டனர்.

சங்கரப்பா தளவார் திருமணமாகி 6 மாதத்தில் மனைவியை பிரிந்த பின்னர் தனது கிராமத்திலிருந்து கர்நாடக மாநில எல்லையான ஜிகினி தொழிற்பேட்டையில் வேலைக்கு சேர்ந்தார். அப்பகுதியில் தனி அறை எடுத்து தங்கிய அவர், தனது முன்னாள் காதலி பாக்கியஸ்ரீயுடன் அவ்வப்போது போனில் பேசி வந்துள்ளார்.

அவர்களுக்குள் இருந்த நெருக்கம் காரணமாக ஜிகினிக்கு வருமாறு பாக்கியஸ்ரீயை சங்கரப்பா அழைத்துள்ளார். அதன்பேரில் அவரும் ஜிகினிக்கு வந்துள்ளார். இருவரும் ஒரே அறையில் குடும்பம் நடத்தி வந்துள்ளனர். மேலும், ஜிகினி தொழிற்பேட்டையில் வெவ்வேறு தொழிற்சாலைகளில் வேலை செய்தும் வந்துள்ளனர்.

இந்நிலையில் பாக்கியஸ்ரீயின் தம்பி லிங்கராஜ் (22), கடந்த 2015ம் ஆண்டு தனது அக்காவை தேடி ஜிகினி பகுதிக்கு வந்துள்ளார். ஜிகினியில் பாக்கியஸ்ரீ, அவரது முன்னாள் காதலன் சங்கரப்பாவுடன் சேர்ந்து வாழ்ந்து வருவதைக்கண்டு அதிர்ச்சியடைந்தார். சங்கரப்பாவிற்கு திருமணம் ஆகிவிட்டதால், அவருடன் இருக்க வேண்டாம் என பாக்யஸ்ரீயை பலமுறை லிங்கராஜ் எச்சரித்துள்ளார்.

ஆனாலும் பாக்கியஸ்ரீ அதனை கேட்கவில்லை. இதனையடுத்து 3 பேரும் ஒரே அறையில் தங்கி இருந்த போது பாக்கியஸ்ரீயுடன் அடிக்கடி லிங்கராஜ் சண்டை போட்டு வந்துள்ளார். தங்களது உறவுக்கு லிங்கராஜ் இடையூறாக இருப்பதாக கருதிய பாக்கியஸ்ரீ, சங்கரப்பாவுடன் சேர்ந்து லிங்கராஜை அடித்து கொலை செய்து, அவரது உடலை 20 துண்டுகளாக வெட்டி 3 பையில் அடைத்து அதனை ஜிகினி மற்றும் அருகில் உள்ள மஞ்சன ஹள்ளி ஏரியில் இருவரும் வீசியுள்ளனர்.

பின்னர் பாக்கியஸ்ரீயும், சங்கரப்பாவும் ஜிகினியில் இருந்து தப்பி, மகாராஷ்டிரா மாநிலம், நாசிக்பகுதியில் கடந்த 8 ஆண்டுகளாக தலைமறைவாக வாழ்க்கை நடத்தி வந்தனர். இந்த கொலை சம்பவம் குறித்து ஜிகினி போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வந்தனர். இந்நிலையில், அவர்கள் இருவரும் மகாராஷ்டிரா மாநிலத்தில் இருப்பதை அறிந்து பொலீசார் அங்கு சென்று பாக்கியஸ்ரீ (39), மற்றும் சங்கரப்பா (40) ஆகிய இருவரையும் கைது செய்தனர். பின்னர், நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி அவர்களை சிறையில் அடைத்தனர்.




## பிரான்ஸில் ஆர்ப்பட்டங்களால் 441 பொலிஸார் காயம், 457 பேர் கைது

பிரான்ஸில் ஓய்வூதிய மறுசீரமைப்புத் திட்டத்துக்கு எதிரான ஆர்ப்பாட்டங்களின் போது நடந்த வன்முறைகளை அடுத்து, 457 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் எனவும் 441 பொலிஸார் காயமடைந்துள்ளனர் எனவும் உள்துறை அமைச்சர் ஜெரால்ட் டர்மனின் தெரிவித்துள்ளார். அதிக எண்ணிக்கையான ஆர்ப்பாட்டங்கள் நடந்துள்ளன. அவற்றில் சில வன்முறையானவையாக மாறின" என அமைச்சர் டர்மனின் கூறியுள்ளார்.

பிரான்ஸ் முழுவதும் ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்ட ஒரு மில்லியனுக்கும் அதிகமானோருக்கு பாதுகாப்பு அளித்தமைக்காக பொலிஸாரை அவர் பாராட்டினார். பாரிஸ் நகரில் நடத்தப்பட்ட ஆர்ப்பாட்டங்களின் போது, தலையை மூடிய ஆடை மற்றும் முகக்கவசம் அணிந்த இளைஞர்கள் சிலர் ஜன்னல்களை அடித்து உடைத்ததுடன், குப்பைகளுக்கு தீவைத்துச் சென்றனர். ஜனாதிபதி இமானுவெல் மெக்ரோனின் ஓய்வூதிய மறுசீரமைப்புத் திட்டம் பாராளுமன்றத்தில் கடந்த வாரம் அங்கீகரிக்கப்பட்டது. இந்த சட்டமூலத்தை வாபஸ் பெறுமாறு ஆர்ப்பாட்டக்காரர்கள் கோருகின்றனர். ஆனால், வன்முறைகள் காரணமாக சட்டத்தை வாபஸ் பெற வேண்டிய தேவையில்லை என உள்துறை அமைச்சர் ஜெரால்ட் டர்மனின் கூறியுள்ளார்.

## 19,000 ஊழியர்களை பணிநீக்கம் செய்யும் அசெஞ்சர்

பொருளாதார மந்தநிலை, வருவாய் பற்றாக்குறை, பணவீக்கம் போன்ற காரணங்களால் பேஸ்புக், டுவிட்டர், அமேசன் உள்ளிட்ட முன்னணி நிறுவனங்கள் ஊழியர்களை குறைத்துள்ளன.





அந்த வகையில், பொருளாதார சூழல் காரணமாக முன்னணி தகவல் தொழில்நுட்ப நிறுவனமான அசெஞ்சர் நிறுவனமும் ஆட்குறைப்புநடவடிக்கையில் இறங்கியுள்ளது.

அசெஞ்சர் நிறுவனம், அதன் ஆண்டு வருவாய் மற்றும் இலாபம் குறைவாக இருக்கும் என கணித்துள்ள நிலையில், மொத்த ஊழியர்களில் 2.5 சதவீதம், அதாவது சுமார் 19,000 ஊழியர்களை குறைக்க உள்ளதாக அறிவித்துள்ளது

அசெஞ்சர் நிறுவனத்தின் ஆண்டு வருவாய் வளர்ச்சியானது, 8 சதவீதம் முதல் 10 சதவீதம் வரை இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. இது முந்தைய கணிப்புடன் ஒப்பிடுகையில் சற்று குறைவு. 8 சதவீதம் முதல் 11 சதவீதம் வரை வருவாய் வளர்ச்சி இருக்கும் என முன்னர் கணிக்கப்பட்டது. இதேபோல் பங்கு ஆதாயம், ஒரு பங்கிற்கு 11.20 டொலர் முதல் 11.52 டொலர் வரை இருக்கும் என கணிக்கப்பட்ட நிலையில், தற்போது 10.84 டொலர் முதல் 11.06 டொலர் வரை இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

# விளையாட்டு

## கியூப் விளையாட்டில் புதிய வேக சாதனை படைத்த 9 வயது சிறுவன்



சீனாவை சேர்ந்த இளம் வீரரான யிஹெங் (9), கியூப் விளையாட்டில் புதிய வேக சாதனையை படைத்துள்ளார். முன்னதாக, 4.86 வினாடிகளில் கூட்டாக சாதனை படைத்த க்யூபிங் வீரர்களான மேக்ஸ் பார்க் (அமெரிக்கா) மற்றும் டைமன் கொலாசின்ஸ்கி (போலந்து) ஆகியோரை யிஹெங் வீழ்த்தியுள்ளார். கின்னஸ் உலக சாதனையின்படி, ஸ்பீட் க்யூபிங் பிராடிஜி யிஹெங் வாங் (சீனா) 3x3x3 என்கிற சுழலும் புதிர் கன சதுரத்தை 4.69 வினாடிகளில் முடித்து வேகமான சராசரி நேரத்திற்கான சாதனையை முறியடித்துள்ளார்.

மலேசியாவின் கோலாலம்பூரில் மார்ச் 12 ஆம் திகதி அன்று நடந்த யோங் ஜீன் கேஎல் ஸ்பீட் க்யூபிங் 2023 நிகழ்ச்சியில், அரையிறுதி போட்டியில் யிஹெங் தனது சாதனை நேரத்தை பதிவு செய்தார். இப்போட்டியில், ஐந்து முறை முடிவுகளின் கணக்கில், யிஹெங் 4.35, 3.90, 4.41, 5.31 மற்றும் 6.16 வினாடிகளில் போட்டியைப் பதிவு செய்தார். உலக கியூப் சங்கம் விதிகளின்படி, சராசரியைக் கணக்கிடும்போது வேகமான மற்றும் மெதுவான நேரங்கள் தள்ளுபடி செய்யப்படுவது குறிப்பிடத்தக்கது.

## சர்வதேச கிரிக்கெட்டில் ஆசியாவில் 10,000 ஓட்டங்களை கடந்த வீரர்




இந்தியா, அவுஸ்திரேலியா அணிகளுக்கு இடையிலான 3வது ஒருநாள் போட்டி சென்னை சேப்பாக்கம் மைதானத்தில் நடைபெற்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலியா 269 ஓட்டங்களுக்கு ஆல் அவுட்டானது. அதிகபட்சமாக மிட்செல் மார்ஷ் 47 ஓட்டங்கள் எடுத்தார்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய இந்தியா 248 ஓட்டங்களுக்கு ஆல் அவுட்டாகியது. விராட் கோலி அரை சதமடித்து 54 ஓட்டங்களில் அவுட்டானார். இதை அடுத்து, அவுஸ்திரேலியா அணி 21 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வென்று, தொடரையும் 2 – 1 என்ற கணக்கில் கைப்பற்றி அசத்தியது.

இந்தப் போட்டியில், ரோகித் சர்மா 17 பந்துகளில் 2 சிக்சர், 2 பவுண்டரி உள்பட 30 ஓட்டங்கள் எடுத்து ஆட்டமிழந்தார். இதன்மூலம் சர்வதேச கிரிக்கெட்டில் ஆசியாவில் 10,000 ஓட்டங்களை கடந்த 8 வது இந்தியர் என்ற பெருமையை ரோகித் சர்மா பெற்றார்.



















# வேலை வாய்ப்பு

**வவுனியாவில் இயங்கி வரும்**
**தினப்புயல் வாராந்த பத்திரிகைக்கு**
**உதவி ஆசிரியர் மற்றும்**
**பக்க வடிவமைப்பாளர்கள் தேவை**

**விண்ணப்பிப்போர் பின்வரும் மின்னஞ்சல் முகவரிக்கு சுயவிபரக்கோவையுடன்**
**பதவியையும் குறிப்பிட்டு அனுப்பவும்**
thinappuyal2014@gmail.com

**மேலதிக தொடர்புகளுக்கு : 077 6906182 , 077 8195947**

இப்பத்திரிகை இலக்கம் 154ஏ, தேக்கவத்தையில் அமைந்துள்ள தென்றல் அச்சகத்தில் அச்சிட்டு, தினப்புயல் நிறுவனத்தால் 26.03.2023 அன்று வெளியிடப்பட்டது.